ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகள்



ஆக்கியோன்
பேரறிஞர்
"ஆழ்கடலான்"
முருகவே பரமநாதன்

உ

சிவமயம்

ஈழத்துச்சித்தர்
குடைச்சுவாமிகள்

ஆழ்கடலான்
(முருகவே பரமநாதன்)

இந்து சமயப் பேரவை
ஒன்ராறியோ
கனடா

நூல்: ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமிகள்

ஆசிரியர்: ஆழ்கடலான்
(முருகவே பரமநாதன்)

முதற்பதிப்பு: செப்டம்பர் 2000

எழுத்தமைப்பு: திரு. மா. கனகசபாபதி

அச்சுப்பதிப்பு: விவேகா அச்சகம்

வெளியீடு: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

பதிப்புரிமை: ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

TITLE: EALATHU SITHTHAR
KUDAI SWAMIGAL

AUTHOR: ALKADALAN
(MURUGAVE PARAMANATHAN)
"BAARATHI KUDISAI",
VALLIPURAM
PULOLY, SRI LANKA

FIRST EDITON: SEPTEMBER 2000

LANGUAGE: TAMIL

PAGES: 85+XVIII

TYPESETTING: M.KANAGASABAPATHY

PRINTERS: VIVEKA PRESS

PUBLISHED BY: HINDU RELIGIOUS SOCIETY OF
ONTARIO

COPYRIGHT: HINDU RELIGIOUS SOCIETY OF
ONTARIO

உள்ளுறை

முதல் வணக்கம்
பதிப்புரை
தந்துரை
ஆசியுரை
அணிந்துரை
தகவுரை
ஆக்கியோன் பற்றி.....
சமர்ப்பணம்

1. ஈழத்துச் சித்தர் மரபில் 1
2. குடைச்சுவாமிகள் 3
3. அவதார மகிமை 5
4. வரலாற்றில் ஒரு அத்தியாயம் 8
5. திருவடிப்போது 10
6. பாதை இல்லாப் பாதையில் 13
7. தேன் சொட்டுக்கள் 14
8. பாஞ்ச சன்யம் ஒலித்தது 16
9. கந்தைய தேசிகன் 19
10. வழுதுணை வித்திடப் பாகல் முளைத்தது 21
11. அந்த உயிர் ஓவியம் 23
12. உணவு அருந்தலாமா? 25
13. உனது கடமைக்குப் போ! 27
14. எதிர்பாராத ஆசீர்வாதம் 28
15. சுவாமிகளின் சுபாவங்கள் 28
16. சித்தத்துள் குடிகொண்ட சித்தர் 32
17. நிறைகுடம் தளும்பாது 34
18. ஊரடங்குச் சட்ட .... ஊரடங்கும் வேளையிலே 36
19. இப்படியுஞ் சில நிகழ்வகள் 38
20. கவிதை வடிவிலே காட்சி தருகிறார் 40
கதிரமலைக் காவலன்

21. ஓங்காரமாய் விளங்கும் நாதம் 43
22. மென்று கண்டு மெத்தென்றிருந்தார் 47
23. சித்தர்கள் வரிசையிற் சிறந்தவர் 49
24. ஒரு பக்தி மதியின் மனப்பதிவுகள் 51
25. அற்புதமான அந்தக் காட்சி 56
26. முற்றும் உண்மை 57
27. பாதைகளின் பாங்கரில் 59
28. பூரணம் கண்ட புனிதர் 61
29. நிறைவு 63
30. திருவாசகத் தொண்டு 71
31. குருதேவர் கோண்டாவிற் கந்தையா சுவாமிகள் 76
பின்னிணைப்பு
கோண்டாவிற் கந்தையாசுவாமி 82

முதல் வணக்கம்

வேப்பமர நீழ லெல்லாம் - முருகா
வெறிச் சோடிக் கிடக்குதையே!

நீக்கமற நீயிருந்தாய் - முருகா
நினைவெல்லாம் நின்ன தென்றே
காக்கின்றாய் என்றிருந்தோம் - முருகா
இன்று நாம் காவல் இழந்தோம்.

நல்லையிலே நீயிருந்தே - முருகா
நல்லதுணை ஆயிருந்தாய்
தில்லைவெளி போலின்று - முருகா
திக்கெல்லாம் திகழுதன்றோ!

நல்லவனே என்றெவரும் - முருகா
நாடிவரும் போதெல்லாம்
இல்லையென்றே நீ கொடுத்தாய் - முருகா
இப்பொழுது ஏன் மறந்தாய்?

தேரோடும் வீதியெங்கும் - முருகா
தேடுகின்றோம் உன் உருவை
நீரோடும் கண்களுக்கே - முருகா
நின் உருவம் தெரியுதில்லை!

வல்லவனாம் யோகநாதன் - முருகா
வாய் நிறையப் பாடி வைத்தான்
எல்லவரும் போற்றுகின்ற - முருகாநீ
எங்கள் குலதெய்வமன்றோ?

நீ எழுந்து நடந்துவந்தால் - முருகா
நீள்துயரம் பறந்தோடும்
தூவென்று ஊதிவிடு - முருகா
துட்டரெங்கும் ஒழிந்தோட.

வேப்பமர நிழலெல்லாம் - முருகா
வெறிச் சோடிக் கிடப்பதென்ன?

பதிப்புரை

ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை 1994ஆம் ஆண்டு யூலாய் மாதம் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் ஆரம்பிக்கப் பெற்றது. கனடாவில் சைவத்தையும் தமிழையும் வளர்த்தல் இதன் தலையாய நோக்கம். இந்த நோக்கத்தின் செயல்முறைத் திட்டங்களிலே சமய, தமிழ் நூல்களை வெளியிடுவதும் ஒன்றாகும். அந்தவகையில் இதுவரை ஒன்பது நூல்களையும் இரு ஒலியிழை நாடாக்களையும் இந்து சமயப்பேரவை வெளியிட்டுள்ளது.

இப்பொழுது அறிஞர் ஆழ்கடலான் அவர்களால் எழுதப்பெற்ற 'ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமிகள்' என்னும் இந்நூல் பேரவையின் பத்தாவது வெளியீடாக வருவதற்குத் திருவருள் கைகூடியிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

சித்தர்களின் வரலாற்றை எழுதுவதென்பது மிகவும் சிரமமான பணி. ஏனெனில், அவர்கள் தமது வரலாற்றைப் பிறருக்குக் கூறவோ, தமக்குள்ள சக்திகளை வெளிக்காட்டவோ பொதுவாகவே விரும்புவதில்லை. அதுவும் ஈழத்துச் சித்தர் மரபில் இவ்வியல்பு பெரிதும் இல்லாததொன்று.

இந்தச் சிரமமான பணியில் தமிழீழத்திலே முதன்முதலாகத் துணிந்து இறங்கியவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள். 1980 ஆம் ஆண்டு வெளியான அவரது 'ஈழத்துச் சித்தர்' என்னும் நூல் பதினாறு சித்தர்களைப் பற்றிப் பேசுகின்றது. அதில் குடைச்சுவாமிகள் இடம்பெறவில்லை. அவரைப் பற்றிப் போதிய தகவல்கள் திரட்ட முடியாமை காரணமாக இருந்திருக்க வேண்டும். நூல் 32 ஆண்டுகளுக்கு மேலாக அங்கங்கு கஷ்டப்பட்டுக் கிடைத்த குறிப்புகளைக்கொண்டு எழுதப்பட்டதென்றும் அதிற் கூறப்பட்ட சித்தர்களைப் பற்றி ஈழத்திலேயே பலர் அறியார்கள் என்றும் ஆத்மஜோதி அவர்கள் தமது முன்னுரையிற் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

எனினும் அன்று தகவல்களைத் திரட்ட ஆத்மஜோதி அவர்களுக்கு இருந்த வசதிகள், தொடர்புகள் போன்றவைகூட பதிவு செய்யப்படாத பழைய விடங்களை இன்று எழுத முனையும்

ஓர் எழுத்தாளனுக்கு இல்லை.

குடைச்சுவாமி கோண்டாவிலைச் சேர்ந்தவர். அவரது இயற்பெயர் கந்தையா என்பது. அதுகூடப் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவ்வளவுக்கு அவர் ஒரு புரியாத புதிராக வாழ்ந்தவர். சீவன் முத்தராகத் திரிந்தவர். அவரை நன்கு தெரிந்திருக்கக்கூடிய அவர் காலத்துப் பெரியவர்கள் பலர் இன்று இல்லை. அடுத்த சந்ததியினர் செவிவழி குடைச்சுவாமியைப்பற்றிச் சிறிது அறிந்திருத்தல் கூடும். அவர்களும் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ்கின்றனர்.

இவற்றையெல்லாம் எண்ணுகின்றபோது அறிஞர் ஆழ்கடலான் அவர்களது பணியின் மருத்துவம் மேலோங்கி எழுகின்றது.

இத்தகைய சிக்கலான ஒரு வரலாற்றைச் செம்மைசெய்து எழுதும் தகுதி ஆழ்கடலான் அவர்களுக்கு நிறையவே உண்டு. அவர் சமயத்திலே பிறந்து சமயத்திலே வளர்ந்தவர். சமய நூல்களில் ஊறித் திளைத்தவர். தான்பெற்ற இன்பத்தை வையகமும் பெறும்வகையில் பேசியும் எழுதியும் வருபவர். சித்தர்களின் இயல்புகளை நன்கு அறிந்தவர். அதிகம் அறியப்பெறாத தமிழ்நாட்டுச் சித்தர்களின் வரலாறு திருமூலருடன் தொடங்குகின்றது. அவர் மகாசித்தர். அவரின் திருமந்திரக் கடலைக் கடைந்து தெளிந்தவர் ஆழ்கடலான். அந்தத் தெளிவை இந்த நூலிற் காணக்கூடியதாக உள்ளது.

குடைச்சுவாமியும் ஆழ்கடலான் அவர்களுக்குப் புதியவரல்லர். ஏற்கனவே தமது குருநாதர் தவத்திரு சபாரத்தின சுவாமிகளின் ஆணைக்கமைய ஆழ்கடலான் அவர்கள் குடைச்சுவாமிகள் பற்றி ஆராய்ந்து கட்டுரை ஒன்றை எழுதியிருக்கின்றார்கள். அந்த அனுபவ அறிவையும் கனடாவில் கோண்டாவில் அன்பர் க. நித்தியானந்தனும் பிறரும் வழங்கிய தகவல்களையும் வைத்துக்கொண்டு குடைச்சுவாமிகளை எம்மத்தியில் வாழவைக்கும் பணியைச் செவ்வனே அவர் செய்திருக்கின்றார்.

கனடாவில் கோண்டாவில் அடியவர்கள் குடைச்சுவாமியின் விழாவொன்றை முதன்முதலாக 3-3-1996 ஞாயிற்றுக்கிழமை

ரொறன்ரோ ஐயப்பன் ஆலயத்தில் சிறியேனின் தலைமையில் நடத்தினார்கள். அவ்விழாவில் நிகழ்த்தப்பெற்ற தலைமையுரை அன்பர் நித்தியானந்தனின் வேண்டுகோளின்படி பின்பு கட்டுரையாகவும் எழுதப்பெற்றது. ஒரு வரலாற்றுப் பதிவாக அமைதற்பொருட்டு அத்தலைமையுரை இந்நூலின் பின்னிணைப்பாக்கப்பட்டுள்ளது.

இந்நூலும் கோண்டாவிற் பெருமக்களின் ஆதரவுடனேயே வெளிவருகின்றது என்பதனையும் இந்த இடத்திற் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அரிதாய இந்நூலை ஆக்கிய ஆழ்கடலானைக் கோண்டாவில் மக்களும் பிற தமிழ்கூறும் நல்லுலகத்தவரும் என்றென்றும் ஏற்றிப் போற்றுவர் என்பது திண்ணம்.

நூலுக்குக் கோண்டாவிற் பெரியார் திரு. க. வே. சரவணமுத்து அவர்கள் ஆசியுரையும் இந்து சமயப்பேரவைத் தலைவர் திரு. சாமி அப்பாத்துரை அவர்கள் அணிந்துரையும் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் தகவுரையும் வழங்கியிருக்கின்றார்கள். இப்பெரியார்களுக்கு இந்துசமயப் பேரவை சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

ஆழ்கடலான் அவர்கள் நூலை எழுதுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த கோண்டாவில் அன்பர்களின் தொண்டு அளப்பரியது. அவர்களுக்கும் எழுத்தமைப்புச் செய்துதவிய திரு. மா. கனகசபாபதி அவர்களுக்கும் நூலை அழகுற அச்சடித்துத் தந்த விவேகா அச்சகத்துக்கும் எமது நன்றி உரியதாகும்.

பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் எம்மை வழிப்படுத்த வல்லன வழுக்கி விழும் சந்தர்ப்பங்களில் எம்மை நிமிர்த்திவிடும் இயல்பின. இம்மையில் மட்டுமன்றி மறுமைக்கும் பயன் தேடுவார்க்கு இந்நூல் பெருந்துணையாகும் என்பது உறுதி.

வி. கந்தவனம்
காப்பாளர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

தந்துரை

சொல்லுகைக்கு இல்லாதது

ஒருசமயம் சங்கராச்சாரியார், தமது பதினேழு சீடர்களுடன் காசிக்கு வசிக்கச் சென்றார். சங்கரர் சீடர்களுடன் நீராடச் சென்றபோது ஒரு மாணவன் மரத்தின் கீழ் 'டுங்ரிங்கரணே' என்று பாணினியின் இலக்கணத்தை உருப்போட்டுக் கொண்டிருந்தார். அவர் அதைக் கேட்டார். "ஓ பைத்யகாரப் பிராமணனே" 'டுக்ரிங்கரணே' யில் என்ன உள்ளது? இந்த வியாகரணம் உனக்கு உதவாது. இதைக் கற்றுக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் என்றார். "நான் அரசரின் சபையில் பெரும்பண்டிதன் ஆவேன்" என்றார் அந்த மாணவர்.

அந்தப் பட்டம் கிடைத்து என்ன செய்வீர்.
எனக்கு அதனால் மிகுந்த பொருள்கிட்டும்.
பொருளை வைத்துக் கொண்டு என்ன செய்வீர்?
என் குடும்பத்துடன் மிகுந்த ஆனந்தத்துடன் வசிப்பேன்.
எவ்வளவு காலம் நீர் ஆனந்தமாய் இருப்பீர்.
சாகும்வரையிலும்.
நீர் காலமான பிறகு இச்செல்வம் என்ன ஆகும்?
தெரியாது.

அப்போது சங்கர்
"பஜ கோவிந்தம் பஜகோவிந்தம் கோவிந்தம் பஜ
மூடம தேஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே நஹிநஹி (நஹி)
ரக்ஷதி டுக்ரிந்தரனே"

விவேகமற்றவனே. கோவிந்தனை வழிபடு. மரண காலம் நெருங்கும்போது, டுக்ரிங்கரணே என்ற வியாகரண பாடம் உன்னைக் காப்பாற்றாது. இறைவனை நினைத்திரு இந்தக் கல்வி நீ சாகும் வரையிலுந்தான் உனக்கு உதவும். பிறகு இதைவிட்டுப் பிரிந்தே செல்ல வேண்டும்.

இவ்வாறு கூறிவிட்டு நீராடி, காசி விஸ்வேஸ்வரரைக் காணச் சென்றார். ஆதிசங்கரர் விஸ்வேஸ்வரரிடம் பிரார்த்தனை செய்தார். நான் மூன்று வகையான கர்மங்கள் செய்த பின் தங்களைத் தரிசிக்க வந்தேன். நான் மூனறு பெரும் பாவங்கள் புரிந்திருக்கிறேன். இப்பாவங்களுக்குப் பரிகாரம் தேடி, தங்களைப்

பிரார்த்திக்க வந்தேன். தங்களைப் பலவிதங்களில் வருணித்தது முதற்பாவம். இறைவன் வாக்குக்கு எட்டாதவர். மனதாலோ வாக்காலோ அவரை வருணிப்பது இயலாது என்று எல்லோருக்கும் கற்பித்தேன். ஆனால் உங்களைத் தரிசித்து உங்களை வருணிக்க வேண்டுமென்று இங்கு வந்தேன். நான் சொன்னது ஒன்று, செய்தது ஒன்று . அதுநான் செய்த பெரும்பாவம். ஈஸ்வர ஸர்வபூதானாம் - இறைவனே அனைத்துயிரும் என்று வர்ணித்தேன். ஆனால் பிரத்தியேகமாக விஸ்வேஸ்வரரைத் தரிசிக்க இங்கு வந்தேன். இது நான் செய்த இரண்டாவது பாவம்

ஏகோவசி ஸர்வ பூதாந்தராத்மா - அனைத்துயிர்களிலும் இருக்கும். இறைவன் ஒருவரே, நீங்கள் என்னுள்ளும் இருக்கிறீர்கள். எல்லாருள்ளும் இருக்கிறீர்கள், என்பதறிந்த பின்னும் தங்களை வணங்க வந்தது நான் செய்த மூன்றாவது பாவம். இம்மூன்று பாவங்களுக்கும் பிராயச்சித்தம் செய்யத் தங்களை வழிபடுகிறேன்.

இவ்வாறு கண்ணைமூடிக்கொண்டு பிரார்த்தனை செய்தபோது அவருக்கு அகக்காட்சி தென்பட்டது. அதில் அவருக்கு விடையும் கிடைத்தது. சங்கரா உனது பச்சாத்தாபமே இதற்குப் பிராயச்சித்தம். இத்தவற்றை மறுபடியும் செய்யாதே".

இந்தப் புனிதமான நிகழ்வைப் பாபா பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். மற்றவர்கட்கு இந்த உண்மையை உணர்த்துவதற்காக நாமும் நெஞ்சிற் போட்டுக் கொள்வோம்.

என் குருநாதர் தவத்திரு சபாரத்தின சுவாமிகள் அடிக்கடி சொல்லுகைக்கில்லாததை எப்படிச் சொல்வது என நம்மை வழிப்படுத்துவார். யானும் இந்நூற்கு ஒரு தந்துரை எழுதப் பேனையைத் தொட்டபோது நீயாரடா இதற்கெல்லாம் என என் நெஞ்சம் படபடத்தது. எனினும் ஏலவே குடைச்சுவாமிகளின் சரித்திரத்தை உன் கைப்பட எழுது எனச் சுவாமிகள் முன்மொழிந்தமையை எண்ணி இதைத் தொடர்கிறேன். அவராணைப்படி எழுதிய கட்டுரை ஆத்மஜோதியில் வெளிவந்தது. குருநாதரே படித்து மகிழ்ந்தார். எல்லாம் என் வலது அல்ல. திருவருளும் குருவருளும் கூட்டிவைத்த வண்ணந்தான் எல்லாம். எதிர்பாராமற் கனடாவந்த துவக்க வேளையில் அன்பர் வித்தியானந்தன் அவர்கள் ஒரு வீட்டிலே பலர் மத்தியுள் என்னை இனங்கண்டு கதைத்தார். சுவாமிகளின் வரலாற்றை எழுதித்தரும்படி கேட்டு, சில ஆவணங்களையும் கொடுத்தார். கனடாவிற் சுவாமிகள் பற்றியறிந்த அன்பர்களின் செவ்வி காணல்

மூலம் பல சம்பவங்கள் கிடைத்தன. இலண்டனில் இருக்கும் திருமதி மகேஸ்வரி கதிரவேலு அவர்களும் கைகொடுத்தார்கள். என்னோடு தொடர்புற்ற சம்பவங்களும் மீண்டன. இப்படிப்பல சான்றுகளின் கால்கோளில் இந்நூல் உருவானது. இந்த எழுத்து வடிவம் புத்தகமாகப் பலர் உதவினர். எனது அன்பான வேண்டுகோட்கமைய பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் பொருத்தமான தகவுரை தந்துள்ளார். அவர்தம் பாரியார் விமலா அம்மையார் எம்மை அன்பாற் பிணைத்து வைத்திருக்கிறார். என்னை ஆத்மீகனாக்கிய சிற்பி மேதகு அ. கருப்பையா (இந்திய உயர் ஸ்தானிகர் குவைத்.) கனடாவில் என் பேனைக்கு நிலைக்களம் அமைத்து ஆற்றுப்படுத்தியவர் எம்மகள் சுபத்ரா இளங்கோ. முப்பத்தொன்பது ஆண்டுகள் அருகிருந்து பணிபுரிபவர் பாரியார். அணிந்துரை நல்கியவர் அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்கள். எல்லார்க்கும் கடமைப்பட்டவன் யான். எனவே அன்பு செறிந்த நன்றி உரித்தாகுக. அன்னவர் மாட்டு ஆண்டவன் கடாட்சம் பெருகுக.

எங்குமின்பம் செழிக்கட்டும்.
தங்கும் அமைதி கொழிக்கட்டும்.

“தியான மூலம் குரோர் மூர்த்தி
பூஜா மூலம் குரோர்ப் பதம்
மந்திர மூலம் குரோர் வாக்கியம
மோட்சா மூலம் குரோர்க் கிருபா”

சிற்றடியேன்
ஆழ்கடலான்
(முருகவே பரமநாதன்)
கனடா

ஆசியுரை

எல்லாம் வல்ல பரம்பொருளைத் தியானித்துத் தம்வயமிழந்து இறைமயமான சிவநேசச் செல்வர்கள் பலர் வாழ்ந்த புனிதபூமியாம் யாழ்ப்பாணத்தில் நமது சமகாலத்தில் வாழ்ந்து அடங்கிய பெருமகான்தான் கோண்டாவிற் சுவாமிகள். அவர் பெருமை ஆரறிவார்? அவரைத் தொடர்ந்தோர் எட்பாகம் அறிவர். எனினும் அவர் ஒரு மகாஞானி. அவர் பற்றி எழுதவேண்டுமென்ற திருவாக்கு திருக்கேதீஸ்வரம் சுவாமிகளின் சித்தத்தில் எழுந்து வெளியானது இந்நூலாசிரியர்க்கு. நிறையத் தரவுகளைச் சேர்க்குமுகமாக அடியேனும் உதவினேன். ஆயின் நிறைவேறக் காலத்தின் கோலம் இடம்தரவில்லைப்போலும். எனினும் கனடாவில் அன்பர் வித்தியானந்தன் வேண்ட, குருவருள் தூண்ட, ஆண்டவனாசியால் நூல் ஆக்கம் பெற்றது. ஆசிரியர் ஆழ்கடலான் வாயிலாக. மறைஞானச் செல்வர்களின் வரலாறு எதிர்கால நாற்றங்கால்கட்கு நல்லமுதுசொம் ஆகும். அற்புதநர்த்தன விநாயகர் அருளால் எல்லாம் நல்லபடி நிறைவேறவும் உலகெங்கணுமுள்ளோர் மத்தியில் அவர் பெருமை கமழவும் மூலகாரணராய் நின்றோர்களை வாழ்த்துகிறோம். இந்நூலாசிரியரின் திருக்கரங்களால் இன்னும் பல சொல் ஓவியங்கள் வெளிவரத் திருக்கேதீஸ்வரப் பெருமான் அருள்பாலிப்பாராக.

எங்குமின்பம் செழிக்கவும்
தங்கும் நன்மை கொழிக்கவும்வேண்டும்.

க.வே. சரவணமுத்து
கோண்டாவில்

அணிந்துரை

குடைந்தருள் தந்த குடைச் சுவாமிகள்

மனிதன் வானளாவ மட்டுமல்ல அதற்கப்பாலும் சென்று கோளங்களைக் குடைகிறான். அறிவியல் மேம்பாட்டால் அளப்பரிய ஆக்கங்களை அள்ளித் தருகிறான். பூமகள் மடியில் புதைந்திருக்கும் பொன்னையும் மணியையும் வளங்களையும் வளமாக்கி வையகத்தில் வாழுகிறான். கணப்பொழுதில் கணனிவழி கண்டங்களனைத்தையும் வலம் வருகிறான்.

அவன் ஆதிமனிதரைப் பார்த்து அநாகரிக மக்களென நாமம் சூட்டுகிறான். பலகோடி வருடங்களுக்கு முன் ஆதிமனிதன் மிருகத்தில் இருந்து வேறுபட்டபோது என்ன செய்தான். ஆடும்மாடும் அடைமழையில் மரத்தடியில் ஒதுங்கியபோது, அவர்களோடு தானும் ஒதுங்கினான். உடற்பலத்தால் உயர்ந்தான். வில்லை வளைத்து, மல்யுத்தம் புரிந்து, உடற்பலத்தை உறுதியென நம்பி வாழ்ந்தான்.

மூளைப்பலம் உடற்பலத்தை மிஞ்சிவிட அவன் மூளைப் பலத்தால் இன்று முன்னேறி இருக்கிறான். சொகுசாக வாழ்கிறான். வெய்யிலில், குளிரில் வாடியவன் என்றும் இங்கிதமான நிலையில் வாழுகிறான். ஆடம்பரத்தேரில் பவனிவருகிறான்.

ஆனால் அவனிடம் உள்ளத்து உளைச்சல் குறைந்ததா? உள்ளத்தே ஓடும் போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது எனும் சாக்கடை நீர் களையப்பட்டதா? அதிருப்தி திருப்தியாக மாறி "போதும் என்ற பொன்மனநிலை" உருவானதா? இல்லவே இல்லை. அன்று மரநிழலில் காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதனுக்கு இருந்த அதே உள்ள பாங்கு நவீன மனிதனுக்கும் இருக்கிறது. பானம் மாறவில்லை. கிண்ணம் மாறியது.

இந்த நிலையில் தான் உள்ளத்தில் உறுதி, உள்ளத்து உவகை தந்திட ஆத்மீக நீரோடையைப் பாயவைத்து வருகிறார்கள் அருட்பெருவள்ளல்கள். அவர்கள் வரிசையில் குடைச்சாமியாரின் பங்களிப்பு மகத்தானது.

அவரது சின்னமாகக் குடை அமைந்து விட்டது. பூமகளை ஓசோன் வாயுமண்டலம் குடைபோலக் காக்கிறது. அதில் ஓட்டை என்றதும் உயிரினங்களே அழிந்துவிடும் என அந்தக் குடையின் ஓட்டையைத் தைக்கிறார்கள்.

வாழ்க்கையின் குடையாய் அவரது அருள்மொழிகள், அருளாசிகள் அமைகின்றன. அவரை ஒரு கணம் மனத்தில் இருத்துவோமேயானால் எம் உள்ளத்தில் தனி ஒளி பிறக்கிறது. அது ஆத்மாவுடன் இணைந்து எம்வாழ்வில் புத்தொளி பிறக்க வைக்கிறது.

ஆத்மிகக் கடலில் திளைத்த அவர் அள்ளித் தந்த அருளமுதம் தித்திக்கும் தேன்பாகு மட்டுமல்ல, தெவிட்டாத தீர்த்தம், நோய் நொடியை உடலில் உள்ளத்தில் நீக்கும் மருந்து. வையகத்து வாழ்வாங்கு வாழ வழி வகுத்துத் தரும் பெருங்கடல். பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரானந்தம் பெற்றுத்தரவல்லது.

அவரது வாழ்க்கை வரலாறுகளை, அற்புதங்களை ஆழ்கடலான் அள்ளித் தந்திருக்கிறார். அவர் கடலலைகளைக் காண்பிக்கவில்லை. கடலின் அடிமட்டம் வரை சென்று அருள்முத்துக்களைப் பெற்றெடுத்துத் தந்திருக்கிறார்.

அவர் தனது நேரடி அனுபவங்களை அள்ளித் தருகிறார். அவர் எழுதிய அரிய நூலைக் கோண்டாவில் வாழ் பெருமக்கள் வெளியிட வந்தமை பாராட்டத்தக்கது. முத்தத்து மல்லிகையின் மணத்தை அயலவர் மட்டுமென்ன அனைவரும் நுகரும் வகையில் இந்நூலை வெளியிடுகிறார்கள்.

இந்த நூலை ஆத்மஜோதி ஐயா நா. முத்தையா அவர்கள் நிறுவிய இந்து சமயப் பேரவையின் தலைவர் என்ற முறையில் அணிந்துரை தந்து வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சாமி அப்பாத்துரை
தலைவர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

தகவுரை

சித்தம் என்பது மனம், அறிவு ஆகிய இரண்டையும் குறிக்குஞ் சொல். மனம் அடையும் கலக்கம், ஆசைகள், துக்கம் ஆகியவற்றை அறிவால் வென்று, அதன்வழி எட்டு நிலைப்பட்ட சித்திகள் கைவரப்பெற்றவர்களே சித்தர்களாவர். இவர்கள் வாழும்போதே தெய்வீகம் கண்டவர்கள். அதனால் இவர்கள் சீவன் முத்தர்கள் என அழைக்கப்படுவர். சீவன் முத்தர் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் என்னும் எட்டு வழிமுறைகளால் சித்தத்தைச் சிவன்பால் வைத்து, சிவனோடு இணைந்தவர்கள். அணிமா, மகிமா, இலகுமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளும் சித்தர்களுக்குக் கை தேர்ந்த கலைகளாகும்.

தமிழர் பண்பாட்டின் சிறப்புக்களில் சித்தர் மரபும் அவர்தம் ஆக்கங்களும் விதந்து கூறப்பட வேண்டியனவே. சித்தர்கள் தந்த பெருஞ் சொத்து சித்தமருத்துவமாகும். சித்தர்களால் அவ்வப்போது பாடப்பட்ட முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட சித்தர் பாடல்கள் மக்களுக்கு நல்லறிவூட்டும் இலக்கியச் செல்வங்கள். திருமூலரால் தொடரப்பட்ட சித்தர் மரபு, ஈழத்திலும் வேரூன்றி வளர்ந்தது.

ஈழத்துச் சித்தர் வரலாற்றிலே முதல் சித்தர் இராவணேஸ்வரன். இராவணன் சிவபக்தன். சித்துக்களில் கை தேர்ந்தவன். பிற்காலத்தில் ஈழத்து முதற் சித்தர் என அறியப்படுபவர் யாழ்ப்பாணத்துக் கடையிற்சுவாமிகள் ஆவார். இவர் வழியில் யாழ்ப்பாணத்தில் சித்தர் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். கிழக்கு இலங்கையில் சுவாமி விபுலானந்தர் பிறந்த காரைதீவில் ஆனைக்குட்டிச்சித்தர் 50களின் இறுதிவரையிலும் வாழ்ந்தவரே. எழுபதுகளில் வாழ்ந்தவர் குடைச்சுவாமி எனப்படும் கோண்டாவில் குமரகோட்டம் தவத்திரு கந்தையா அவர்களாவார். ஆத்மஜோதி முத்தையா அவர்கள் ஈழத்துச் சித்தர்கள் பற்றி எழுதியுள்ளார். அதிற் குடைச்சுவாமிகள் இடம்பெறவில்லை. சித்தர்களின் சித்துக்கள் பற்றிக் கேட்பதும் பயில்வதும் அவரவர் பாக்கியம். ஆழ்கடலான் அவர்கள் குடைச்சுவாமிகளை நன்கு அறிந்தவர். அவருடன் பழகியவர். அவரது அற்புதங்களை நேரிலே கண்டறிந்தவர். அனுபவித்தவர். எனவே இந்நூலை ஆக்குவதற்குத்

தகுதியும் அனுபவமுங் கொண்டவர். துன்னறிவோடு மட்டும் அமையாது, சுவாமி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், சித்து விளையாடல்களையும் நன்கறிந்தோர், அனுபவித்தோர் சுவாமிகளுக்கு ஆட்பட்டோர் வாயிலாகவும் கேட்டறிந்து அவற்றையுங் சேர்த்துத் தொகுத்து நூலாகத் தந்துள்ள ஆழ்கடலான் பணி மிகப் பெரிதாகும்.

முருக. வே. பரமநாதனின் கவிதைகளில் எப்போதும் எனக்கு ஒரு நாட்டம். ஆயினும் இப்போது அவர் இளம்பிறையாளனாகத் தரும் கவிதைகளில் சந்தத் தமிழின் ஓர் தாயகத் துடிப்பு. அதிலும் தடிப்புத் ததும்புகிறது. அவை யாவும் நூலுருப்பெற வேண்டும் என்பதும் என் விருப்பு.

ஆழ்கடலான் ஆழ்ந்தகன்ற கொள்கைச் சான்றோன். ஆசானும் நண்பனும் எனப் பழகிய அன்னாரின் சமயப் பற்றுறுதியும், இலக்கியப் புலமையும், கவித்துவ ஆற்றலும், உரைநடை கைவந்த போக்கும் அவர்மீது எனக்குப் பற்றுதலை நாளுக்கு நாள் அதிகரிக்கச் செய்தன. ஆழ்கடலான் நூல் பல தந்து தமிழுக்கு அணிசெய்த சான்றோன். யாழ்ப்பாணத்து, திருவாசக சுவாமிகள் என்றழைக்கப்பட்ட தவத்திரு சபாரத்தின சுவாமிகளைத் தன் மானசீகக் குருவாக வரித்துக்கொண்டு, அவரது அடிச்சுவட்டில் அமைதியாகத் தன் ஆத்மீகப் பணியைத் தொடரும் ஆழ்கடலான் தன் குருவின் நினைவாக "எங்கள் குருநாதன் திருவாசக சுவாமிகள்" (1974), "ஞானத்தந்தை" (1996) "சபாரத்தினம் என்னும் திருவாசகப் பேரூற்று" (1998) ஆகிய மூன்று ஆத்மீக நூல்களை எழுதியுள்ளார். ஆத்மீக நூல் வரிசையில் மூன்றாவதாக "நவநாதச் சித்தர்" என்ற நூல் வெளிவந்தது. இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் மலையகப் பகுதிகளில் குயின்ஸ்பரி என்னுந் தேயிலைத் தோட்டத்தில் வாழ்ந்து சீவன் முத்தியடைந்த நவநாதச் சித்தரின் வரலாற்றையும் அவரது அற்புதங்களையும் ஆராய்ந்தறிந்து எழுதப்பட்டதே இந்நூலாகும். இந்நூற்கு கலாசாரத்திணைக்களப் பரிசு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"விட்டகுறை தொட்டகுறை" என்பது ஒரு மரபுத்தொடர். அதன் பொருள் ஆழ்கடலானுக்கும் இளவழகனுக்கும் இடைப்பட்டது. அது பன்னீராண்டு உணர்வு கலந்த ஒரு தொடர்பு. நாம் மேற்கொண்ட யாழ்ப்பாணத்து இடப்பெயர் ஆய்வின்வழி அறிமுகமாகி, அவரே பின்னர் அதன் முகவுரையுமானார். அதிலும் அற்புதம் குடைச்சுவாமி அவர்களின் முழு உருவபபடத்தை எம்நூலுக்கு அட்டைப் படமாக்கிய விந்தை!

"ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமிகள்" என்ற இந்நூலிலே குடைச்சுவாமிகளின் வரலாறு நிகழ்வுகளினூடாகக் கூறப்பட்டுள்ள முறைமை படித்துணரும் பான்மையது. குடைச்சுவாமி அவர்களின் பெயர் விளக்கம் கூறுகையில் குடையின் மகிமை பற்றிப் பேசப்படுகிறது. தொடர்ந்து, ஈழமணித்திரு நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சிலரின் கரங்களிலும் இக்குடை இருந்தமை பற்றி விளக்கி, அக்குடைக்குத் தத்துவ விளக்கமும் பின்வருமாறு கொடுக்கிறார்: எந்நேரமும் சித்தம் இறைவன் அருட்குடைக்கீழ் இருக்கின்ற தென்ற நினைப்பும், அந்த நீழலின்கீழ் இருப்பதால் எவ்வித குறையுமில்லை, இடைஞ்சலும் இல்லை என்ற உணர்வும் கந்தையா சுவாமிகளின் குடைக்கோர் தத்துவம் எனலாம். சுருங்கிய குடை இறைவன் தொண்டர் தம் உள்ளத் தொடக்கம் என்பதை வெளிப்படுத்துகிறது. புலன்கள் குடைகள் போல் விரியாமல் ஒடுங்க வேண்டும்" என்றும் தத்துவ விசாரணையில் ஈடுபடுகிறார்.

ஆழ்கடலான் சித்தர்மேற் கொண்ட ஆழ்ந்த பற்றுறுதி இந்நூலெங்கும் நிறைந்திருக்கிறது. சான்றாக ஓர் எடுத்துக்காட்டு: "குடைச்சாமியாருக்கும் உலகத்தாருக்கும் உள்ள அனுபவங்கள் பல. அற்புதங்களும் பல. பூர்வ புண்ணியஞ் செய்தவர்கள் அறிந்தும் அனுபவித்தும் உள்ளத்திற் கோயில் அமைத்துக் கொண்டார்கள். அந்த வரிசையில் நாங்களும் இணைந்து கொண்டோம். ஊரெழுவில் பலவீடுகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டன. எமது இல்லம் சுவாமிகளின் படத்துடன் அப்படியே இருப்பது கோண்டாவிலானின் அற்புதந்தான்."

கனடாவில் ரொறன்ரோ மாநகரில் தம் இல்லத்தரசியோடும் மகள், பேரப்பிள்ளைகளோடும் வாழ்ந்து வரும் முருக. வே. பரமநாதன் அவர்கள் மேலும் நல்ல பல தமிழ் ஆக்கங்களை வெளியிடச் சித்திகள் சித்திக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.

கலாநிதி இ. பாலசுந்தரம்
(யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்)
குடியமர்வுச் சேவை ஆலோசகர்
கனடா தமிழீழச் சங்கம்
ஸ்காபரோ 25.02.1999

உ

சிவமயம்

ஆக்கியோனைப் பற்றி...

'வேலவா வடிவேலவா' என்னும் நூல் பலசிறப்பு அம்சங்கள் புதுமைக்கும் புதுமையுடைய பல இயல்புகளுடனும் விளங்குகிறது. நான் முன்னர் குறிப்பிட்டது போல் Substance (பொருள் - விடயம்), structure (அமைப்பு யாப்பு) Style (அழகு அணி) என்னும் மூன்றிலும் 24 அத்தியாயங்களை உள்ளடக்கியதாகப் புதுப் பொலிவுடன் மிளிர்கின்றது. எடுத்துக்கொள்ளப்பட்ட அத்தியாயங்கள் ஒவ்வொன்றும், ஒன்றில் ஒன்று தங்கியில்லாமல் இருப்பதால், வாசகர் ஒவ்வொரு அத்தியாயத்தையும், நேரம் வாய்க்கும்போது, தனித்தனி ஒவ்வொன்றாக வாசித்து முடிக்கலாம். தற்கால அவசர உலகத்தில் நேரம் சந்திக்காதவர்கள், சிறிது சிறிதாக அரியபெரிய விடயங்களை மெள்ள மெள்ளப் புரிந்து கொள்ளவும், விடயம் அறிந்தவர்கள் ஒவ்வொன்றிலும் ஆறுதலாகக் கருத்தூன்றி இரசித்துப் பொறுமையுடன் படித்து ஆனந்திக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது. ஆர்வம் உள்ள முருகபக்தர்கள் (தாங்கள்) பல்வேறு இந்நூலிற் சந்தித்த முருகபக்தியை வளர்க்கக்கூடிய நூல்களைத் தேடிப்படிக்க ஆர்வத்தை ஊட்டுவதாகவும் உள்ளது. அத்துடன் தற்போது, தற்சமயம் முறையாகக் கற்க வாய்ப்புப் பெறாத உவ்விடமும், இங்கும் உள்ளவர்கட்கும் விடயங்களைச் சிறிது சிறிதாக அறிந்து ஆர்வத்தை வளர்க்கும் நூலாகவும் அமைந்துள்ளது. எல்லாவற்றிற்கும் எம் அன்பு நிறைந்த பாராட்டுக்கள்.

I.B.C. (International Broadcasting Corporation, London)

8-4-2000 காலை 6-7 சனிக்கிழமை புலோலியைப் பற்றி 10 நிமிடங்கள் விமர்சனம் செய்தார்கள். புலவர் ஒலி எந்த நேரமும் கேட்டுக்கொண்டிருக்கும் ஊர் ஆகையால் அப்பெயர் வந்ததாகவும் சொன்னார்கள். அவ்வூரின் சிறப்பு, பெருமைகளைக் கூறி அவ்வூர் தந்த அறிஞர் பெருமக்கள் கதிரவேற்பிள்ளை, சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் முதலான பல பெரியார்களுடன், ஆழ்கடலான் என அழைக்கப்படும் திரு. முருகவே பரமநாதன் எனத் தங்களையும் சிறப்பாகப் பாராட்டிக் கூறினார்கள். நாங்கள் கேட்டுச் சந்தோஷப் பட்டோம். அப்போது தங்களுடன் இவ்வளவு நெருக்கமாய்ப்

பழகுவதற்கு வாய்ப்புத்தந்த ஆண்டவன் கருணையை வியந்தோம். இது தங்களுக்கு மேலும் பல ஆக்கங்களைச் செய்வதற்கு ஊக்கத்தை அளிப்பதுடன் தங்களிடம் உள்ள கல்வியறிவு ஆற்றல் களை உலோகோபகாரமாகப் பயன்படச் செய்த திருப்பதியையும் கொடுக்கும் என்பது எங்கள் நம்பிக்கை.

தங்கள் பேரன்பு மறவாத
வே. சண்முகரத்தினம்
விரிவுரையாளர்
பொறியியல்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

சமர்ப்பணம்

ஈழத்துச் சித்தர் வரிசையில்
கதிரொளியாக விளங்கிய
குடைச்சுவாமிகளின் நினைவாக இம்மலரை
கோண்டாவில் அற்புநர்த்தன
விநாயகர் பொற்பதங்களில் அர்ப்பணிக்கிறோம்.

ஆக்கியோன், வெளியீட்டாளர்

சீவன்முத்தர்

"வினைகளையும், வினைகளின் பயன்களையும் தாண்டி அப்பால் நிற்பவர் சீவன்முத்தர். அவர்களுக்குச் சட்டதிட்ட வரைமுறைகள் கிடையா. அவர்கள் நினைப்பது, செய்வது எல்லாம் தர்மமேயாகும். பேசுவது சத்தியமாகும். சத்தியமும், தர்மமும் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. இவர்களுக்குப் போக்கும் வரவுமில்லை. மரணம் என்பது உடல் விழுவதுதான். அதன் பின் இவர்கள் பரம்பொருளாக எங்கும் நிறைந்திருக்கிறார்கள்.

- பாபா

நன்றிக்குரியோர்

கனடா சி. பத்மநாதன், செ. கணபதிப்பிள்ளை, க வித்தியானந்தன், யாழ். க. வே சரவணமுத்து, சி. சோதிநாதன், ந. பொன்னுத்துரை, திருமதி மகேஸ்வரி கதிரவேலு, இலண்டன்.

வல்லிபுரப் பெருமாள் நினைவு

விண்ணவரும் மண்ணவரும்
விரும்பியே போற்றுகின்ற - வல்லிபுரா
எண்ணரிய பிறவியிதில்
என்குறைகள் தீர்த்திடுவாய்.

- இளம் பிறையாளன்

1. ஈழத்துச் சித்தர் மரபில்

ஈழத்தைச் சிவபூமியெனப் போற்றிய நூல் திருமந்திரம். இதை அருளியவர் திருமூலர். அவருமே வித்தகச் சித்தர் கணத்தின் ஊற்றுக்கண். ஈழத்துச் சித்தர் பலரை அறிமுகம் செய்தவர் அமரர், (ஞானசுரபி, ஆத்மிகவள்ளல்) ஆத்மஜோதி முத்தையா அவர்கள். இந்த ஞானபூமியின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில் உதித்த ஞானக்கனல்களுக்குக் குறைவே இல்லை. மகாகவி சுப்ரமணிய பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்து (அருளம்பல) சுவாமிகளில் இருந்து சரியாக ஒரு நூற்றாண்டு காலத்தில் எத்தனையோ மகான்கள் உதித்தார்கள். பாரதியார் தனது குருநாதனை இப்படிப் பாடுகிறார்.

"கோவிந்த சாமிபுகழ் சிறிது சொன்னேன்
குவலயத்தில் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்
தேவிபதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜமூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி
பரமபத வாயிலெனும் பார்வையாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிசூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்"

கந்தர் மடத்திலே குமாரசாமி வீதியிலே ஒரு வேதாந்தமடம் அமைந்துளது. இதற்குச் சிவகுருநாதர் பீடமென்றும் பெயர். இந்தப் பண்ணையிலே வளர்ந்து புகழ்பூத்த மகான்கள் பலர். வாழையடி வாழையாய்க் கொடிவிட்ட இப்பரம்பரையிலே சின்மயானந்த சுவாமிகளின் கீழ்க்கன்றாக சாஜன் சுவாமிகள் இருந்தார்கள். அவர்களின் வழிகனகரத்தினம் சுவாமிகளும், மகாதேவ சுவாமிகளும் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். மகாதேவசுவாமிகளை இலக்கியகலாநிதி, பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள் வாயாரப் போற்றியுள்ளார். இந்த மகானிடம் ஆசாரிய உபதேசம் பெற்றவர்கள் இருவர். ஒருவர் இணுவில் ஸ்ரீமத்வடிவேற்சுவாமிகள் மற்றவர் தவத்திரு கந்தையா சுவாமிகள். கோண்டாவிலின் மைந்தரான படியால் கோண்டாவிற்சுவாமி என்றும், கையிற் குடையுடன் நடமாடியதால் குடைச்சாமி என்றும் சொந்தத் திருநாமத்தின் வழி கந்தையா சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார். விவேகானந்தரால் இராமகிருஷ்ண பரமஹம்சரின் மேன்மை உலகம் முழுதும்

பரந்ததுபோல் ஹாவாயில் தொண்டாற்றும் சுப்பிரமணிய சுவாமிகளால் யோகர் பெருமையும், மகாயோகர் சுவாமிகளிகால் செல்லப்பன் செவ்வியும், செல்லப்பராற் கடையிற்சாமி புகழும் நின்று நிலவுவதை நாம் காண்கிறோம். குருவல்ல முக்கியம் சிறந்த சீடன் வாய்ப்பதே அபூர்வம். ஆதிசங்கரர் பெருமை பத்மபாதரால் பேணப்பட்டது. நிவேதிதையார் விவேகானந்தரின் புகழை நிலை நாட்டினார். யோகரின் உயர்வு யாழ்ப்பாணத்திற் செல்லத்துரை சுவாமிகளால் ஒளிர்கிறது. இந்நிலையில் மகாதேவசுவாமிகளின் சீடர்களில் ஒருவரான ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள் தன்குருநாதர் நினைவாக ஜெயந்திநகரில் (கிளிநொச்சி) மகாதேவ ஆச்சிரமத்தை அமைத்துப் பணியாற்றினார்கள். அப்பணியை மகாதேவ கணேசானந்த சுவாமிகள் இப்போதும் தொடர்கிறார்கள். கந்தையா சுவாமிகளோ கற்றுணர்ந்து அடங்கினார்கள். அடக்கம் அமரரில் உயக்குமன்றோ? கந்தையா சுவாமிகளின் மகாவாக்கியங்கள் அருள்வடிவானவை.

"அருள்வான் அருள்வாக்கு"
"அறிவான்அருள்வாக்கு"
"அருள்பார் அருளொளிபார்"
"அருள் தெரியும் பார்"
"எம்பெருமான் நடாத்துவார்"
"எம்பெருமான் உணர்த்துவார்"
"நீ எது சரியென்று நினைக்கிறாயோ அதன்படி நட"
"வேறொருவரையும் எதிர்பாராதே"
எட்டு நிறைமொழிகளும் எட்டுக் குடைக்கம்பிகள் போன்று எம்மைத் தாங்குவன. இதுவன்றோ ஞானம்.

"ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் - உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞ்ஞானம்"

- இந்த யுகக்கவிஞன் பாரதி

அருளா தொழிவாய் அருள்செய்து அடியேனைப்
பொருளாக்கி யுன்பொன்னடிக்கீழ்ப் புகவைப்பாய்
மருளே யின்றியுன்னை என்நெஞ்சத் திருத்தும்
தெருளே தரு தென் திருநாவாய் ஏன் தேவே!

திருவாய் மொழி 9:9.1

2. குடைச்சுவாமிகள்

குடைநாளாந்தம் மனிதர் பயன்படுத்தும் ஒரு பொருள். வெயில், மழை இரண்டிலும் இருந்து நம்மைப் பாதுகாக்கப் பெரிதும் பயன்படுவது குடை. கனடா போன்ற தேசங்களிற் பனிகொட்டும் போது குடைபிடித்துத் தம்மைப் பேணுவர். சூரியன் மிகப்பெரியது. அதைக் கைக்குடையே மறைக்கும் என அவ்வை எங்கோ பாடியுள்ளார். ஆதியிலே கறுப்புக்குடை புழக்கத்தில் இருந்தது. காலப்போக்கிற் பலவர்ணக்குடைகள் பாவனைக்கு வந்தன. வெள்ளைக்குடை வெப்பத்தைத் தன்பால் ஈர்க்காது. எனவே யாழ்ப்பாணத்தில் வெள்ளைச் சீலை போட்ட குடைகளைப் பாவித்தகாலம் ஒன்றிருந்தது. வெண்கொற்றக்குடை மன்னன் அடையாளம். மனுநீதிகண்டசோழனை தண்ணளி வெண்குடை வேந்தன் எனத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

அரசமாளிகையிலும், ஆலயங்களிலும் குடைக்கு முக்கியத்துவம் உண்டு. கொடி, குடை ஆலவட்டம் சின்னங்கள். சோடச உபசாரங்களில் குடையுமொன்று. ஆலயங்களிலே பலவர்ணக் குடைகள் சுவாமி வலம் வரும்போது பிடிப்பர். பௌத்த மத வைபவமான கண்டி பெரகராவில் குடை பயன்படுகிறது. 'குடைநிழல் இருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்' என அதிவீரராமபாண்டியன் பாடியுள்ளார். இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரத்திற் குடைக்குத் தனித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. கானல்வரியில் அரசகுடைச் சிறப்பைப் பாடினார் இளங்கோ. சில ஆலயங்களிலே குடைத் திருவிழா என்றோர் நாள் அமைந்துளது. பட்டினாலும், பருத்தியினாலும் ஆதியிலே குடைகள் அமைந்திருந்தன. இந்தக் குடை சித்தர்களின் வரலாற்றிலும் மௌசு பெறுகிறது.

நமது ஈழமணித் திருநாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சிலரின் கரங்களிலே இக்குடை இருந்தது. சித்தர் பரம்பரை வரலாற்றின் முதற்புருடர் கடையிற்சுவாமிகள். இவரைப் பெரிய கடையான் என்றும் போற்றுவர். பெரியகடையென்பது யாழ்நகர் அங்காடியமைந்த பகுதி. இதன் மேற்கு பங்களாவில் இவர் புழக்கம் இருந்தமையால் அப்பெயர் வந்தது. இவரும் கக்கத்திற் குடை வைத்திருந்தார். இவரைக் குருவாகக் கொண்டவர் செல்லப்பாசாமி. இவரை விசர்ச் செல்லப்பா என்றழைப்பர். அவர் பித்தரின் பித்தர். இதை மக்களறியவில்லை. இவரிடம் தீட்சை பெற்றவர் யோகர்

சுவாமிகள். இவர்போகும் இடமெங்கும் வெள்ளைக்குடையைக் கக்கத்தில் வைத்துப் போவதை நாம் காணமுடிந்தது. மகாயோகசுவாமிகளால் மதிக்கப்படும் கோண்டாவிற் கந்தையா சுவாமிகளும் குடையுடன் நடமாடினார். இக்காரணத்தால் அவரைக் குடைச்சாமியார் எனப் பலர் அழைத்தனர். ஊதுவத்திச் சுவாமி என மகாதேவ சுவாமிகளை (வல்வை) அழைத்தனர். அவர் ஊதுவத்திக் குச்சியை கொளுத்தி வைத்திருப்பார். அவர்கூட குடைச்சாமிகளைப் பெரிதும் மதித்தார்.

குடையும் சுவாமிகளும் ஒன்றித்து நிற்கும் சுவாமிகள் எழுபதுகளின் இறுதிக்காலம் வரை வாழ்ந்த மகான். இக்குடையைப் பற்றி நினைக்கும்போது பல சிந்தனைக் கோலங்கள் பளிச்சிடுகின்றன.

எந்நேரமும் சித்தம் இறைவன் அருட்குடைக்கீழ் இருக்கின்றதென்ற நினைப்பும், அந்த நீழலின் கீழ் இருப்பதால் எவ்வித குறையும் இல்லை, இடைஞ்சலும் இல்லை என்ற உணர்வும் கந்தையா சுவாமிகளின் குடைக்கோர் தத்துவம் எனலாம். சுருங்கிய குடை, இறைவன் தொண்டர் தம் உள்ளத்தொடுக்கம் என்பதை வெளிப்படுத்துகிறது. புலன்கள் குடைபோல் விரியாமல் ஒடுங்க வேண்டும். புலனைந்தும் வென்றான் தன்வீரமே வீரம் என்பது ஔவை வாக்கு. ஒழிவில் ஒடுக்கம் படிந்த சுவாமிகளின் அடக்கமும், ஒடுக்கமும் அளவிடற்கரியது. புலனொடுக்கம் சித்தர்களின் இலச்சினை. "இறைவன் அருட்குடைக்கீழ் எல்லோருமின்ப நிறைவுற்று வாழ்கநிதம்" என்னும் பரந்த இலட்சியம் இவர்களுடைய வாழ்வின் நிட்சயக்குச்சியாகும். எனவேதான் "அருள்பார், அருள்பார், அருள் தெரியும் பார்" என்று சதா சொல்லிக் கொண்டே இருப்பார் சுவாமிகள்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
பட்டுக்குடைபிடித்துப் பரி யேறித் திரிவாரை
எட்டுணையும் நம்பாமல் என்பின்னே வா மனமே.
பக்கம் 283 நற்சிந்தனை

3. அவதார மகிமை

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஆ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"
- சிவபுராணம் 26-31

மனிதப்பிறவி மேலானதென்று சைவநெறிபேசும். ஆறறிவு படைத்த மனிதன் பிறக்கிறான். மற்றப்பிராணிகளின் அமைப்பில் அவற்றின் இனப்பெருக்க அமைப்பு வேறானது. மிருகம் குட்டிபோட்டது, பறவை குஞ்சு பொரித்தது, பசு கன்று ஈன்றது என்பதுதான் மரபு. "கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன்றாகி, உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால் வளர்க்கப்பட்டு" என்கிறார் அப்பரடிகள். ஆயிரத்திலே பதினாயிரத்திலே - இலட்சத்திலே ஒருத்தர் அவதாரம் செய்கிறார். இப்படியானவர்களை அவதார புருஷர் என்பர். இந்த மகான்கள் உலகை உய்விக்க வந்தவர்கள். நமது காலத்திலே வாழ்ந்த ரமணர், அரவிந்தர், சித்பவானந்தர், ராமதாஸர், ஞானானந்தர், சிவானந்தர் போன்றவர்கள் இவ்வரிசையிற் சேர்ந்தவர்கள்.

இந்த அடிச்சுவட்டிலே நமது பூமியிலும் பலர் தோன்றினார்கள். அவர்களுள் ஒருவர்தான் குடைச்சுவாமிகள். 1897 ஆம் ஆண்டில் கோண்டாவில் குமரகோட்டம் ஸ்வாமிகள் அவதரித்த இடம். பிறந்த மண்ணுக்கே பெருமை தேடித்தந்த மகான் அவர். தந்தையார் திருநாமம் நாகேந்திரர் தாயார் ஆச்சிப்பிள்ளை. கமத்தொழிலையே தன் வாழ்வியலிற் கடைப்பிடித்தார். பயிர்த்தொழிலே நாட்டின் உயிர்த்தொழில். சுருட்டுக் கைத்தொழிலையும் உபதொழிலாகக் கொண்டிருந்தார். அக்காலத்துச் சுருட்டுத் தொழிலாளர் சிலருக்கு கைவல்ய நவநீதம், ஞானவாசிட்பம் தெரியும். வேதாந்தமடம் மஹாதேவசுவாமிகளிடம் முறையாகக் கற்றவர். திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரைசொல்லும் பௌராணிகராயும் விளங்கினார். அதேபோன்று திருவாசக ஈடுபாடும் நிறைந்தவர். முப்பதா

மாண்டளவில் மூன்றற்றுத்தாமொரு பொருளை சேரும் நெறியில் இல்லறத்திலே புகுந்தார். சில ஆண்டுகளில் துணைவியார் மறைய முற்றும்துறந்த முனிவர் ஆனார். நாட்டிலே இறைவனைத் தேடாமல் கூட்டிலே இறைவனைக் கண்டார். மூன்றற்று (மூவாசை) ஒரு பொருளைச் சார்ந்தவர்.

"ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களும் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே

என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரே
என்னிலே இருந்து இருந்து யான் உணர்ந்து கொண்டனே"

என்னும் சிவவாக்கியர் கூற்றுப்படி சுவாமிகள் அகமுகமான உள்ளுணர்வு பெற்று, பார்வைக்குப் பித்தேறியவர் போற் காட்சியளித்தார். அவரது துறவு வாழ்க்கை அதிஉயர்ந்ததாய் அமைந்தது. மட்டுமல்ல அமைத்தும் கொண்டார். துறவின் செவ்வியை பட்டினத்தார் இப்படிப் பாடுகிறார்:


அறந்தானியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே"

இல்லம் துறந்தான் - புறப்பற்றுகளை விட்டவன், உள்ளத்துறவுடையோன் - சந்நியாசி, அறிவோடுள்ளவன் - யோகஞானி, அறிவு மயமாய் விளங்கும் ஞானியே சீவச் செயல் சிறிதுமின்றிச் சிவமாகி வீடடைவான். இருவாதனை - இரட்டைகள், நன்மை தீமை, இன்பதுன்பம், உயர்வு தாழ்வு, கேடு ஆக்கம்...

இவ்வண்ணம் தன்னை இழந்த நிலையிலே சுவாமிகள் நடமாடினார்கள். உள்வளைந்த தோற்றம், முழங்கால் வரை இடுப்பிலோர் நான்குமுழ வேட்டி, தோளிலே சவுக்கம் (சால்வை) கையிற்குடை, தாடியுடன் வளர்ந்த சிகை. பாதவணியற்ற

திருப்பாதம், தாவித்தாவி நடக்கும் பாங்கு, ஆளுமை மிக்க ஆத்மிகத் தோற்றம். தண்டு, கமண்டலம், தலைமொட்டை, காவி உருத்திராக்கம் எதுவுமே இல்லை.

ஐம்புல ஒடுக்கமும், சுவைகளை வென்ற சுருதியும் இவருக்குக் கைவந்த நிலையிற் காயமாயமற்று, தாமரை இலையிற் தண்ணீர் போற் பிரிந்திருந்தார். எந்நேரமுந் தன்னை 'ஏழை அடியவன்' என்றே சொல்லிக் கொள்வார். சுமார் நாற்பது ஆண்டுகட்கு மேலாகத் தன்னைச் சிவசொரூபியாக்கி தெய்வநிலையில் நடமாடினார். 'பொய்த் தன்மைத்தாய போர்வையை மெய்யென்றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டேன்' என்னும் சுந்தரர் வாக்குக்கு இலக்கியமானவர்.



4. வரலாற்றில் ஓர் அத்தியாயம்

சிலர் வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். இன்னும் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் வரலாறு படைக்கிறார்கள். வரலாறு கண்ட பலர் மௌனமாய் இருந்து மறைந்தும் இருக்கிறார்கள். வரலாற்று ஆசிரியர்கள் மறைந்த வரலாற்றை வெளிக்கொணர்ந் திருக்கிறார்கள். இன்னும் வெளிவராமல் இருக்கும் தமிழர், சமயம் சார்ந்த புதைபொருள்கள் வெளிவரவேண்டும். இந்நெறியிலே தகுதியான பிதாமகர்களின் எழுதுகோல் எழுதிச் செல்ல வேண்டும்.

நம்நாட்டு அருட்செல்வர்களின் வரலாற்றிற் பெரும்புள்ளியாய்த் திகழ்பவர் குடைச்சுவாமிகள். இவர்கள் ஒரு பட்டை போட்ட வைரம். ஜீவன் முத்தர், கச்சாயில் மகான் ஒருவர் செப்பறையில் (திருநெல்வேலி) வாழ்ந்தார். இவரைச் செப்பறைச் சாமி என்பர். இவர் பெருமையை நம்மவர் இன்னும் காணவில்லை. ஏழாலை ஞானப்பிரகாசர் எங்கோ கொஞ்சம் எழுதியுள்ளார். இப்படி மறைந்த மாமேதைகளை அறிமுகம் செய்வது எழுத்தாளரின் பெரும் பணியாகும்.

முத்தி என்பதும் ஜீவன் என்பதும் வடமொழிப் பதங்களே. பந்தத்தில் இருந்து விடுபடுதல் முத்தி. ஜீவனின் விடுதலை இது. சீவிக்கும் போதே முத்தி காண்பவர் சீவன்முத்தர். சிப்பியினின்றும் விடுபடுவது முத்து. இதைத் தரளம் எனவும் கூறுவர். எனவே பந்தத்தின் நின்று விடுபடுபவன் சீவன்முத்தன். எல்லாவற்றையும் நன்றாக விடுவது சந்நியாசம். இச்சீவன் முத்தர்கள் எப்படி இருப்பர் என்பதைக் கைவல்ய நவநீதம் இப்படி விளகுகிறது:

காமமாதிகள் வந்தாலும் கணத்திற்போம் மனத்திற்பற்றார்
தாமரையிலை போற்சகத் தொடுங்கூடி வாழ்வார்
பாமரரெனக் காண்பிப்பர் பண்டிதத்திறமை காட்டார்
ஊமருமாவார் உள்ளத்துவகையாம் ஜீவன்முத்தர்.

அரசராய், வணிகராய், கூலியாளாய், பிச்சசைக்காரராய் எல்லாம் வாழ்ந்து கொள்ளும் இவரை இனம் காண்பது வெகுதுர்லபம். மக்களோடு மக்களாயும் வாழ்வர், அடையாளம் தெரியாமல் சிலர் ஒதுங்கியும் நிற்பர். எல்லாம் வல்ல இறைவனருள் நாட்டம் கொண்ட சுவாமிகளின் வாழ்வியல் ஒரு தனியம்சமாகவே தொனித்தது. துறவுகள் 4: குடீசகன், பகதகன், ஹம்சன், மரமஹம்சன்

இவர் துறவு நிலை நான்கினுள் பகூதகன் என்னும் சந்நியாசத்துள் அமைவது போல் நடமாடுவார். யாதுமூரே யாவரும் கேளிர் என

வாழ்ந்தவர். தினமும் பல கிராமங்களைப் பாதங்களால் நடந்து புனிதமாக்கினார். நயினாதீவு முத்துக்குமார சுவாமிகள் இவன் பின்னுக்கு நல்லாய் இருப்பான் என்று கந்தையா சுவாமிகளுக்கு ஆசீர்வாதம் கூறியபடி புகழ்பூத்து நின்றார். காய உபாதியைக் கடந்து விறகின் மேலும், வைக்கோலிலும், ஈச்சம்பற்றை மறைவிலும், மண்ணின்மேலும் நித்திரை செய்வார். இயமநியமங்கள், சங்கற்பங்கள் எதுவுமே இல்லாத மகான்தான் சுவாமிகள். பேச்சினாலும், ஏச்சினாலும், குடையடியாலும் திருவடித் தீட்சையாலும், நயனதீட்சையாலும் அடியார்க்கு வாழ்வளித்தார். பங்கயப் பூம்புனல் குடைந்தாடும் மகளிர்போல, சுவாமிகளும் உள்ளக் குளத்திற் குடைந்தாடி, இறைவனை அகமுகமாகக் கண்டார். சிவப்பொலிவு ததும்பி வழியும் களைகொட்டிய முகபாவம். ஒளிரும் திருமேனி, தேஸஸ் நிறைந்த வதனம். ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் பக்குவம். கூடும் அன்பினின் கும்பிடும் கொள்கை. ஞான ஒளிவீசும் நயனங்கள். இகழுக்கும் புகழுக்கும் கட்டுப்படாத போக்கு. ஆயிரம் பிறைகண்ட அத்துவித தத்துவஞானி. செத்தாரைப்போலவே திரிந்த சீவன்முத்தர். கருவிகரணங்களின் சேட்டையின்றி, இந்திரிய வயம் மயங்கித் திரியாமல் திருவருள் ஒன்றினால் மட்டும் வழிநடத்தப்பட்டு, தனது திருப்பாதங்களால் தேசமெங்கும் நடந்து நாட்டைப் புனிதமாக்கி பொங்கி எழும் அன்பு நெறியில், யாவரது உள்ளங்களிலும் அருளொளியைப் பரப்பி நிலைத்து நிற்பவர். நினைப்பவர் நெஞ்சிற் காட்சியளிப்பார். காட்சிக்கு எளியவர். கருணைக்குப் பெரியவர். பார்ப்போர் பைத்தியம் என்று சொல்லும்படி இறைவன் பித்தேறித் திரிந்தார். அகப்பற்றையும் புறப்பற்றையும் அறவே ஒழித்து, புறநோக்கற்று அகநோக்குடன் வாழ்ந்தார். இறைவனது எழிலார் கோலத்தை, தன்திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி, இடையறா இறையன்புடனும், குறைவிலா நிறைவுடனும் வாழ்ந்து காட்டியவர்தான் குடைச்சுவாமிகள்.

கண்ணாடி தன்னில் ஒளிபோல் உடம்பதனுள்
ஒண்ணாடி நின்ற ஒளி - ஔவைக்குறள்

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே - திருமந்திரம்

5. திருவடிப்போது

வள்ளுவப் பெருந்தகை முதல் அதிகாரத்தில் ஏழு குறட்பாக்களில் இறைவனது திருவடிகளைப் பற்றிப் பேசுகிறார். மூன்றாம் பாடலில் "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என அமைந்துள்ளது. சேர்தல் - இடைவிடாது நினைத்தல் எனப் பொருள்படும். மலர் உள்ளக்கமலம். உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்று சொன்னவர் விபுலானந்த அடிகளார். இறைவனது திருப்பாதங்களைச் சிரமேல் தாங்குதல் கிடைக்காத பேறு. சேர்தலைத்தான் தலைப்படுதல் (தாடலை) என்பர். சைவ சமயப் பெரியவர்கள் எல்லாருமே திருவடிகளைப்பற்றி மேன்மையாகப் பாடியுள்ளனர். இறைவன் திருப்பாதங்களே சரணாலயம். எனவே இறைவனே தன் திருப்பாதங்களை அடியார் மேல்வைத்து ஆட்கொண்ட வைபவம் பலராற் போற்றப்பட்டுள்ளது. சுந்தரரும் அப்பரும் திருவடி தீண்டியவர்களே. இதை அப்பர் பெருமான் "நனந்தலைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார்" எனப் பாசுரம் பாடியுள்ளார். இப்படிப் பாடிய பெருந்தகை பத்துப் பாடல்கள் அடங்கிய பதிகம் ஒன்று தனியே பாடி நமக்கு அளித்துள்ளார். இந்தத் திருவடிப்போது ஒன்றே நமக்கு உய்திதரும் என்பது முடிந்த முடிபு. தலையை அணிசெய்வது அவன் திருவடிகளே. எனவே எல்லாருமே மலர் சிலம்படியைப் பேணிப பாடினர். அப்பர் வாக்கிற் சில வருமாறு:

அரவணையான் சிந்தித் தரற்றும் மடி
யருமறையான் சென்னிக்கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும் மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
விரவுநீர்த் தென்கெடில நாதன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன்னடி.

அரும்பித்த செஞ்ஞாயிறேய்க்கும்மடி
யழ கெழுதலாகா அருட் சேவடி
பெரும்பித்தர் கூடிப்பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல வடி
பற்றார் பற்றும் பவளவடி
மணியடி பொன்னடி மாண்பானடி

மருந்தாய்ப் பிணி தீர்க்க வல்லவடி

இந்நெறியிலே மாணிக்கவாசகர் நிறையத திருவடிப் புகழ்ச்சிபாடியுள்ளார்.

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
திருப்பூவல்லி

கையால் தொழுதுன் கழற் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாதென் தலைமேல் வைத்து - ஆசைப்பத்து

இப்படித் தனது மனோரம்மியம் கூறியவாதவூரர் சென்னிப்பத்து - என ஒன்றையும் பாடினார். இத்திருவாசகத்திலேயே நனைந்த குடைச்சுவாமிகள் இறுதிமூச்சுவரை சென்னிப்பத்தை நாத்தழும் பேற ஏறப்பாடினார். இப்பத்தின் இறுதிவரிகள் சிந்தனையைத் தட்டுவன.

தூய மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி
மன்னிச் சுடருமே
வட்டமாமலர்ச் சேவடிக்கணநம்சென்னி
மன்னி மலருமே
பொங்கு மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி
மன்னிப் பொலியுமே
வைத்த மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி
மன்னி மலருமே
சேயமாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி
மன்னி மலருமே
திறமை காட்டிய சேவடிக்கண்நம் சென்னி
மன்னித்திகழுமே
வழுவிலா மலர்ச்சேவடிக்கண் நம் செனனி
மன்னித்திகழுமே
செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி
மன்னித்திகழுமே
சித்த மார்தருஞ் சேவடிக்கண் நம் சென்னி
மன்னித்திகழுமே

இப்பாடற் பூர்த்தி வரிகளிலே மாமலர்ச் சேவடி 8 இடங்களிலும் திறமை காட்டிய சேவடி 1 இடத்திலும் சித்தமார் தருஞ்சேவடி 1 இடத்திலும் வருகின்றன. சென்னி மன்னி மலருமே என 8

பிரயோகங்களும் சுடருமே என ஒரு பிரயோகமும் பொலியுமே என ஒரு பிரயோகமும் வருகின்றன. மலரும் சுடரும் திகழும் என்பன விளங்கும் என்ற பொருளுடையன. இறைவனது திருவடியின் கீழ் அன்பரது சென்னி (தலை) பொருந்தி விளங்குவதையே 'தூயமாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி மன்னிச்சுடருமே' என்னும் தொடர் குறிப்பிடுகிறது. மாமலர்ச்சேவடி செந்தாமரை மலர் போன்ற சிவந்த திருவடி. திறமை - வன்மை, திறல், வீரம், வல்லமை, சித்தம், ஆர்தரு உள்ளத்தில் நிறைந்த இறைவன் திருவடிபதிக்கும் சென்னியைப் பெறுவது கிடைத்தற்கரியது.

திருவடி சூட்டும் இன்பத்தைப் பெறுபவர் பேரின்பப் பெருவாழ்வு காண்பர். இப்பதிகம் ஒரு தனித்துவமான தென்பதை உணர்ந்த சுவாமிகள் மகாசமாதியெய்தும் திருக்குறிப்பை உணர்ந்து போலும் அன்றையதினம் இப்பதிகத்தை ஓதினார். வழமையில் மற்றையோரையும் ஓதும்படி சொல்வார். திருவாசகத்தை நன்கு சிந்தித்துப், பொருள்புரிந்து பாராயணம் பண்ண வேண்டும். நெஞ்சம் நெகிழ்க்கும் திருவாசகம் எமக்கு விடுதலை தரும் என்பதை உணர்ந்தே திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத்சபாரத்தினம் சுவாமிகள் தாமும் ஓதி, மற்றையவர்களையும் ஓதவைத்தார். இதனால் அவரைத் திருவாசக சுவாமி என்றே அழைத்தனர் கலைமாச் செல்வர்கள். தமிழகத்தில் திருவாசக மணி எனப்பட்டம் பெற்றவர் பாலசுப்பிர மணியம் அவர்கள். நாமும் திருவாசக வழியில் வாழ்வோம்.

யான் எனதற்ற இடமே திருவடியாம் - கந்தர்கலி வெண்பா
வேட்கை அற்ற இடமே வேதாந்தம் - திருமந்திரம்
ஊசிமே னுனியினின்றே உக்கிரதவத்தையாற்றும்
மாசில்மா தவருங்காணா மலர்ப்பதம் மனத்தில்வாழ்க
- நற்சிந்தனை

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் - தமிழ் மறை 3

சேர்தல் - இடைவிடாது சிந்தித்தல்
பரிமேலழகர் உரை.

வேண்டுதல் வேண்டாமை இறைவனடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல - தமிழ் மறை 4

பிறவித் துன்பங்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப் பற்றிவருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமாம்.

6. பாதை இல்லாப் பாதையில்

விண்ணிலே விமானங்களும், பறவைகளும் பாதை தெரிந்து பறக்கின்றன. ஆனால் அவை சென்ற பாதைச் சுவடுகள் எதுவுமே இல்லை. விமானத்துக்கு விஞ்ஞானம் திசைகாட்டும் கருவிகள். செய்திச் சேவைகள் வழங்குகின்றன. ஆனால் பறவைகளுக்கு....? மண்ணிலே நிறையப் பாதைகள் நிரம்பி வழிகின்றன. ஆனால் மனிதன் திசைமாறிப் போகிறான். சிலரை வழிகேட்டால் திசைமாற்றியும் விடுகிறான். இதை ஒருகவிஞன் பாடினான் "மானிட உள்ளம் கெட்டுப்போச்சு, மனிதநேயம் பட்டுப்போச்சு" என. உண்மையிலே நடக்கிறான், நடந்து நடந்து ஏகுகின்றான். சிந்தைதனில் இருட்டு. செல்லும் வழியும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது. இந்த வாழ்வியலால் மனம் மடிந்து போகிறது. இதற்கோர் கைவிளக்கே இறையொளி. இந்த ஒளிகண்ட இறையருள்ஞானி ஒளிபார் என்று வெகுதூரம் நடந்தார், வெகுகாலம் நடந்தார். பலர் காண நடந்தார். நெருங்கும்போது செல்லப்பரைப் போல் சீறினார். வெருட்டினார், வெருண்டவர், பயந்தவர் மருண்டனர். நின்று பிடித்தவர் நிறைவு பெற்றனர். இக்குடைச் சாமியைப் புரிந்தவர் சிலர், புரியாதவர் பலர். ஒன்றும் தெரியாதவர்போல் இருந்தார். புரிந்தவர் போற்றினர். அவர் நடந்த பாதைதான் பாதை இல்லாத பாதை. எல்லாம் வல்ல இறைவனோடு கலக்கும் பாதை. இதைத் தடம்பிடித்து நடப்பவர் விவேகிகள்- செம்மை நெறி கண்டவர்கள். கந்தையன் பாதை கட்டில்லாத பாதை. நித்திய சாந்நித்யம் தரும்பாதை. தொடர்பவர் தொடரட்டும். முடியாதவர் நிற்கட்டும்.

சுவாமிகள் நன்கு பழகியவீட்டுக்கு ஒரு நாட்போனார். வரவேற்றனர். இங்கே இரண்டொரு நாளில் அவல ஒலி கேட்கும் என்றார். என்ன நடக்க இருக்கிறது என அவர்கள் பொருட் படுத்தவில்லை. வீட்டுக்காரரின் தம்பியார் மகன் பொலிடோலைக் குடித்துவிட்டு அங்கே வந்து கிடந்துவிட்டார். ஒலி மரணவீட்டு ஓசையாயிற்று. இப்படியான ஞானதீட்சண்யம் நிறைந்தவர் சுவாமிகள். அவரின் பாதை செப்பனிட்ட, தடம்காணமுடியாத வீதி, இறை யோடியைந்த இன்பம் - இன்பத்தோடியைந்த வாழ்வு. அவர் காட்டிய வீதி. இதையே பாதை போடாத பாதை என்பர் தத்துவப் பேராசான்கள்.

சொல்ல முடியாத பொருள் சொல்ல வருமாகில்
சும்மா விருக்கின்ற சுகம் கிடைக்கு மாகில்
எல்லாரும் காணவெனைப் பித்தேற்று மாகில்
நல்லகுரல் நல்வரவு சொல்லு சிறுபல்லி - நற்சிந்தனை

7. தேன் சொட்டுக்கள்

சுவாமிகளின் அற்புதமான நடமாட்டங்கள் பல. எனினும் அடியார்கள் வாய்மொழியாய் அறிந்த சிலவற்றை இந்தப் பக்கங்களிலே, எழுதுவது பொருத்தமாகும்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வீதியில் ஒரு படப்பிடிப்பாளர். அவர்தான் இராசரததினம். சுவமிகளிலே அளவற்ற பிடிப் புள்ளவர். சுவாமிகளின் முழுவடிவையும் ஓவியமாகத் தீட்டுவித்து தனது தாபனமான பேபி ஸ்ரூடியோவில் வைத்திருந்தார். அதை வரைந்த ஓவியர் கிருபா. அப்படம் சுவாமிகளின் வடிவத்தைத் தத்ரூபமாகக் காட்டுகிறதா என்பதை அறிவதற்காக நாற்பது ஆண்டுகட்கு மேலாக சுவாமிகளுடன் ஈடுபாடுடைய கந்தர்மடம் வீரசிங்கம் அவர்களை அழைத்துவந்து படத்தைக் காட்டினார். எல்லாம் மிகப் பொருத்தம். ஆனால் உடைதான் காவிநிறமாய் அமைந்திருக்கிறது. சுவாமிகள் வெள்ளை உடைதான் அணிவார் என்றுசொல்லி மனத்துயருடன் சென்றுவிட்டார். அடுத்தநாட் காலை சுவாமிகள் வீரசிங்கம் அவர்களின் வீட்டிற்குக் காவிபடிந்த வேட்டியுடனும் சால்வையுடனும் சென்றார். இது அற்புதமோ-அதியசமோ என்று மெய்ம்மறந்தார் அன்பர் வீரசிங்கம் அவர்கள்.

சுவாமிகள் நடமாடித் திரியும்போது ஐந்தாறு வருடங்கட்கு முன்னர் சுவாமிகளுடன் நீண்டநாள் பழகிய அன்பர்ஒருவரது வீட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வடியவர் சுவாமிகளை வரவேற்று உபசரித்தபின் சொந்த வேலையாகச் சாவகச்சேரி செல்வதாயும், தங்கி உணவு அருந்திச் செல்லும்படியும் வேண்டினார். சுவாமிகள் சம்மதித்த பின், சயிக்கிளிற் சாவகச்சேரி சென்றார். நாவற்குழிப் பாலத்தில் அவர் செல்லும்போது, சுவாமிகள் கடலிலே முழங்காலளவு தண்ணீரில் நின்று கால்கழுவிக் கொண்டிருந்தார். அன்பர் சயிக்கிளை விட்டிறங்கி "சுவாமிகளும் வந்து விட்டீர்களா?" என்று வினவினார். "ஓம் நாங்களும் உங்களுடன் வந்து விட்டோம்" எனச் சுவாமிகள் பதிலிறுத் தார்கள். அன்பரும் குருதேவரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றார். போனகாரியமும் வெற்றி.

சுவாமிகளின் மகாசமாதி கூடியபின் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய சரவணமுத்து என்னும் ஆசைப்பிள்ளை என்பவர்

பலநாள் அவரைத் தொடர்ந்தும் சுவாமிகள் மௌனம் சாதித்தார்கள்.

மறவன்புலோவில் சின்னத்தம்பிச்சாமிகளின் சமாதியில் இரு பெண்கள் இருந்தார்கள். ஒரு அம்மா வெளியிற் செல்லும்போது கஞ்சியை வடித்துக் கன்றுக்குட்டிக்கு வையென்று சொல்லிச் சென்றார். அவர் சொன்னபடி கஞ்சியை வடித்து முடியும் நேரம் சுவாமிகள் அங்கு சென்றார் சுவாமிகளுக்குக் கொடுப்பதற்காக அங்கிருந்த அம்மா கஞ்சியைக் கொண்டு வந்தார். பசுக்கன்றுக்கு உரிய கஞ்சி எனக்கு வேண்டாம் கன்றுக்கே வையுங்கள் என்று மறுத்துச் சென்றுவிட்டார்.

கமக்காரர் ஒருவர் பெரிய குடும்பத்தர். அவருடைய தோட்டத்துக்கு அதிகாலை சென்று மத்தியானம்வரை நடந்து திரிந்தார் சுவாமிகள். அடுத்து மூன்றாண்டுகள் வெங்காய விளைச்சல் எல்லையில்லை.

சுவாமிகளிடம் திருவடித் தீட்சை பெறவேண்டுமென்று ஒருத்தருக்கு நீண்டகால விருப்பம். சுவாமி அவரைத் தேடிச் சென்று "எம்பெருமான் சொல்லுகிறார் உங்களுக்குத் திருவடித் தீட்சை செய்யும்படி" என்று கூறி திருவடித்தீட்சை செய்தார். இன்னோரன்பர்க்குச் சொப்பனத்திலேயே திருவடித்தீட்சை அளித்தார்.

அன்பர் இராசரத்தினம் சுவாமிகளுக்கோர் குடை கொடுக்க வேண்டுமென்ற விருப்போடு நீண்டநாட்களாக ஒரு புதுக்குடை வாங்கி வைத்திருந்தார். மகாசமாதி எய்துவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக ஒரு மோட்டார் ரதத்தில் அவரிடம் வந்து "குடையையும் எடுத்துக்கொண்டு வா" எனச் சொன்னார். சொக்கிப்போன இராசரத்தினம் புதுக்குடையுடன் காரில் ஏறினார். அன்றுமுழுவதும் பலஇடங்கட்குக் கூட்டிச் சென்று மாலையில் அன்னாரின் இல்லத்தில் அவரை விடும்போது தனது கையில் இருந்த பழைய குடையைக் கொடுத்து, புதிய குடையைப் பெற்று அருளாசியும் வழங்கினார்.

பஞ்சம் படைவந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி -நற்சிந்தனை

8. பாஞ்சசன்யம் ஒலித்தது

பாஞ்சசன்னியம் ஒலித்தது பாரதப் போரில் பரந்தாமன் கையில் இருந்து, இந்த வெற்றிச் சங்கு கோதைப்பிராட்டியின் பாடலிலே முழங்குகிறது. படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்யமும் பல்லாண்டே எனப் பெரியாழ்வார் பல்லாண்டிசைத்தார். பல சந்தர்ப்பங்களிலே இதன் ஒலி வெவ்வேறு நாதமாய் முழங்கும். பொங்கு தமிழர்க்கு இன்னல் வந்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்காய் எனப் பாடியவர் பாவேந்தர் பாரதிதாசன். படைப்பை உணர்த்துவது சங்கம்.

இப்பிரயோகம் ஒருதினம் ஸ்வாமிகளின் நாவிற் தவழ்ந்தது. காரணம் நம்மால் எழுதமுடியாதது. சுவாமிகள் மகாசமாதி யடைந்த புனித தினத்திற்கு முதல் நாள் சென்னிப்பத்தையும், நந்தன் கீர்த்தனையையும் பாடினார். சிவவிளைவை வெளிப்படுத்தினார் என்பது உட்பொருள். உடலம் விட்டுப் பூரணத்துட் பூரணமான அன்று முழுமையும் "அருள்பார் பாஞ்சசன்னியம்" எனச் சொல்லிக்கொண்டே இருந்தார். இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறுமணித்தியாலங்கள் தான் இருப்பேன் என்று வடிவேற் சுவாமிகளுக்குக் கூறினார்கள். நாளது பிங்கள வருஷம் மாசித்திங்கள் இரண்டாந்தேதி செவ்வாய்க் கிழமை (14-02-1978) செவ்வாய்க்கிழமை கார்த்திகை நட்சத்திரத்திலன்று மஹா சமாதி எய்தினார்கள். பெரிய மகான்களின் சமாதிநிலையத்தை அதிஷ்டானம் எனவும் வைணவர் சமாதிக்கோயில்களை பிருந்தாவனம் எனவும் அழைப்பர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஓரன்பர் சுவாமிகள் சமாதி கூடவும், கோண்டாவில் அற்புதநர்த்தன சுவாமிகள் ஆலயத்துக்கு அருகில் சமாதி வைக்கவும் கனவு கண்டதுபோல் 16-02-1978இல் சமாதி வைக்கப்பட்டது. சரியாக மூன்று தினங்கள் சுவாமியின் (தூல) உடலம் பத்மாசனத்தில் இருந்தது. அப்போ ஒளிமயமாயும் தேஸஸ் நிறைந்ததாயும் சுகந்த வாசனையுடனும் திகழ்ந்தது. அவ்வீட்டில் திருமுறை ஓசையும் கூடம், சாம்பிராணி தீபதூபங்களும், பன்னீர், சந்தன நறுமணமும் பரவிக் காணப்பட்டன. இரவும் பகலும் பஜனை இடையறாதிருந்தது. மலர்மாலைகளும், மலர்களின் கூட்டமும் குவிந்து கிடந்தன. இவ்வண்ணம் பொதுமக்களும், பழவடியார்களும், பக்தர்களும், கூடிப்பாடி குனிப்பார் தேனிப்பார்

என்று மணிமொழியார் பாடிய வண்ணம் சிவமயமாயும், சைவமயமாயும் திகழ்ந்தது சுவாமிகளின் புனித உடலம் அங்கிருந்து தண்டிகையில் மக்களாற் தாங்கிச் செல்லப்பட்டது. மக்கள் கூட்டம் நல்லைக் கந்தன் தேர்த் திருவிழாவின் குவிந்ததுபோற் குழுமி பக்திபரவசமாய்த் திகழ்ந்தனர்.

உடலம்விட்ட பெரியார்களின் சரீரத்தைப் புனித இடங்களிலே சமாதி வைப்பது முக்கியம். திருமந்திரம் இதை விளக்கிக் கூறியுள்ளது. அடங்கியவர்களின் உடலை மண்ணில் அடக்கம் செய்ய வேண்டும் என்பது மறைஞானச் செல்வர்களின் கூற்று.

எண்ணிலா ஞானி உடல் எரிதாவிடில்
அண்ணல்தம் கோயில் அழலிட்ட தாங் கொக்கும்
மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பார் அரசுமே

- திருமந்திரம் 1911

அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த உடல்தான் குகைசெய்து இருத்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள் பெறுவாரே

- மேலது 1913

வள்ளலாரும் எரிப்பதை விலக்கி உடலை மண்ணிலே அடக்கம் செய்ய வேண்டும் எனப் பாடி, சமாதி நிலையை வற்புறுத்தி உள்ளார். பெரியார்கள் சித்தர்களின் சமாதி தென்னகத்தில் ஆலயங்களில் உண்டு. நம் மண்ணிலும் நல்லூர் சித்தாண்டி, கதிர்காமம், வல்லிபுரம், செல்வச்சந்நிதி போன்ற இடங்களிலே அமைந்துள்ளன. சமாதியுள்ள ஆலயங்கள் கீர்த்தியிற் சிறந்து விளங்குகின்றன. குடைச்சுவாமிகளின் நினைவாலயம் அற்புதநர்த்தன ஆலயத்தருகில் அமைக்கப்பட்டது. கோயில் வேலை பூர்த்தியாகி 14-03-1978இல் முதலாவது குருபூசையும் நடைபெற்று மாதம்தோறும் தொடர்ந்து கொண்டாடப்பட்டது. மிருகசீரிடம் சுவாமிகளின் ஜனன நட்சத்திரமாகும்.

ஆலயதரிசனம் செய்வோரின் குறைகளை நீக்கும் இறைவன்போல அங்கே அடக்கமாயுள்ள ஞானிகளும் ஆசீர்வதிக்கின்றனர். மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற அவர்கள் மனதைச் சமநிலையில் வைத்திருந்தவர்கள் எனவே சமாதியின் மெய்க்கருத்து அதுவாகும். அவர்களின் ஆத்மீக அலைவீச்சு

யுக யுகாந்தரமாய் அடித்துக் கொண்டே இருக்கும்.
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவர் போற்றி.

- திருவாசகம்

நானே நீ நீயேநா னாயிரண்டு மொன்றானால்
தேனின் ருசியது போற் றெவிட்டாய்நீ பூரணமே

- பட்டினத்தார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு

வடிவார் சோதிவ லத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமு ழங்கும்அப் பாஞ்ச
சன்யமும் பல்லாண்டே

- பெரியாழ்வார் திருமொழி 1-1.2

உண்பது சொல்லி லுலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளின் கடல் வண்ணன் கைத்தலத்தே
பெண்படை யாருன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்சசன் னியமே

- நாச்சியார் திருமொழி 7:8

9. கந்தைய தேசிகன்

இவ்வண்ணம் அற்புத மகானான சுவாமிகள் ஒருமுறை திருக்கேதீஸ்வரப் பெருமானைத் தரிசிக்கப் போகும் வழியிலேதான் எம்பெருமான் அவரிடம் வந்து தோற்றமளித்து ஆசி நல்கியதாயும் அன்றில் இருந்து தான் (பசுகரணம் போய் பதிகரணமாய் மாறி) பக்தியும் ஞானமும் தனக்கு உதயமானதாயும் சுவாமிகள் கூறியதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

உடுப்பிட்டியிலே சிதம்பரப்பிள்ளை என்றோர் சித்தம் தெளிந்த ஞானி இருந்தார். கந்தையாவுக்கும் சிதம்பரப்பிள்ளைக்கும் பேதமே இல்லை. குருநமச் சிவாயரும் குகநமச்சிவாயரும் ஒருவரை ஒருவர் மதித்தமை போன்று, சிதம்பரப்பிள்ளையைக் கந்தையாவும், கந்தையாவைச் சிதம்பரப்பிள்ளையம் மதிப்பர். இவ்வாறு பலசாதுக்களை மதித்தவர். ஞானியரால் மதிக்கப்பட்டவர்.

சோதி சுவாமி காங்கேயன்துறையைச் சேர்ந்தவர். பல உத்தியோகம் பார்த்து - பின் நியாயதுரந்தரர் ஆகி, துறவு பூண்டவர். காவியோ - கோலமோ இல்லாதவர். இப்பொழுது அமெரிக்காவில் இருக்கிறார். பஜனைப்பிரியர். அவரைக் கந்தையப் பேராசான் வீழ்ந்து வணங்கி, பழவடியார் பெருமையை உலகறியச் செய்தார்.

நல்லையிலே கூடும் சாது சங்கத்தை யோகர் பெருமான் தனதுநற்சிந்தனையில் இப்படி வர்ணிக்கிறார்:

சண்பக மரத்தடியில் - கிளியே
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே - கிளியே
மனித ரெல்லாங் கூடிக் கொண்டார் - பக் 81

வீடடைவதற்கு ஊன்றுகோல் பஞ்சாட்சரமென்பதையும் இறுதிக் கண்ணியிலே பாடியுள்ளார்.

ஓடாதே வழுக்குதடி - கிளியே
உரைத்திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டுவாசல் - கிளியே
வந்தோமே திறந்திடடி - மேலது பக் 84

யோகரைத் தரிசிக்கக் குடைச்சுவாமிகள் கொழும்புத்துறை போய் அவரது தேவாசிரிய மண்டபத்தில் வரிசையில் நின்றார். யோகர் கண்டு உனக்கு இங்கு என்ன வேலையெனக் கூறி பெருமதிப்பு அளித்து வழியனுப்பினார். சுவாமி ஒருதினம் பலாலி வீதிவழி நடந்து யாழ்ப்பாணம் போகும்போது கந்தர்மடம் சந்தியிலேபோய் - அப்பாலே போகாமல் யாழ்ப்பாணநகரை நோக்கி வெக்கையாய் இருக்கு என்றார். அதன்பின் நூலகம் எரியூட்டப்பட்டது.

பெரிய நகுலேஸ்வரர் என்று அழைக்கப்படும் பெரியாருடன் கோண்டாவிற் சுவாமிகள் மிகுந்த ஈடுபாடு உடையவர்.

திருக்கேதீஸ்வரத்தில் வாழ்ந்த சபாரத்தினம் அப்பு கந்தையா சுவாமியைப்பற்றி எழுது பிள்ளை என்றார். வேண்டிய விபரங்களைத் தேடித் தந்தவர் ஆசைப்பிள்ளை ஐயா. அக்கட்டுரை ஆத்மஜோதியில் வெளியிடப்பட்டது.

கனடாவந்த போது அன்பர் வித்தியானந்தனின் உந்து சக்தி இப்படி எழுத என்னைத் தூண்டிற்று:

அப்பா இம்முத்திக்கு அழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே, செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்.

கற்றாமனம் போல் கசிந்து கசிந்தேயுருகி
உற்றா சான்லிங்கம் உடர்வேடம் - பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவார் பார்.

- உண்மைவிளக்கம்

சுவாமிகள் சமாதி காண்பதற்கு 5 வருடங்கள்முன் ஓர் அன்பர் சுவாமிகள் சமாதி கூடவும் கோண்டாவில் சந்நிதியிலமைந்துள்ள அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்துக்கருகில் சமாதி வைக்கவும் கனவு கண்டார். இக்கனவு நனவாயது. கண்டபடி பூரணத்துட் பூரணமான சுவாமிகளைச் சமாதி வைத்தனர் அங்கே.

10. வழுதுணை வித்திடப் பாகல் முளைத்தது

கோண்டாவில் கிழக்கில் ஒரு இடத்திற்குப் புரியாதி என்று பெயர். இப்பகுதி பிற்காலத்தில் குமரகோட்டம் என அழைக்கப்பட்டது. இங்கே உள்ளவர்கள் சிறந்த தோட்டக்காரராய்த் திகழ்ந்தனர். பாகற்கொடிப் பந்தல்களின் அழகையும், பாகற்காய்கள் காய்த்து வரிசையாய்த் தொங்கும் காட்சியையும் இங்கெ காணலாம். கடுகுநாவல், இலந்தைக் கொப்புகளாற் பந்தல் சித்திரமாய் அமைக்கப்பட்டிருக்கும். வடலியடைப்பு என்னும் ஊர்மக்கள் பலர் இங்கே பாரம்பரியமாய் வாழ்ந்தனர். பயிர்த் தொழிலே இவர்களின் உயிர்த்தொழில். வளமான மண்ணும், நீர்வளமும், நிலவளமும், மனவளமும், கைவண்ணமும், தொழில் வண்ணமும் ஒருங்கிணைந்த இக்கிராமத்தில் கந்தையா என்பவரும் கைதேர்ந்த கமக்காரர். இவரது ஒழுகலாறுகள், போக்குகள் தனித்துவம் ஆனவை. இவர் வெள்ளாட்டுப்பட்டி வைத்திருந்தார். நான்கு பக்கமும் படல் என்னும் பக்குவமான வேலியமைப்பால் ஆடுகள் அடைக்கப்படும் இரவிலே. பகலிலே மேய்ப்பது ஒரு வழக்கம். "பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள், பிழைப்பனாகிலும் திருவடி பிழையேன்" என்பது சுந்தரர் வாக்கு. பட்டியிலே கிடாயும், மறியும் கலந்து இருக்கும். தோட்டங்களிலும், வயல்களிலும் வெள்ளாட்டுப் பட்டியும், செம்மறியாட்டுப் பட்டியும் அடைப்பது அக்கால வழக்கம். அவற்றின் பிழுக்கை சிறந்த பசளையாகும். பயிர்கள் செழித்துக் கொழித்து நல்ல பயன் தரும்.

இவ்வாட்டுப் பட்டியின் நடுவில் காவற்குடில் (தொட்டில்) வைக்கப்பட்டிருக்கும். பனையோலையால் குடில் வேயப் பட்டிருக்கும். நான்கு மரக்கால்களில், பனஞ்சட்டங்களை இணைத்து அமைப்பதே இத்தொட்டில் நீண்டபனை மட்டைகளை வரிந்து அதிலே இரவு பட்டிச் சொந்தக்காரர் படுத்திருப்பார். கள்வர் வந்து ஆடுகளைத் திருடாமற் பாதுகாப்பதற்காக ஒருமுறை கந்தையா தனது ஆடுகளைக் காவல் செய்ய ஆட்டுப்பட்டியில் இரவு கிடந்தார். வழமைபோல் கள்வர் சிலர் ஆடுகளைக் களவெடுக்க வந்திருக்கிறார்கள். கள்வர் ஆடுகளைக்களவெடுக்க வந்திருக்கிறார்கள் எனக் காவலுக்குக் கிடந்த கந்தையா கத்தினார்.

திருடர்கள் இவர் விழிப்பாய் இருக்கிறார் என ஓடி விட்டனர். உள்ளங்கவர் கள்வனோடு கதைத்து வாழும் கந்தையாவின் அகக்காட்சியிலே திருடர்களின் நடமாட்டம் தெரிந்ததைத் திருடர்கள் எப்படி அறிவர். இந்த ஞானவான்தான் பிரபல்யமான குடைச்சுவாமிகள் என்று அழைக்கப்பட்ட சித்தர். மிக உயர்ந்த மறைஞானச் செல்வரான இவர்களை யோகர் சுவாமிகளே மதித்தார்கள் என்றால் அன்னாரின் பெருமையை எப்படி எழுத்தாணிகளில் தீட்டுவது

அழுக்கு மெய்க்கொடுஉன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள்
பிழைப்பான் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக்கு ஒருமருந்து உரையாய்
ஒற்றி யூரெனும் ஊர் உறைவானே

- ஏழாந்திருமுறை

வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணிபூத்தது
தொழுது கொண் டோடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக்கனியே

- திருமந்திரம் 2829

11. அந்த உயிர் ஓவியம்

சுவாமிகளின் அதிஷ்டான நிலையம் கோண்டாவிற் சந்தியில் உள்ள அற்புத நர்த்தனவிநாயகர் ஆலயக் கோமுகியின் வடபாரிசத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் பாணலிங்கம் தாபிக்கப்பட்டுள்ளது. குடைச்சுவாமிகளின் தத்ரூபமான ஓவியமொன்றை வரைவித்துக் கருவறையிலே வைக்க வேண்டும் என்ற கருதுகோளை நிறைவேற்ற, சுவாமிகளுடன் அணுக்கமாய் இருந்த, உரும்பிராய், கந்தையாப் பத்தர் முயன்றார். உரும்பிராயிலேயே ரவி என்னும் கலைஞர் சித்திரம் தீட்டுவதில் பிரபல்யமானவர். எனவே குடைச்சுவாமிகளின் களை சொட்டும் ஓவியத்தைத் தீட்டித் தரும்படி அவரைக் கேட்டார். அவரோ அந்த மகானின் படத்தை எழுத எனக்குத் தகுதி இல்லை எனத் தட்டிக் கழித்து விட்டார். எனினும் பத்தர் ஐயா அவரை விடவில்லை. தொடர்ந்து முயன்றார். ஒரு தினம் அந்த ஓவியரை வீட்டிலே சந்தித்து தம்பி நீர் ஒருமுறை சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கு வருகை தாருங்கள். அச்சந்நிதானத்திற் கொஞ்ச நேரம் அமைதியாக இருங்கள். எல்லாம் தானாகவே அமையும் என்றார். அதற்கிசைந்த ஓவியர் ரவியை கந்தையாப் பத்தர் அவர்கள் தனது மோட்டார் வாகனத்தில் அடுத்தநாள் ஏற்றிவந்து சமாதியில் விட்டார். சுமார் ஒன்றரை மணிநேரம் அந்தத் திருமுன்றில் மண்ணிலே ரவி ஆறுதலாய் இருந்து உரும்பிராய்க்குத் திரும்பினார். அடிக்கடி வீதியோரத்திலே கண்டசுவாமிகளின் காட்சி ஓவியர் ரவியின் மனத்திரையிலே படமாய் விழுந்தது. நல்ல வேளையிலே தூரிகையைக் கையிலே எடுத்தார். சுமார் மூன்று தினங்களில் உயிரோவியம் வார்ப்படமாயிற்று. ஒரு வாரத்திலே முழுமையான சுவாமிகளின் படம் பூர்த்தியானது. கந்தையாப் பத்தரிடம் ஆள் அனுப்பனார் ரவி. பத்தரையா போய்ப்பார்த்து உளம்பூரித்து, உடல் புல்லரிக்க, கண்ணும் குளமானார். தனது சில குறிப்புகளையும் முன்வைத்தார். ரவி அவ்விடயங்களைச் சரி செய்து அழகுக்கு அழகும், அருளும் ஊட்டினார். பத்தரும் மீளவும் போய்ப் படத்தைப் பார்த்து வேண்டிய சன்மானமும் செய்து, கண்ணாடிச் சட்டம் அமைப்பித்து, சுவாமிகளின் சமாதிக் கோயிலில் நன்னாளிலே ஆராதனையுடன் மூலத் தானச் சுவரிலே தாபித்தார். இந்தப் படம் எல்லோரது உள்ளத்தையும் ஆகர்ஷித்தது.

இதே அமைப்பில் உரும்பிராய்ச் சந்தியில் அமைந்த ஒரு ஸ்ரூடியோவில் ஒரு படம் இருந்தது. இதைச் செய்வித்தவர் உரிமையாளர் கலைஞர் திருநாவுக்கரசு அவர்கள். சுவாமிகளின் அருளால் கவரப்பட்ட கவிஞர் ஊரெழு கதிரமலையான் அவர்களின் இல்லத்திலும் சுவாமிகளின் படம் இடம் பெற்றுள்ளது. இவைகளை வரைந்து கொடுத்தவரும் ரவிதான். தத்ரூபமான இப்படங்கள் ஆத்மிக அலைவீச்சுடையன.

பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் இருந்த பேபி ஸ்ரூடியோவில் சுவாமிகளின் படம் அவர்கள் வாழ்ந்த போதே வைக்கப்பட்டு அவர் பாவித்த குடையுடன் ஆராதிக்கப்பட்டமை நினைவுகூரத்தக்கது.

இப்படங்கள் எத்தனையோ சூழ்நிலைகளிலும் அந்தந்த இடத்திலேயே நிலைபெற்றுள்ளன. பேபி ஸ்ரூடியோ விமானக்குண்டு வீச்சிற் சேதமுற்றபோதும், சுவாமிகளின் மிகப்பெரிய வடிவமான படம் எவ்வித சேதமும் காணவில்லை. அவர் பாவித்த குடையும் படமும் பாதுகாப்பாய் இருந்தன. சுவாமியின் அனுக்கிரகம் என்னவெல்லாம் செய்யும் என்பதற்கு இவை சிறந்த உதாரணம்

ஒருவன் திருவுள்ளத் தழகு ஒழுக எழுதிப்
பார்த்திருக்கும் உயி ரோவியமே
- (மதுரை) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

உள்ளக்கிழியின் உரு வெழுதி
- அப்பர்

ஓவியத் தெழுத வொண்ணா உருவத்தாய்
- கம்பநாடன்

12. உணவு அருந்தலாமா?

தோட்டத்திலே காலை இறைப்பு முடிந்தது. தகப்பனும், பிள்ளைகள் மூவரும் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். எதிர்பாராமல் கந்தையா சுவாமிகள் சந்தித்தார். உணவு அருந்தலாமோ எனக் கேட்டார். வயதில் மூத்த தகப்பனார் அதுக்குத் தானே போகிறோம், வாருங்கள் எனக் கூட்டிக் கொண்டு போனார். வீடு சேர்ந்ததும் எல்லோரும் கைகால் முகம் கழுவி விபூதி அணிந்தனர். நல்ல வாழை இலை வெட்டி, துப்பரவு செய்து வீட்டுக்கார அம்மா உணவு (தோசை) பரிமாறினா. சுவாமி அச்சூழலைப் பார்த்தார். நஞ்சு கலந்திருக்கு என்று கூறிப் போகப் புறப்பட்டார். அவ்வீட்டுக்காரர் தடுத்து நிறுத்தி நஞ்சு கலந்த உணவை நாங்களும் தானே சாப்பிடப் போகிறோம். சாவதென்றால் நாங்கள் மட்டும் சாவதா. நீங்கள் சாப்பிடாமற் போகக்கூடாது என்று தடுத்தார். சுவாமிகள் இருந்து உணவருந்திச் சென்றார்.

சுவாமிகள் தலைவாசலுக்கு முன் வடபுறத்தே நின்ற வேம்பைப் பார்த்தபின் தான் நஞ்சுகலந்திருக்கு என்று சொன்னார். காரணம் அந்த வீட்டில் ஒரு மாந்திரீகர் இருந்தவர். அவர் செய்வினை சூனியம், பார்வை, நூல்கட்டல், சாந்தி என்று பல மந்திர தந்திரங்களைச் செய்தவர். அவர் இறந்து போனார். அந்த வேப்பமரத்து அடியிலேதான் அவரது கிரியைகள் நடக்கும். அச்சம்பவங்கள் சுவாமியின் மனக் கண்ணுக்குத் தென்பட்ட படியாற்றான் அவர் நஞ்சு கலந்திருக்கு எனக் கூறினார். இச்சம்பவம் நடந்தது கோண்டாவிலிலேதான்.

சுவாமிகளுக்குச் சாப்பாடு கொடுக்கப் பலர் விரும்புவர். ஆனால் சமையல் செய்து, உணவு பரிமாற ஆயத்தம் பண்ணும்போது ஆளைக் காணமுடியாது. உள்ளன்போடும், மனப் பரிசுத்தத்தோடும் கொடுக்கும் அன்பர்களின் வீடுகளில் பொறுமையோடு காத்திருந்து சாப்பிட்டுச் செல்வார்.

சுவாமிகள் புகையிலை போடும் பழக்கம் உள்ளவர். சிலரது வீட்டுக்குச் சென்றால் (புகையிலை செய்யும் தோட்டக்காரர்) தின்னப்பொயிலை தாருங்கள் எனக் கேட்பார். இவரது செவ்வி தெரிந்தோர் தடை இன்றிக் கொடுப்பர். கோண்டாவிலில் ஒருவர்

வீட்டுக்குப் போய்ப் புகையிலை கேட்டார். அந்த வீட்டுக்காரர் இப்பதான் புகையிலைப் பாடம் எடுத்து அடுக்கி இருக்கிறேன். எப்படித்தாறது எனப் பதிலிறுத்தார். சரி இருக்கட்டும் எனப் போனார் சுவாமிகள். அந்தப் புகையிலை நீண்ட காலமாக விலைப்படாமற் போய்விட்டது.

இந்த மகானுடைய அருமையை ஆரம்பத்திற் பலர் அறியாமல் இருந்தார்கள். தேநீர்க் கடைகளிலே இவர் வந்து தேநீர் குடித்தாற்போதும். அன்று ஏகப்பட்ட வியாபாரம் நடக்கும். மனத்தகத்து அழுக்குள்ளோரைக் கண்டாற் சுவாமிகள் குடையாற் தன் முகத்தை மறைத்துக் கொண்டு ஓடிமறைவார். இவ்வாறு தொலைபதியாக அவர்களின் மனசு இருக்கும். கடைகளில் வாழைப்பழக் குலையை சுற்றிப் பார்த்துத் தனக்கு இசைந்த பழத்தைப் பிடுங்குவார்.

வாழைப்பழத்தின் மனங்கசிவித்து - மணிவாசகர் முழுதும் பழுத்தது வாழைப்பழங்களே - திருமூலர்

13. உனது கடமைக்குப் போ

சிற்றடியேன் ஊரெழு கணேச வித்தியாசாலையிற் கடமையாற்றிய காலம். எங்கள் வீடு புன்னாலைக்கட்டுவன் (சந்தி) சுன்னாகம் வீதியில் அமைந்திருக்கிறது. ஒரு தினம் நான் பாடசாலைக்குப் புறப்பட்டு றோட்டுக்கு வந்தேன். சுவாமிகள் பக்கத்து வீட்டு முன்புறத்தில் நிற்பதைக் கண்டேன். அந்த வீட்டுக்காரர் சோதிலிங்கம் குடும்பத்துடன் நல்ல ஈடுபாடு அவருக்கு. அவர்கள் அக்கிழமை தமது சொந்தக் கிராமமான சண்டிலிப்பாய்க்குப் போய்விட்டனர். இதைச் சொல்வதற் காகப் போனேன். உனது கடமைக்குப் போ என்று அழுத்தமாகச் சொன்ன சுவாமிகள் சாப்பாடு எடுக்கலாமோ? எனக் கேட்டார். ஓம் என்று கூறிவீட்டுக்கு வாருங்கள் சமைத்துத் தருகிறோம் எனக் கூறினேன். இங்கே இருக்கிறேன். சமைத்துத் தாருங்கள் என்றார். நான் திரும்பி எமது வீட்டுக்கு சென்று மனைவியிடம் கூறிவிட்டு பாடசாலைக்குப் போய்விட்டேன். மனைவியாரும் போய் அவருடன் கதைத்துவிட்டு வந்து - மிகப் புனிதமாகச் சமையல் செய்தார். நான் பாடசாலைக்குப் போய் அதிபரிடம் விஷயத்தைக் கூறி, வெள்ளெனவே வந்தேன். வரும்போது சோதிலிங்கம் வீட்டுப் பக்கமாக வந்தேன். சுவாமிகள் விறாந்தையிற் கையே தலையணையாய் வெறும் நிலத்திற் படுத்திருந்தார். அமைதியாய் வீடு சென்று சமையல் முடிந்ததும், சாப்பாடு, தண்ணீர், வாழை இலை இவற்றுடன் சுவாமிகள் இடம் வந்தோம். அறிதுயிலில் இருந்த அவர்கள் எழுந்தார். தண்ணீர் வேண்டிக் கை அலம்பினார். பெட்டி ஒன்றில் இலைபோட்டு உணவு பரிமாறினோம். சுவாமிகள் மிக ஆறுதலாக உணவு அருந்தினார்கள். உணவுண்டதும் கை கழுவினார்கள். இலையை நாம் எடுத்து வீசினோம். சாப்பிடும்போது அவர்கள் நாவினின்று பேசிய வார்த்தைகள் கனிவானவை, அர்த்தம் உள்ளவை. கொஞ்சநேரம் செல்லக் கோப்பி கொண்டுவரும்படி பாரியாருக்குச் சொன்னார். சற்று நேரம் ஆறுதல் எடுத்தார். அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றினோம். காப்பியருந்தியதும் சுவாமிகள் சொல்லாமற் கொள்ளாமலே புறப்பட்டு ஓட்டமும் நடையுமாய்ப் போன காட்சி எவ்வளவு பசுமையானது. நாம் கொடுத்து வைத்தவர்கள். அவர் சில மருந்துகளின் பெயர் சொன்னார். துண்டிலே எழுதினோம். புரியாத பெயர்களவை.

என் கடன் பணி செய்து கிடப்பதே
நின் கடன் அடியேனையும் தாங்குதல் - நாவேந்தர்

14. எதிர் பாராத ஆசீர்வாதம்

கோண்டாவிற் சந்தியை அண்டிய பாகத்தில் ஆசைப்பிள்ளை ஐயா அவர்களது இல்லம். அவர்அதியற்புதமான மனிதர். சுவாமிகளோடு மட்டுமல்ல பழவடியார் கூட்டத்தை அனுசரிக்கும் பண்பு வாய்ந்தவர், அறச் செல்வர். அவரிடம் ஒரு நாட் சென்றிருந்தேன். வீட்டுடன் இருந்த மில்லில் அவரைக் கண்டு கதைத்து விட்டுப் புறப்படும்போது, அவர் கந்தையாச் சுவாமிகள் வீட்டு வாசலில்தான் இருக்கிறார் என்றார். அவரிடம் பேசப்பயம். எனவே அவரிடம் போகாமல் கேற்வரை சென்றுவிட்டேன். சரி ஒருமுறை சுவாமியைப் பார்த்துப் போகலாம் என அவரிடம் சென்றேன். என்னைக் கண்டதும் ஆசைப்பிள்ளை உங்கைதான் மில்லில் இருக்க வேணும், கண்டீர்களா என்றார். ஓம் கண்டேன் சுவாமி. உங்களிடம் தான் வந்தேன் என்று கூறி உங்களது ஆசீர்வாதம் ..... என்று இழுத்தேன். அவ்வளவுதான் சுவாமிகளின் ஆசீர்வாதம் கிடைத்தது, விடைபெற்று வீடு சென்றேன். சுவாமிகளின் திருவாக்கால் ஆத்மீகநெறி எனக்குக் கிடைத்தது. அவரது வரலாற்றையே எழுதினேன். அது ஆத்மஜோதியில் வெளியானது. எழுதும்படி சொன்னவர் என் குருதேவர் சபாரத்தினம் சுவாமிகள்தான்.

சுவாமிகள் சிலருக்குத் திருவடித் தீட்சை அருளி உள்ளார்கள். சிலர் அவரது திருக்கரங்களால் தீண்டப்பெற்றவர்களும் உண்டு. இம்மகானது தரிசனத்துக்காகப் பலர் தவங்கிடந்தனர்.
அடிகள் என் தலை மேலவ்வே - ஆழ்வார்

15. சுவாமிகளின் சுபாவங்கள்

சந்நியாசத்திற் பலவகையுண்டு. ஹம்சம், பரமஹம்சம், பகூதம், குடீரம் என்பன அவை. இவற்றிலே பகூத சந்நியாசம் தான் இவரது என ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள் கூறுவார்கள். இவர் ஒரு சீவன்முத்தராய் வாழ்ந்தார். இவரது செயற்பாடுகள் போக்குவாக்குகள் புதிரானவை.

இவர் வைக்கோலை எடுத்து விரித்து அதன்மேற் படுத்திருப்பார், தோட்டத்தில் மாடு கட்டும் தொட்டிகளில் கிடப்பார், கொத்திவிட்ட, உழுதுவிட்ட தோட்ட நிலங்களில் கிடந்து புரள்வார், உருள்வார்.

ஒரே நேரத்திற் பல இடங்களிலே அவரைக் கண்டிருக்கிறார்கள். மருதனாமடம் சந்தியில் நிற்பார். அதேவேளை கோப்பாயில் வீதியோரம் நடந்து போவார். வாகனத்திலே (மோட்டார்கார்) போகின்றவர்கள் இவரைப் பின்வல்லை வெளியிலும் காண்பர். யோகர்சுவாமிகளும் நல்லூர் ஆலய உட்புறத்திலும், வடபுற வெளிவீதியிலும் ஒரே நேரத்திற் காட்சியளித்திருக்கிறார்.

செல்லப்பா சுவாமிகள் (யோகரின் குரு) சமைப்பார். சோறு அவிந்து இறக்கும் பருவத்தில், ஒரு தடியெடுத்து, உனக்குப் பசியோடா என்று அடித்து நெருக்கிவிட்டுச் சுருண்டு படுத்து விடுவார். இவரும் உணவு கேட்பார். சமையல் முடிந்து பரிமாறத் தயாராகும்போது, ஓடிவிடுவார். பசியாறாமலே போய்விடுவார் - சுருண்டு படுப்பார்.

அன்னுங்கை போகும்வழியில் (கோண்டாவில் டிப்போ முன்) ஒற்றைப்பனையும், புதரும், முட்செடிகளும் உள்ள இடத்திற் படுத்திருப்பார். படுக்கையிற் படுத்தறியார். நாகதாளிப் பற்றைக்கு மேலும், கொதிக்கும் வெயிலிலும் குடையைப் போட்டுவிட்டு அதற்கு மேற் படுத்து இருப்பார்.

மிக எளிமையான தோற்றம் உள்ளவர். இடுப்பிலே நான்குமுழ வேட்டி, தோளிலே துண்டு. சிலவேளை துண்டை விரித்துப் போர்த்திருப்பார். வேட்டி முழங்காலை மறைக்கும். மடியிலே ஏதோ வைத்திருப்பார். அதை இடையிடை வாயிற் போடுவார். (ஏதோ இலை என்பர்) கக்கத்திலே குடை இருக்கும். சிலபோது விரித்துப் பிடிப்பார்.

சிலரைக் கண்டால் சால்வையாலோ, குடையாலோ மறைத்துக் கொண்டு ஓடுவார். வாயில் அருள்பார், அருள் தெரியுது பார்

என்பார். இதுவே அவரது மகாவாக்கியம்.

யாராவது கஷ்டப்பட்டாற், கவலையடைந்தால் அவற்றை நீக்க, மானிப்பாய்த் தபாற்கந்தோர் போய் எம்பெருமானுக்குத் தந்தியடிக்கும்படி சொல்வார். அதற்கு முன் தன்னை சிவோகம் பாவனையில் தூய்மையாக்கிக் கொள்வார்.

வேட்டியையும், சால்வையையும், தோய்ப்பது போற் பாவனை செய்வார். இதுவே அவரது தோய்த்துக் கட்டும் நிலை. சிலபோது புதிய உடையுடன் வருவார். சிலநேரம் கிழிந்த, ஊத்தையான உடையுடன் தென்படுவார்.

இராசவீதியும், ஆடியபாதம் வீதியும் சந்திக்கும் இடத்துக்கு வடக்கே கிழக்காக ஓர் தேநீர்க்கடை இதன் பின்புறத்தில் ஒரு இலந்தைமரம். அதன்கீழ் நின்று சால்வையைத் தோய்ப்பது போற் பாவனை பண்ணிப்பிழிந்து இடுப்பிலே கட்டிக் கொண்டு வேட்டியையும் கல்லிலே தோய்ப்பது போல் அடித்துப் பிழிந்து இடுப்பிற்கட்டி சால்வையைப் போர்ப்பார். இதை இலந்தைக் குளிப்பு என அவரே கூறுவார். பின் அக்கடையில் தேநீர் அருந்துவார். அக்கடைஉரிமையாளருக்குப் பெரிய சந்தோஷமாய் இருக்கும்.

திருவாசகத்தை மனமுருகிக், கண்ணீர் சோர உரத்த குரலிலே பாடுவார். குழைத்தபத்து, சென்னிப்பத்து இவருக்கு ஈடுபாடுள்ள பதிகங்கள். சிரிப்பார் கனிப்பார் தேனிப்பார் என மாணிக்கர் பாடின நிலைதான் இது. இவர் பாடியதை ஒலிப் திவு செய்திருக்கிறார்கள்.

கையிலே காசு கண்டறியார். வெறுங் காலுடன் நடப்பார். ஓட்டமும் நடையுமாய் ஒதுங்கி வீதியோரம் போவார். யாரேனும் பின்தொடர்ந்தாற் பேசி விரட்டுவார். இதற்குப் பயப்படாமற் பின்தொடர்ந்தால் நல்வாக்குகள் கிடைக்கும்.

எல்லோர் வீட்டிற்கும் போகார். சிலரது வீடுகட்குப் போவார். மோட்டார் வாகனத்தைத் தானே மறித்து ஏறிப்போவார். வாகனச் சொந்தக்காரர் தாமே மறித்துக் கேட்டாற் போகமாட்டார்.

சாரயத்தை ஆரும் கொடுத்தால் வேண்டி உடம்பிலே பூசுவார்.

ஒருமுறை சுவாமிகளுக்கு நாய் கடித்துவிட்டது. அவர்கள் எந்த டாக்டரிடமும் போகவில்லை. பூவரசம் இலைப்பழுத்தலை வைத்து, மேலே வைக்கோல் வைத்துக் கட்டினார். நாய் கடித்த புண் மாறிவிட்டது.

சுவாமிகள் உடன் நன்கு பழகியவர்கள் நீண்ட நாட்களாய்ச் சுவாமிகளைக் காணவில்லையே என நினைக்க, சுவாமிகள்

அவர்களைப் போய்க் கண்டு கதைப்பார்.

காங்கேயன் துறையிலே ஒருவர் சோதி சுவாமிகள். நியாயதுரந்தரராய் இருந்தவர். எல்லாவற்றையும் துறந்து வாழ்ந்தவர். வெள்ளாடை அணிவார். அவர் ஒருமுறை தவத்திரு கந்தையா சுவாமிகளைச் சந்திக்கப் போனார். சுவாமிகளைத் தேடிக் கண்டு கதைத்துப் பலதூரம் நடந்தார்கள். கந்தையா சுவாமிகள் தன்குடையை விரித்து அவருக்குப் பிடித்து, சோதி சுவாமியைக் கௌரவப்படுத்தினார். இது அப்பரும் சம்பந்தரும் சந்தித்த காட்சி போன்று இருந்தது.

நடராசா என்பவர் கோண்டாவிலைச் சேர்ந்தவர். சுவாமிகளோடு நல்ல சிநேகிதமாய் இருந்தவர். அவர் முதுமையில் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவ்வேளை சுவாமிகள் மகன் துரைராசா அவர்களைக்கண்டு தபால் போட்டிருக்கிறேன் கெதியிற் பதில்வரும் என்றார். சிலதினங்களில் நடராசா இவ்வுலகை நீத்தார். எதையும் சித்தர் பாஷையில் பேசும் சுவாமிகளின் ஞான தீட்சண்யம் எவரிடமும் காணக்கிடையாதது.

ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள், சபாரத்தினம் சுவாமிகள், முருகுப் பிள்ளை சுவாமிகள், மயில்வாகனம் சுவாமிகள், மகாதேவசுவாமிகள், யோகர் சுவாமிகள், வைரவியார் சுவாமிகள் போன்ற பலரால் மதிக்கப்பட்டவர் குடைச்சுவாமிகள்.

"நடக்கும் செயலில் எல்லாம் நடக்கும்" என்பது சுவாமிகளின் ஆப்தவாக்கியம்.

தாடியுடனும் நீண்டகேசத்துடனும் காட்சி தருமிவர். தலை மொட்டையுடனும் தாடி இல்லாமலும் காட்சியளிப்பார்.

தண்டு, கமண்டலம், காவி, உருத்திராக்கம், மொட்டை இல்லாத துறவி இவர். கோடியில் ஒருவர்.

16. சித்தத்துள் குடிகொண்ட சித்தர்

நான் கண்ட முதற் சித்தர், என்தந்தையார் யாழ்ப்பாணக் கடைவீதியில் எனக்குக் காட்டித்தந்த குடைச்சுவாமியார். அடுத்த சித்தர் யோகர் சுவாமிகள். என்னுடன் நேரடியாகப் பழகியவர் குடைச்சுவாமியார் அவர்கள் சிலசமயம் வீட்டுக்கும் வருவார். வீதியிலும் திரிவார். அவரின் கையிலே, கக்கத்திலே குடை இருக்கும். காசு கையில் பட்டறியார். குடைச்சாமியார் படுக்கையிற் படுத்தறியார். நாகதாளிப் பற்றைக்கு மேலும், கொதிக்கும் வெய்யிலிலும் குடையைப் போட்டுவிட்டு அதற்குமேல் படுத்துவிடுவார். குடை எல்லாரையும் காக்கும் திருவருளாகும். அந்தச் சீவன்முத்தர் நடமாடும் தெய்வம். சிலசமயம் எனது வீட்டிற்கு வருவார். அவருக்கு என்னை அதிகம் பிடிக்காது. என் மனைவியை அழைத்துப் பேசுவார். பலாக் கொட்டை சுட்டுக் கொடுத்தாற் சாப்பிடுவார். இரண்டு மூன்று மாதத்திற்கு ஒருக்கால் ஐந்து ஆறு சோற்று அவிளும் சாப்பிடுவார்.

அவர்கள் சமாதியடைந்த பின்பு ஆசைப்பிள்ளை ஐயா தலைமையில், கோண்டாவிலில் அவருக்கு ஒரு கோயில் கட்டப்பட்டு நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. குடைச்சுவாமியைப் பற்றி ஒரு நூல் எழுதப்பா எனகவிஞர் முருகவே பரமநாதன் அடிக்கடி சொல்லுவார். திருவருள் கைகூடவில்லை. எழுதிய குறிப்புகளும் கதிரமலையில் அடைபட்டு இருக்கின்றன. கதிரமலையில் ஒருமுழு உருவப்படம் தான் வைக்க முடிந்தது. சாமியாருக்கும் உலகத்தாருக்கும் உள்ள தொடர்பும் கதைகளும் அநந்தம், செய்த அற்புதங்களும் பல. பூர்வபுண்ணியம் உடையவர்கள் அறிந்து கொண்டார்கள். அனுபவித்துக் கொண்டார்கள்.

என்னுடைய வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட சில சம்பவங்கள் இத்திரையில் ஓடின. எனக்கு ஏதாவது துன்பங்கள் நிகழ்கிற பொழுது, பிரச்சினை வருகிற பொழுது அவரை நினைத்தால், அல்லது அவரைக் கண்டால் அது உடனடியாய்த் தீர்ந்து போகும். சில சமயங்களிற் குறுக்க, மறுக்க வருவார். அப்போது நல்ல கருமம் நடக்கப் போகிறது என்பது எனக்குத் தெரிந்து விடும்.

என்னுடைய மகளுக்கு ஒருவிவாகப் பேச்சு, பணம் இல்லாத காரணத்தினால் அதற்கு ஊறுகாய் போட்டேன். சாமியார் காலையில் வந்தார். மனைவியை அழைத்தார் அந்த மடையன் எங்கே? என்று உரத்த குரலில் வினவினார். கடலுக்குள்ளாலே பணம் மிதந்து வருகிறது. எம்பெருமானுக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன்

எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை, ஒரே தலைச்சுற்று, ஏதோ நல்ல கருமம் நடக்கப் போகிறது என்பது மாத்திரம் தெரியும். ஒரு திருப்திகரமான உள் உணர்வும் ஏற்பட்டது. வெளிச்சமாயும் இருந்தது. அன்றைய பொழுதும் விடிந்தது. பாரியாரின் மாமனார் ஓடிவருகிறார்.

"நான் இப்பதான் மலேசியாவில் இருந்து வந்தேன். அத்தானை வந்தகலியாணத்தைச் செய்யச் சொல்லுங்கோ. பண விடயத்தை நான் கவனிக்கிறேன்" என்ற செய்தி தந்தார். இச்செய்தி எனது அம்மான் செல்லையாவின் மகன் மகாதேவன் இடம் இருந்து வந்தது. .... பலர் உதவினர்..... சுவாமியார் தந்தி கொடுத்தது. இவர்களுக்குத்தான் எனக்குப் பின்பு தான் புரிந்தது.

இன்னொருநாள் மிகுந்த பணக் கஷ்டம் மனைவியின் கழுத்தைவிட்டு இதுவரைக்கும் கழற்றாத தாலிக்கொடியைக் கையில் எடுத்துக் கொண்டு அடைவு வைத்துப் பணம் எடுப்பதற்கு முயற்சி செய்தேன். கிடைக்கவில்லை. நேரமோ மதியமாய்விட்டது. பசி ஒருபுறம். சயிக்கிள் ஓடிய களை மறுபுறம். சாமியாரை வழிதெருவிற் காணவில்லை என்ற எண்ணமும் வரத்தான் செய்தது. திரும்பி வரும்வழியில் கோண்டாவிற் சந்திக்கு அண்மையில் ஒரு குரல் கேட்டது "போடா வீட்டிற்குப்போ" திரும்பிப் பார்த்தால் அவர் என்னைப்பார்க்காமலே நடந்து செல்கிறார். சாமியாரைக் கண்டால் நல்ல கருமங்கள் நடப்பது வழக்கம். அவருடைய நினைவு வந்தாலே நல்லது. வழியிலே அவரைக் கண்ட காட்சிகள் நமக்குப் பல நன்மைகளையும் தந்த அனுபவம் உண்டு. வழியில் ஆசிரியர் பஞ்சாட்சரம் சந்திக்கிறார். "நிமிர்ந்த பார்வையும் நேரிய போக்கும் குனிந்து காணப்படுகிறதே என்ன சங்கதி?" தயங்கித் தயங்கி விடயத்தைச் சொன்னேன் "வீட்டிற்குப் போங்கோ மூன்றுமணிக்கு நான் வருகிறேன்". காது இனித்தது. மணி மூன்று ஆகிவிட்டது. பணம் வந்தது. பணத்தேவை நிறைவேறியது.

மூத்தவளின் விஷயம் நிறைவேறிவிட்டது. இளையவளுக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது அங்கே காட்சி தந்த சாமியார் "அடே நாளைக்கு நிலத்தாலே வருகிறது" என்று சொல்லிக் கொண்டு போய்விட்டார். (அவ்வளவுதான்) இந்தக் குறிப்பைப்பார் என்னுடைய பெடியனுக்குச் சரிவருமோ பார்ப்பம்.... நிறைவேறிவிட்டது.

இந்தத் தலைப்பு கதிரமலையான் எழுதிய கனவுங்கலைந்தது. காலையும் புலர்ந்தது என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

17. நிறைகுடம் தளம்பாது

குடைச்சுவாமிகளின் புரிந்துணர்வுகளைப் புத்தி ஜீவிகளோ, அறிவு ஜீவிகளோ காண்பது கஷ்டம். அவரின் போக்கும்வாக்கும் புதிரானவை. தாயுமானார் பேசும் மனதற்ற நிலைதான் அது. சுவாமிகள் ஒரு தினம் கோண்டாவில் மண்ணிலே பிரதான வீதிவழியிலே (யாழ்ப்பாணம் பலாலிவீதி) ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தார். எதிரே ஓர் மோட்டார் வாகனத்தைக் கண்டார். கைகாட்டி மறித்து ஏறிக்கொண்டார். மொறிஸ் மயினர் இனமான அக்கார்ச் சாரதிக்கு அளவற்ற சந்தோஷம். பீதியும்கூட. சுவாமிகளைத் தமது வாகனத்தில் ஏற்ற முடியவில்லையே என அங்கலாய்ப்பவர் பலர். இச்சூழ்நிலையில் இந்த மகான் கடவுள் போலே தானே வந்து காரில் ஏறிக் கொண்டார் என்றால் அதன் உரிமையாளர் எவ்வளவு கொடுத்து வைத்தவர்.

சரி, காரைவிடு என்றார். சுவாமிகளே சாரதியை வழிப்படுத்தினார். சுவாமிகள் சொன்ன பாதைகளில் வாகனம் சென்றது. மெயின் வீதிவழி போய், ஒரு குறுக்கு ஒழுங்கைவழி கார்போய் ஒருமில் வளவு வாசலில் நின்றது. மில் உரிமையாளர் கண்டதும் ஓடோடியும் வந்து அவரோடு சம்பாஷித்தார். சுவாமிகளை வீட்டுக்கு வரும்படியும், வந்து உணவு உண்டு போகுமாறும் விரைந்தழைத்தார். இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்றாள் அவ்வை. இல்லாள் இல்லத்துக் குரியவர். அவள் இல்லாளாய் அமைந்தால் மட்டும் இல்லறம் நல்லறமாகும். சுவாமிகளை எவ்வளவோ மன்றாட்டமாய் அந்த அன்பர் கேட்டும் சுவாமிகள் இசையவில்லை. திடீரெனச் சுவாமிகள் ஒரு செம்பு நிறையத் தண்ணீர் கொண்டு வா என்றார். அன்பரும் பரிசுத்தமாகச் செம்மை பூசி மினுக்கு, நிறைய நீர் கொண்டு வந்தார். சுவாமிகள் தண்ணீர்ச் செம்பை டிக்கியைத் திறந்து வைக்குமாறு கூறினார். அவர் சொன்ன வண்ணம் நடந்தது, டிக்கியும் மூடியாயிற்று.

மோட்டார் வாகனத்தைத் திருப்பச் சொன்னார். அவ்வளவு தான் கார் விரைந்தது. எங்கெங்கோ எல்லாம் போனது. டிறைவர் மௌனமாய் வாகனத்தை கவனமாய்ச் செலுத்தினார். இப்படிப்

பல இடங்களுக்கும் போன சுவாமிகள். மீண்டும் அந்தச் செம்புக்கு உரிமையானவரிடம் வந்து சேர்ந்தார். காரைக் கண்டதும் ஓடோடியும் அந்த அடியவர் வந்தார். உனது செம்பு டிக்கியிலே இருக்கு எடு என்றார். அவரும் டிக்கியைத் திறந்தார். செம்பு வைத்த இடத்திலேயே நிறைத்த தண்ணீருடன் இருந்தது. கண்ட அன்பர் அப்படியே எடுத்தார் அதிசயித்தார். சுவாமிகள் போய்விட்டார்.

ஆம் நிறைகுடம் தளம்பாது என்பர். தண்ணீர் சிந்தவோ சிதறவோ இல்லை. நீர் கூடவோ குறையவோ இல்லை. செம்பு ஆடவோ அசையவோ இல்லை. இதனால் வந்தபடிப்பனையை அன்பர் உணர்ந்தாரோ, ஓர்ந்தாரோ. ஆனால் இதனுளடங்கிய தத்துவத்தைச் சிந்திப்போமாக.

"முற்றுணர்வோரொன்றும் மொழியார் - சிற்றுணர்வோரென்றும் சிலுசிலுப்பர்", இன்னோர் தினம், நன்கு பழகிய அன்பர் ஒருவரைச் சந்தித்தார் சுவாமிகள், உன்ரை காரை எடு என்று கூறி வாகனத்தில் ஏறிக்கொண்டார். காலை பத்துமணியளவில் பயணம் ஆரம்பமானது. மாலை நாலு மணிக்கே வாகனம் மீண்டும் அவர் வீட்டு வாசலுக்கு வந்தது. பல இடங்கட்குப் போனார். சிலரைக் கண்டு பேசினார். பசி தெரியாமல் றைவர் ஓடினார். காரில் பெற்றோல் போதுமா, வேணுமா, (Tank) தாங்கியில் பெற்றோல் இன்னும் இருந்தது. இது சுவாமிகளின் குருவருளே என்றார் அந்த அன்பர்.

அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே

- தாயுமானார்.

18. ஊரடங்குச் சட்ட ஊரடங்கும் வேளையிலே

துறவிக்கு வேந்தன் துரும்பு என்பர். அதேபோல அரசகட்டளைக்குப் பணிவதும் அவர்கட்கு இல்லை. சட்டதிட்டங்களையும், சங்கற்பங்களையும் கடந்து நிற்பர். அருணகிரி பேசும் மூவேடணையை வென்றோர். இவர்கள் ஓடும் செம்பொனும் ஒக்கநோக்கும் பண்பினர். இவர்களில் ஒருவர்தான் தவத்திரு கந்தையா சுவாமிகள். அவசரகாலச் சட்டமும், ஊரடங்கு உத்தரவும் நம் மண்ணிலே சகசம். இப்படியொரு காலகட்டம் யாழ்ப்பாணத்தில் மாலை ஆறில் இருந்து அடுத்தநாள் காலை ஆறு மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தவேளை. சித்தர்கட்கு இரவேது பகலேது இராப்பகல் அற்ற இடத்திலே இருப்பவர்கள் அவர்கள். சுவாமிகளும் இந்நெறியிலே செல்பவர்தான். ஒருதினம் இரவு உரும்பிராய், மருதனாமடம் வீதிவழி நடந்து வந்து சுன்னாகம் வீதிக்குத் திரும்புவது அவர் நடையின் உள்நோக்கம். கக்கத்திலே குடை தோளிலே கொய்து போட்டதுண்டு. இடுப்பிலே பிசங்கிய ஆடை. பார்த்தால் விசரனோ என்ற காட்சி. தலைக்குப் பித்தேறியவர்களின் நிலை இது தான். வீதியிலே ஓடுவார், நடப்பார், தரிப்பார், ஆடுவார், அசைவார். நடுவீதிக்கு வருவார்.

இவர்போன திசையிலே சுன்னாகம் பொலிஸ் அதிகாரி இரவு காவற்கடமையாக மோட்டார் வாகனத்திற் சென்று கொண்டிருக்கிறார். கார்க்கோணை அடிப்பதும் விடுவதுமாய் வாகனத்தை ஓட்டிப்போனார். சுவாமிகள் விலத்துவதாய் இல்லை. அவர் எதிலும் அக்கறை இல்லாமல் முன்னேறினார். மூர்த்தி இன்ஸ்பெக்ரர் இவரை ஒரு சித்தசுவாதீனமற்றவர் என்றெண்ணி, காரில் இருந்து இறங்கிப்போய் அவரைத்தள்ளி ஓரமாக விட்டு, தன் வாகனத்தை ஓட்டிச் சென்று தன் அலுவலகத்தை அடைந்தார். பின் தன் இல்லம் சென்று உறங்கி - அதிகாலை வழமைபோல் எழுந்தார். எழும்ப முடியவில்லை. அவ்வளவுதான் கையும் காலும் ஒருபுறம் அசைக்கமுடியவில்லை. எனவே டாக்டரிடம் காட்டி வைத்தியம் செய்வித்தார். எவராலும் மாற்ற முடியா நிலையில் மனம் உடைந்து நான் என்ற நில்ல ஒழிந்து செய்யும் வகை தெரியாது. யாரோ வழிப்படுத்த காரைக்காடு மணியம் என்பவர்

இடம் சென்றார். அவர் பார்த்துச் சொன்னார். ஏதோ தெய்வ நிந்தனையோ, பெரியோர் நிந்தனையோ நடந்திருக்கு, அதை அறிந்து, அதற்கு விமோசனம் தேடுங்கள் என்று சொல்லிவிட்டார். அவர் தன் வீட்டில் இருக்கும்போது இப்படி நிகழ்வு என்ன நடந்திருக்கும் என தான் நடந்து, கடந்து வந்த பாதையை, மீள நினைத்துப் பார்த்தார். காலமும் கடந்தது. ஒருதினம் வீதியிலே நடந்த காட்சி மின் வெட்டாக அவர் மனதிலே தெரிந்தது.

எனவே பலகாலமாகச் சுவாமிகளின் நடமாட்டங்களை அறியவும் அறிந்து அவரிடம் சரணாகதியை அடைந்து பிராயச் சித்தம் பெறவும் அயராது முயன்றார். முக்கியமான அன்பர்களிடம் இதுபற்றிக் சொல்லியும் இருந்தார். எதிர்பாராமல் வீதிவழியே சுவாமிகள் போகும்போது மூர்த்தி அவர்களைக் கண்டார். பயபக்தியோடு அவர் அண்மையில் சென்று பாதங்களைத் தொட்டு அறியாமற் செய்த பிழைக்காக மன்னிப்பும் கோரினார். சுவாமிகளும் தலையசைத்தார். வீடுவந்ததும் வழமைக்குத் திரும்பினார். இச்சம்பவம் அவரை சவாமிகளின் அடியவனாக்கியது. அடியார் பெருமையை உணர்ந்த மூர்த்தி மனம் குழைந்து நடந்ததை எண்ணி வருந்தினார். ஆனந்தமும் அமைதியும் அடைந்தார்.

காமம் வெகுளிமயக்கம் இவை மூன்றன்
நாமங் கெடக் கெடு நோய். திருக்குறள் 360

இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தீமுன் பஞ்சுபோலும், ஆகலின் அம்மிகுதி தோன்ற இவைமூன்றன் நாமங் கெட என்றார் - பரிமேலழகர்

சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ
- திருக்கோத்தும்பி 7

19. இப்படியும் சில நிகழ்வுகள் .....

பரமேஸ்வராச் சந்தியை அடுத்து இருப்பது ஆலடிச் சந்தி என்பர். கெற்றப்போல் வடிவில் ஆங்கில எழுத்து "வை" போல் இருப்பதால் அதற்கு கெற்ற போல் சந்தி என்றும் பெயர். அதற்குச் சிறிது தள்ளி பழம் றோட்டில் இருந்து கிழக்கு நோக்கி ஒரு றோட் போகிறது. அதற்கு மணல்தறை ஒழுங்கை என்று பெயர். இந்த வழியிலே சுவாமிகள் போய்க் கொண்டிருந்தார். ஒரு வீட்டில் கலியாணவீடு ஜாம், ஜாம் என்று நடந்து கொண்டிருந்தது. ஜனக் கூட்டம் கலகலப்பாய் இருந்ததைக் கண்டு - தாண்டிப் போனார். அடுத்தடுத்த வீட்டில் இளம் பிள்ளைகள், விடலைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சுவாமிகளைக் கண்டதும் எல்லாரும் ஓடிவந்து கூச்சலுடன் நையாண்டி பண்ணினார்கள். இந்த கலகலப்பான சூழ்நிலையில் இளசுகள் குதூகலித்தனர், ஆரவாரித்தனர். சுவாமிகள் அதைப் பாராமுகமாக மெல்ல மெல்ல கூனிக்கூனி வழமைபோல் நடந்தார். அப்போது அவரை அறியாமல் ஒலித்த இருவார்த்தைகள் இன்று சிரிப்புழசை. நாளை மரண ஓலம் என்றார். இது யார் செவியில் விழுந்ததோ யாரறிவார். சொன்னவரும் அறியார் அடுத்த நாள் அவ்வீட்டில் மரணஓலம் தான் கேட்டது.

இவ்வண்ணம் பலநிகழ்வுகள் சுவாமிகளின் வாழ்வியற் காலத்தில் நடந்தது. கந்தர்மடத்தில் வீரசிங்கம் குடும்பம் சுவாமிகளொடு நல்ல ஈடுபாடு. அடிக்கடி அங்கே போவார் சுவாமிகள். ஒருதினம் இரவு அங்கே எழுந்தருளினார்கள். சுவாமி அறையில் வீரசிங்கம் நின்றார். சுவாமிகளும் உள்ளே போனார்கள். சுவாமி அறையிலே இறைவனின் படங்கள் மேடையில் அமைக்கப் பட்டு மின் விளக்குகள் போடப்பட்டு இருந்தன. ''ஐயோ! எம்பெருமானுக்குச் சுடப்போகிறதே" கழற்றுங்கள் விளக்கை. எண்ணெய்விட்ட விளக்கிலே திரியிட்டு விளக்கேற்றுங்கள்" என்று கூறிப் போய்விட்டார். என்னே சுவாமிகளின் இறை அன்பும், ஈடுபாடும், துடிப்பும்.

இன்னோர் தினம் சுவாமிகள் நல்லூர் ஆனைப்பந்திச் சந்தி றோட்டில் வீரமாகாளியம்மன் கோவிற்பக்கத்தில் இருந்து சந்தி நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். ஒருவர் எதிரே யோசனையோடு வந்து கொண்டிருந்தார். அவரைக் கைகாட்டி மறித்து, மடியில்

இருந்த கொஞ்ச இலையைக் கொடுத்து மல்லிகைப் பூவுடன் இதை அவித்துக் குடி என்றார். அவர் பல ஆண்டுகளாய இருதய நோயாற் பீடிக்கப்பட்டு டாக்டர்களின் வாயிற்படியில் ஏறி இறங்கிக் களைத்துப் போனவர். அவரும் சுவாமிகளின் கட்டளையை ஏற்று, நம்பிக்கையுடன், அவர் சொன்ன பிரகாரம் மூன்றுநாள் ஆறுநேரம் குடித்தார்கள். நாளடைவில் நோயும் சுகப்பட்டு, மனமும் நிம்மதி கண்டது. நம்பினோர் கெடுவதில்லை என்பது பாரதி வாக்கு.

அதேவீதியில் ஒரு கார்கறாஜ் அங்கே ஒருவர் தனது ஏஃகோ போட்டி காரை றிப்பயருக்கு விட்டிருந்தார். இந்த வாகனத்தால் அவர் நன்கு மனம் உடைந்து போய் இருந்தார். ஒரு தினம் அந்த கறாஜ் இருந்த ஒழுங்கை முகப்பிலே வீதியோரம் நின்றுகொண்டு இருந்தார். சுவாமிகள் அந்தவீதி ஓரமாக நல்லூரை நோக்கி நடந்து கொண்டு வந்தார். அப்போது மோட்டார் சொந்தக்காரர் பயந்து ஒதுங்கினார். சுவாமிகள் அவரைக் கூப்பிட்டு "உன்னிடம் நிற்கிற வாகனத்தை விலைக்குக் கேட்பார்கள். கேட்கிற விலைக்கு விற்றுப்போட்டு வாறசாமானை வேண்டிவை" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவர் சொன்னபடி வாகனத்தை விலைக்குக் கேட்டார்கள். கொடுத்துப்பணத்தைப் பெற்றுவீட்டில் வைத்திருந்தார். அப்போ வெங்காயக் காலம், விதை வெங்காயம் விற்க இருப்பதாக ஒருவர் சொன்னார். இவர் வேண்டிக் கட்டித்தூக்கி, கோர்க்காலியிலும் அடுக்கிவிட்டார். நடுகைக்காலம் வந்தது. விலையும் கூடியது. வெங்காயத்தை விற்றார். வெங்காயம் விற்ற லாபத்தினால் வந்த பணம் பலமடங்கு இலாபத்தை ஈட்டிக்கொடுத்தது. மோட்டார் வாகனத்தால் அடைந்த கஷ்டங்களில் இருந்து விடுதலையும் பெற்றார்.

சுவாமிகள் ஒரு பாதைவழியே போய்க்கொண்டிருந்தார். பக்கத்திலே ஒருபனை. சீவல் தொழிலாளி பனையில் ஏறிக்கொண்டிருந்தார். ஓலை கிழித்தாச்சு என்றார். ஏறியவர் வழுக்கி வட்டேற முடியாமல் விழுந்து மரணித்தார். வருமுன் சொல்லும் வாக்குகள் அவரையறியாமலே நாவிற் தவழ்கின்றன.

மடியிலே ஏதோ எடுத்து உள்ளங்கையிற் கசக்கிப் போடுவார் வாயில். ஏதோ இலைதான் அது என அறிந்தோர் கூறுகின்றனர்.

20. கவிதை வடிவிலே காட்சி தருகிறார் கதிரமலைக் காவலன்

கதிரமலைக்காவலன் கந்தையா
என் சிந்தையிலே நிலையாக நில்லையா - கதிரமலை

குடையோடு நாடிவரும் குடமுனிவன்
கதிரமலைக் காவலனே கந்தையா - கதிரமலை

காலை வேளை நேரத்தில் கதிரமலையில்
கதிர் வீசும் எழுநிறத்தில் கந்தையா - கதிரமலை

உலையிலிடு இரும்பாய் என்உள்ளத்தை உருக்கி
உள்ளொளி காட்டியே ஒளிவிடும் கந்தையா - கதிரமலை

இவ்வுலகப் பற்றையெலாம் உதறிவிட்டு
இல்லறத்தை துறவறமாய் கொண்டவனே கந்தையா - கதிரமலை

உண்மையிலா உடைமைகளை ஊதி எறிந்துவிட்டு
உடுத்ததுவும் நீ ஒருநாலுமுழம் கந்தையா - கதிரமலை

முள்தான் பஞ்சணை மெத்தை யென்றே நீயும்
நாகதாளிப் பற்றையிலே உறங்கிடுவாய் கந்தையா - கதிரமலை

கதிரமலைக் காவலனே என் கந்தையா
உதிரமெலாம் சிலிர்க்குதையா உன்னை நினைக்கையிலே
- கதிரமலை

ஏழை எளியவர்கள் எல்லாருமே போற்றும்
குடைச்சாமி நீ யையா என் கந்தையா - கதிரமலை

உன் அருளைப் பெற்றிடவே ஏங்குகின்றேன்
கதிரமலையில் தரிசனம்தா எங்கள் கந்தையா - கதிரமலை

பழுத்த பழமாகி பக்குவத்தார் கோரும்
விழுப் பொருள் ஆனவனே கந்தையா - கதிரமலை

இருளகல அருள்புரிந்து இடர்களை வாய்சுவாமி
என்றென்றும் என்தனக்கு கதிரமலைக் கந்தையா - கதிரமலை

முன்னை வினை யெல்லாம் முதிர் பழமாய்வீழ
அன்னையிலும் பரிவுடையாய் ஆண்டருளே கந்தையா
- கதிரமலை

மனம் கொள்ளும் துன்பங்கள் ஒருகோடியப்பா
மற்றவற்றை அகற்றிடுவாய் கந்தையா - க்திரமலை

அந்தரமாய் நிற்பார்க்கு அன்பன் ஐயா நீ
அடியிணையில் வீழ்ந்தார்க்கு சித்தர் ஐயா - கதிரமலை

நோய்நொடிகள் கண்டால் தாயெனவே தழுவி
நோகாது காத்திடுவான் நொடியினிலே ஐயன் - கதிரமலை

மாறாத நோய்கள்தன்னை மாற்றுதற்கே
மருத்துவனாய் மருந்தளிப்பாய் என் ஐயா - கதிரமலை

துன்பந்துயர் வரும்போது உனைநாட
இன்பமுடன் காட்சிதரும் எங்கள் குரு கந்தையா- கதிரமலை

வன்பக்கம் அறிந்தாயேல் வழிமறித்து
வேறுவழி திருப்புவாய் வள்ளலே கந்தையா - கதிரமலை

என்பக்கம் நின்றருளி எனையாண்ட
தூண்டாமணிவிளக்கானவனே கந்தையா - கதிரமலை

பற்றையறுத்தவனே பக்தர்க்கு வழிகாட்டும்
முற்றத்துறந்த முனியே முற்றத்தில் வருபவனே - கதிரமலை

முள்ளும் கல்லும் உனைக்கண்டால் பூவாகும்
முழு ஞானப்பழமான சீவன்முத்தனே கந்தையா - கதிரமலை

பேரருட் பேற்றால் உன்தன் பிறப்பை யறுத்து
பேரின்பம் தந்தருளும் பிஞ்ஞகனே கந்தையா - கதிரமலை

கதிரைமலைக் காவலனே கந்தையா
புதிரெல்லாம்நீயறிவாய் புத்தமுதே கந்தையா - கதிரமலை

குடையன்றோ உன்சின்னம் கூனிக்கூனி நின்றே
குறை தீர்ப்பாய் கொற்றவனே கந்தையா - கதிரமலை

நின்பாதம் எப்போதும் துணையப்பா கந்தையா
என்னிதயம் நிறைந்தவனே ஏந்தலே கந்தையா - கதிரமலை

வேறு

குடமுனிவன் குடைச் சாமியை
சிந்தையில் சிறக்கும் கந்தையாவை
எந்தையும் தாயும் ஆனசித்தரை
என் புருகி இராப்பகல் ஏத்துவனே

சீவன் முத்தன் சிந்தனை செய்தால்
பாவம் அகலும் பக்குவம் சேரும்
தேவன் அருளால் சிறந்து வாழலாம்
நாவும் நலம்பெறும் நாடெலாம் சிறக்குமே

கதிர்மகேஸ்

கதிரமலை ஒரு பக்திமதியின் இல்லம்.

21. ஓங்காரமாய் விளங்கும் நாதம்

உலக இயக்கமே நாதத் துடிப்புத்தான், நாதப்பிரம்மமாய்ப் பலர் வாழ்ந்தனர். ஒருவர் தியாகராஜசுவாமிகள். அவரது கிருதிகள் இராமனோடு பேசின. நாதமும் விந்துவும் சைவதத்துவங்களில் இரு அங்கம். நாதவிந்து கலாதீத நமோ என்பர் அருணகிரி. இந்த இயற்கை தன்னை வெளிப்படுத்த நாதத்தை நாவாகக் கொண்டுள்ளது. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்பது அப்பர் வாக்கு. கூத்தனின் கையில் உடுக்கு, கோவிந்தன் கையில் புல்லாங்குழல், திருமால் கரத்திற் சங்கு, சரஸ்வதி தாங்கிய வீணை. வீணாதரரின் வீணை, நடராஜனின் சிலம் பொலி நாத வடிவானவை. ஓடும்கங்கை, பாடும் மீன், ஆடும் அலைகள், வீழும் நீர்வீழ்ச்சி, அசையும்மணி, கூவும் குயில், பேசும்கிளி, ஒலிக்கும் பறவை, கர்ச்சிக்கும் சிங்கம், அசையும் காற்று, சீறும் பாம்பு, விரையும் நதி, இடியோசை இப்படியே வரிசைப்படுத்தி இயற்கையை அவதானிப்பின் விளங்கும். ஒலிக்குறிப்பால் மனிதனையே இனம் காணுகிறார்கள். எழுத்துகளே ஒலி மாத்திரைகளாய் இணைகின்றன. சங்கீதம், பக்கவாத்தியம், நாட்டியம், நடனம். ஓசையை எழுப்பி ஒழுங்கான இன்பம் தருகின்றன. தேவன் கோயில் மணியோசை பலசேதிகள் சொல்லும் மணியோசை எனப்பாடுகிறான் கவிஞன். ஒழுங்குபட்ட இசையே ஸப்த சுரங்கள் - எனவே இறைவனே இசை வடிவானான். இந்த நாதப் பிரம்மம் உலகெலாம் ஒலிக்கிறது. அதின் ரசிகர்கள் நாம்.

இந்த வரிசையில் ஓங்காரம் பிரணவமந்திரம். விநாயகரின் வடிவமே ஓங்காரம் தான். அவனைப் பிரணவரூபன் என்பர். தோகைதிறந்து ஆடும் மயிலே அவ்வடிவம் என்பதை ஆனதனிமந்த்ர ரூபநிலை கொண்டதாடு மயிலென்பதறியேனே, நாதமொடுநிந்து ஆன நடல்கொண்டு நாடியதில் நின்று தொழுகேனே" எனப் பாடினார் அருணகிரியார். இம்மந்திரத்தை முருகனே இறைவனுக்கு உபதேசித்ததாகப் பாடல்தோறும் பல அருளாளர்கள் பதிவு செய்துள்ளனர். அகரம்(அ) உகரம் (உ) மகரம்(ம்) சேர்ந்த ஓரெழுத்து மந்திரமேஓம். ஓம்முருகா, ஓம் சரவணபவா, ஓம்சக்தி, ஓம்நமோ நாராயணாய, ஓம்நமசிவாய என்றே ஒலிக்கிறோம். வேதபாரகரும் ஹரிஓம் என்றே

தலையிற்குட்டி ஆரம்பிக்கிறார்கள். மூலாதாரத்தில் இருந்து எழும் இவ்வோசையால் சுத்தசுவாசம் ஏற்படுகிறது. நம் உடல் சிவோகம்பாவனையாகிறது. இதை உணர்ந்தவர் கந்தையா சுவாமிகள். வடிவமே ஓங்காரம் தான்.

மணிவாசகப் பெருந்தகை திருவாசகத்தை ஓம் எனத்துவக்கி ஓம் என நிறைவு செய்கிறார்.

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யாவிமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
- சிவபுராணம் 33-35

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழ்ருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே
- அச்சோப்பதிகம் 7

ஓம் என்னும் ஒலி அ, உ, ம் என்ற மூன்று ஒலிகளாய்ப் பிரியும். அம்மூன்றும் முறையே படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழிலையும் குறிக்குமாதலின் அவையே உள்ளத்துள் நினைவின் தோற்றம், நிலை, இறுதியைச் செய்வனவாம். அவ்வெழுத்துக்களால் உண்டாகும் ஒலியை இறைவனது சக்தியே செலுத்தி நிற்றலால் "உய்ய" என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா என்றார்.

திருவாசகம் ஜி. வரதராஜன் உரை பக் 29

ஆலயங்களிலே பஞ்சாரத்தி செய்யும்போது ஓங்கார வடிவமாகவே அமைகிறது. இதை அருணகிரிப்பெருமான் பாடினார் இப்படி

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பும் அறார் தினைப்போதளவும்
ஓங்காரத்துள் ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என் செய்வார் யமதூதருக்கே

இறைவன் நாதவடிவானவன் என்னும் நமது சைவம். இந்த

நாத உபாசனை இன்றும் நிலைகொண்டுளது. சுவிற்சர்லாந்திலே வின்ரத்தூர் என்னும் இடத்தில் "ஓங்காரானந்த ஆச்சிரமம்" ஒன்றை வெண்மையரே நடத்துகிறார்கள் நான்கு மாடிக்கட்டிடத்தில். அங்கே தீவளர்த்து ஓயாத யாகம் மேற்கொள்கிறார்கள். நிர்ச்சனலம் நிறைந்த சாந்தம் தவழும் அவ்வாச்சதிரமத்தின் எப்பக்கம் நோக்கினும் தெய்வீக சாந்நித்யம் தவழும். அதேவேளை ஓம் ஓம் ஓம் என்ற இனிய இதமான ஓசை எம்மைச் சூழ்ந்து ஒரு புதிய அனுபவிப்பைப் பிரணவப் பக்கமாக அளிக்கிறது. உலகெங்கணுமே காணொணாத அற்புத அமைப்பு இவ்வாச்சிரமம். சாந்தந் தவழும் இதன் இதமான சூழல் மனோரம்மியத்தைத் தருகிறதென்றால் அதன் இனிய இசையான ஓங்காரமே காரணம். சுந்தரர் இறைவனை இசையாயும், இசைப் பயனாயும் கண்டார்.

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி
மாழை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டானே மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே

ஓங்கார ஆனந்தத்தை உயிரிற்பாய்ச்சிய உத்தமஞானி குடைச்சுவாமிகளின் தனிவழிப் பயணம் தக்கோரால் போற்றப் படுகிறது எனின் அவர்களின் அவதாரம் ஒருவாழ்வியற் தத்துவம் எனலாம்.

"பெயர்களும் முடிவில்லாதவை, வடிவங்களும் முடிவில்லாதவை. பெயர்கள் என்பன ஒலிகள். எல்லா ஒலிகளும் பிரணவம் என்ற ஓங்காரத்தினின்று பிறந்தவை. "நான் வேதங்களில் பிரணவமாய் இருக்கிறேன்" என்று கண்ணன் சொல்லுவதன் கருத்து இதுதான். மனிதமனம் ஒலியால் ஈர்க்கப்படுகின்றது என்பது கண்கூடு. அதனால்தான் அது பாம்பிற்கு ஒப்பிடப்படுகின்றது. பாம்பு வளைந்து வளைந்து போகும். எதிர்ப்பட்டவரைக் கடிக்கும். மனித மனமும் வளைந்து நெளிந்து, குறும்பு செய்யும். பார்த்ததை எல்லாம் பற்றநினைக்கும். ஆனால் பாம்புகூட மகுடியின் இனிமையான ஒலியில் மயங்கும். இதேபோல மனித மனத்தையும் பிரணவநாதத்தில் ஒடுங்க வைக்கமுடியும்.

- கீதாவாஹினி

"பிரணவம் வியட்டிப் பிரணவம் எனவும், சமட்டிப் பிரணவமெனவும்

இருவகைப்படும். வியட்டிப் பிரணவமாவது அகர, உகர மகரங்களாம். சமட்டிப் பிரணவமாவது அம்மூன்று எழுத்துக்களும் சேர்ந்து ஓம் என்று ஒலிப்பதாகும். வியட்டிப் பிரணவம் அபரப் பிரணவமெனவும், சமட்டிப் பிரணவம் பலப் பிரணவமெனவும் சொல்லப்படும். வியட்டிப் பிரணவத்தில் அகரம், வாய்திறத் தலையும், உகரம் இதழ் குவிப்பதையும், மகரம் வாய்மூடுவதையும் குறிக்கும். இதனால் பிரணவத்தில் இருந்தே சொற்பிரபஞ் சங்களெல்லாம் தோன்றுகின்றன என உயர்ந்தோர் கூறுவர். மேலும் வாய் திறத்தலால் தோன்றும் அகரம் படைத்தற்றொழிலையும், வாய் குவிதலால் தோற்றும் உகரம் காத்தற்றொழிலையும், வாய் மூடுவதாற் தோன்றும் மகரம் அழித்தற்றொழிலையும் குறிக்குமென யோகிகள் கூறுவர். இன்னும் ஓங்காரத்துக்கு வடபுறம் தலையும் தென்புறம் தாளும் விளங்குவதால் அது வடக்கே தலைவைத்துத் தெற்கே நோக்கி வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தியின் வடிவத்தையும் நினைவுபடுத்தி நிற்கிறது.

- செவ்வேள் படையல்கள் பக் 76

22. மென்று கண்டு மெத்தென்றிருந்தார்

திருவாசகப் பெருநூலிலே திளைத்துப் போனவர்களிலே சுவாமிகளும் ஒருவர். இந்த உருவம் அந்தப்பெரிய நூலை மென்று, அனுபவித்து கல்லையும் முள்ளையும் மெத்தையாக்கியது. "கண்ணன் என்னும் மன்னன் பெயரைச் சொல்லச்சொல்ல, கல்லும் முள்ளும் பூவாய்மாறும் மெல்ல மெல்ல" என்று பாடிய கண்ணதாசன் நம் சுவாமிகளை நேரிற் கண்டால் ஒரு காவியமே வடித்திருப்பார். கல்லில் இன்பம் முள்ளில் இன்பம் கண்ட கோண்டாவிற் தேசிகன் நமச்சிவாயக்கனியை மென்றார் திருவாசகத்தைத் தின்று கண்டு தித்திப்பை அனுபவித்தார்.

ஒன்று கண்டேன்இவ் வுலகுக் கொருகனி
நின்று கண் டாயது நமச்சிவா யக்கனி
மென்று கண் டாலது மெத்தென் றிருக்கும்
தின்று கண் டாலது தித்திக்கும் தானன்றே

- திருமந்திரம்

தமிழிலே எழுந்த பக்திவழிப் பனுவல்களுள் திருவாசகத்தின் எதிர்விளைவுகள் அதைப் படிப்போரைக் கேட்டே அறியலாம். மணிவாசகர் உருகினார். மற்றவர்களையும் உருகப்பண்ணினார். அப்பழவடியார் தொகையிற் குடைச்சுவாமிகளும் அடங்குவர். பாக்கியங்கள் செய்த நந்தாத்தவக்குறைகள் முடிப்பவர்கள் இப்பழவடியார்கள். வாதவூரர் அழுதார். சுவாமிகளும் நெஞ்சுருகி நெக்குநெக்கு அழுதார். தென்னவன் பிரமராயர் இறைவனிடம் கெஞ்சினார். குடைச்சுவாமிகளும் கெஞ்சிக் கேட்டார் மற்றவர்கட்காக. தமிழ் கொஞ்சுகிறது பெருந்துறைப்பிள்ளையின் பாடல்களிலே. அன்பு விஞ்சுகிறது. நெஞ்சு பொங்குகிறது. திருவாசகம் எம்மோடு மிஞ்சுகிறது. இதற்கு அதன் தமிழ்தான் காரணம். தமிழை எடுத்துவிட்டால் எது மிஞ்சும்!? தென்னன் தமிழை தென்பாண்டி நாட்டானைப் பாடுவது வாசகம். அவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் ஆனமையால் திருவாசகத்தை உலகத்தவர் படிக்கிறார்கள். இதுவே தமிழ் தந்த விளைவு. "தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்'' பாடியபெருமை மணிவாசகருக்கு உண்டு. நமக்கு அதைப்படிக்கும்

உரிமை உண்டு. ஆதலின் எல்லாரும் திருவாசகம் படியுங்கள் என்றார் சுவாமிகள். திருவாசகம் இரும்பை, கல்லையெல்லாம் உருக்கும் பெற்றியது. எனவே சுவாமிகள் உருகி உருகிப் பாடிய பாடல்கள் ஒலிப்பதிவு நாடாவில் அவரை அறியாமலே பதிவு செய்யப்பட்டுள்ளன.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கி.... - திருவம்மானை

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென்என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினை - திருவேசறவு

கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய் - ஆனந்தாதீதம்

இவ்வடிகள் உருக்கத்தை உணர்த்துகின்றன. மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும உருகிப்பாயுமல்லவா. இஃதே போலச் செந்தமிழோட்டத்துக்குச் சில அத்தாட்சி:

செல்வத்திருப் பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமேவிய சீர்ஆதியே
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த மேவியசீர் அருத்தனே - அருட்பத்து

முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி - அதிசயப்பத்து

அன்னத்தின் மேலேறி ஆடுமணிமயில்போல் - பொன்னூஞ்சல் இறைவனைத் தமிழ்ச் செய்த வாதவூரண்ணலின் அடிச்சுவட்டில் வாழ்ந்த கோண்டாவில் அடிகளின் பாதையிற் செல்வோம்.

23. சித்தர்கள் வரிசையிற் சிறந்தவர்

பதினெண் சித்தர்கள் பற்றிய ஆய்வுகள் விஞ்ஞானக் கண்ணோட்டத்திற் செய்யப்படுகிறது. அவர்கள் யாத்த பாடல்களை முடிச்சவிழ்த்தே பொருள் காணவேண்டும். வெளியிலே விளங்குவது போல் இருக்கும் உட்பொருளோ ஆழமானது. இப்போ இப்பாடல்களைச் சீண்டுவோர் குறைவு. ஆய்வாளர், கல்விவல்லார், மேனாட்டறிஞர் இதைநன்கு கற்று ஆய்வு மேற்கொள்கிறார்கள். பீரோவை அழகுபடுத்தும் நூற்றொகுப்பில் இதுஇடம்பெறலாம். எனினும் கற்றுத்தெரிய வேண்டிய பாடல்கள் இவை. திருமூலர் தொட்டு குணங்குடிமஸ்தான்வரை பலர் இத்துறையை வளர்த்திருக்கிறார்கள். இப்பதினெண்சித்தர்கள் இவர்கள்தான்.

நந்தி, அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியர், பூனைக் கண்ணர்
கத்திடைக்காடர், போகர், புலிக்கையீசர்
கருவூரார் கொங்கணவர், காலாஞ்சி
சிந்தி அழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி
தேரையர், குதம்பையர், சட்டைநாதர்
செந்தமிழ்சேர் சித்தர் பதினெண்மர்பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்து வாழ்வாம்.
- பழம்பாடல்

இப்படி ஆதிச்சித்தர்களைவிட பலர் காலத்துக்குக் காலம் வாழ்ந்துள்ளனர். ஈழத்திலும், இந்தியாவிலும் இவர்கள் போற்றப்படுகிறார்கள். யார் சித்தர், யார் முத்தர், யார் ஞானி என்பதைக் கூறும் பாடல் இதோ:

பேராம் பிரமானந்த மடைந்தோன் சித்தன்
பிரம முப்பைக் கண்டவனே தவசிரேஷ்டன்
கூரான வாசி மறித்தவனே சித்தன்
குறிகண்டுமாயை வென்றவனே முத்தன்
பூராயம் தெரிந்தவனே கிரியை பெற்றோன்
பூவுலகில் வசித்தவனே சரியை மார்க்கன்
நேரான தீட்சை பெற்றோன் சீவமுத்தன்
நிறை சிவயோகம் புரிந்தோன் ஞானியாமே
- கோரக்கர் பிரமஞானம்

இவர்களை அடக்கம் செய்த இடங்களாயமைந்த ஆலயங்கள் மேன்மையொளியோடு திகழ்கின்றன.

அகத்தியர்	- அநந்தசயனம்
கும்பமுனி	- கும்பகோணம்
புலத்தியர்	- ஆவுடையார்கோயில்
திருமூலர்	- சிதம்பரம்
சட்டைமுனி	- சீர்காழி
கோரக்கர்	- திருகோணமலை
கருவூரார்	- திருக்காளத்தி
பதஞ்சலி	- இராமேஸ்வரம்
இராமதேவர்	- அழகர்மலை
அழுகண்ணர்	- நாகபட்டணம்
மச்சமுனி	- திருப்பரங்குன்றம்
நாரதர்	- திருவிடைமருதூர்
மார்க்கண்டர்	- கருவைநல்லூர்
கொங்கணர்	- திருப்பதி
பாம்பாட்டிச்சித்தர்	- திருஞாலம்
புண்ணாக்கீசர்	- நாங்குநேரி
அகப்பேய்ச்சித்தர்	- திருவையாறு
கமலமுனி	- மதுரை
இடைக்காடர்	- திருவிடைமருதூர்
போகர்	- திருக்கழுக்குன்றம்

இவ்வாறான ஆத்மீக வீச்சுள்ள பலர் அடங்கிய இடங்கள் நமது மண்ணிலும் உண்டு. சுவாமிகளின் அடக்கஸ்தானம் கோண்டாவிற் சந்தியில் உண்டு. ஓடும்செம்பொன்னும் ஒக்கநோக்கியவர் இவரின் வீரம்மிக்க ஆத்மீகநிலை தனித்துவமானது. சீத்துக்கள் வித்தைகள் தெரியாதவர். முறறுத் துறந்த முனிபுங்கவர் ஆசையறுத்து தேசம் சுற்றியவர். அடக்கம் உள்ளவர். சமுதாயத்தைப்பற்றியும் பற்றாமல் வாழ்ந்தவர். அவர் தன்னையறிந்த தலைவர்.

எனவே ஈழத்துச் சித்தர் மரபிலே இவர் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

24. ஒரு பக்திமதியின் மனப்பதிவுகள்

யாழ்ப்பாணத்தையண்டிய கோண்டாவில் என்ற கிராமத்தில் அடிக்கடி குடைச்சாமியாரைக் கையிற் குடையுடன் காணக்கூடியதாக இருக்கும். குடை எல்லோரையும் காக்கும் திருவருள். பலர் அவரைப்பற்றியும் அவரின் அருள் பற்றியும் கதைப்பதை எனது காதாற் கேட்டிருக்கிறேன். தெருவிலும் கண்டிருக்கிறேன். அதிகமாக ஊரெழு பர்வதபத்தினி அம்மன் கோவிலுக்கு முன்பு, பலாலி வீதியில் தெரு ஓரத்தில் ஒருபனைமரம் நிற்கிறது. அதற்குக்கீழ் நாகதாழிப்பற்றை கொடிய முட்களுடன் படர்ந்திருக்கும். அதற்குமேல் குடையைப் போட்டுவிட்டுப் படுப்பார். வெயில் மழைபாராரார். பக்கத்தால் யாரும்போனால் முணுமுணுப்பார்.

அவர் ஏறிய நெற்றியும், நீண்டதாடியும், எக்கல் வயிறும், வேட்டியை முழங்காலுக்குமேல் தூக்கிக் கட்டியபடி, கையிற்குடையுடன், கூனி நடந்து போவார். அவரைக் காணும் போதெல்லாம் நான் நினைப்பது எப்படி அவருடன் பேசுவது அழைப்பது என்று பல நாட்கள் கழிந்தன. அவர் தனக்கு விரும்பிய அன்பர்களிடம் போவார். ஏதும் வாங்கிச் சாப்பிடுவார். இரண்டு மூன்று மாதத்துக்கு ஒருமுறைதான் சோறு சாப்பிடுவது வழக்கம். மனிதனாகப் பிறந்து இறைவனாக அருள்பாலிப்பவர். பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன். அவரைக் கண்டால் அன்று ஏதோ நல்ல கருமம் நடக்கும். அவர் எப்ப வருவார், நேரடியாக அருள்தருவார் என்று மனதில் ஒரு ஆதங்கம் உண்டு.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே.

என்ற அவ்வைபாடலுக்கு அவர் வருகை ஒக்கும். குடைச்சாமியாருக்கு தகப்பன் தாயார் சூட்டிய நாமம் கந்தையா. அவர் இறைவனான பின்பு குடைச்சாமியார் என்ற நாமம் வழங்கிவிட்டது. நான் ஊரெழுக் கிராமத்தில் கதிரமலை என்ற இல்லத்தில் வாழ்ந்து வந்தேன். எனது கணவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். பாடசாலைக்குப் போய்விட்டார். பிள்ளைகள்

சின்னஞ்சிறார்கள். அன்று மதியம் 12 மணியளவில் முன்பக்கமாக ஏதோ ஒரு சத்தம் கேட்டது. எனது மூத்த மகள் அம்மா ஒரு தாத்தா வந்து நிற்கிறார் என்று கூப்பிட்டாள். விரைந்துபோய்ப் பார்த்தேன். சீவன்முத்தர் குடைச்சாமியார் குடையுடன் வந்து நின்றார். கதவைத் திறந்தவுடன் வீட்டுக்குள் வந்து கதிரையில் உட்கார்ந்தார். இங்கே வாவென்று கையால் சைகை காட்டிக் கூப்பிட்டார். பலநாள் எனது மனதில் இருந்த எண்ணம் கைகூடி இருக்கு என்று மனம் பூரித்த வண்ணம் சித்தர் முன் சென்றேன். அவர் தனக்குப் பலாக்கொட்டை சுட்டுத்தரும்படி கேட்டார். அந்த நேரம் என்ன செய்வது. எங்கே போய்ப் பலாக்கொட்டை தேடுவது, கொடுப்பது என்ற பதட்டம். உடன் யோசனை வந்தது. முன்வீட்டு ஆச்சிமுத்துப் பாட்டி இருந்தது. அவர்களிடம் பலாப்பழம் இருக்குமென்ற எண்ணம் வந்தது. அங்குபோய்ப் பார்த்தேன். அவ்வளவு நல்லதாக இல்லை. இருந்ததிற் சிலவற்றை எடுத்துவந்து, தணலில் வேகவைத்து, வெள்ளித் தட்டில், வாழை இலை வைத்துக் கொடுத்தேன். சாப்பிட்டு விட்டு தேநீர் தரும்படி கேட்டார். வெள்ளிப் பேணியிற் கொடுத்தேன். பருகிவிட்டு கையால் சைகை காட்டிவிட்டுப் போய்விட்டார். அப்பாடா என்ன சோதனை?

இறைவன் தான் மனித உருவெடுத்து என்னைச் சோதிக்க வந்துளாரோ என்றும், அவர் கேட்டதைக் கொடுக்க முடிந்ததையும் நினைந்து உடம்பு புல்லரித்தது. ஏதோ நன்மை இன்று நடக்கப் போகிறது என்று யோசித்துக் கொண்டிருக்கையில் எனது கணவர் 2 மணிக்குப் பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தார். விஷயத்தைச் சொன்னேன். புன்முறுவல் பூத்த முகத்துடன் பட்டப்படிப்புப் பெறுபேறு. (B.A.) இன்று வந்துவிட்டது. தான் சித்தியடைந்துள்ளதாகவும் கூறினார். முதல்முதல் அவர் கதிரமலைக்கு எழுந்தருளிய அன்றே அவரின் அருள் கிடைத்துவிட்டது. அன்றிலிருந்து இறைவனடி சேரும்வரை எத்தனையோ அற்புதங்கள், எங்கள் குடும்பத்தில் அருள்பாலித்தும் சிறப்பித்தும் உள்ளார். எனது கணவர் பட்டதாரியான பின்பு பல நூல்களைக் கவிதை வடிவிலே வெளியிட்டார் என்றால் சுவாமிகளின் ஆசியே காரணம். எனது மூத்தமகன் A/L படித்துக் கொண்டிருக்கையில் பாடம் கேட்டுப்படிக்க உரும்பிராயில் ஒரு ஆசிரியரிடம் காலையில் போய் வருவது வழக்கம். ஒருநாள் காலை 5 மணிக்குப்போகும்போது வழியில் வைக்கோல் லொறி

அவனை வீழ்த்திவிட்டுப் போய்விட்டது. தோட்டத்தில் வேலை செய்த காசிலிங்கம் அவனைத் தூக்கித் துடைத்துவிட அவன் தொடர்ந்து படிக்கப் போய்விட்டான். காலை ஆறுமணியிருக்கும். குடைச்சாமியார் கதிரமலை வாசலில் வந்து, "மலைபோல் வந்து பிள்ளையை வீழ்த்தியது'' எம்பெருமான் காத்துவிட்டார். பிள்ளைக்கு ஒன்றுமில்லை, என்று உரத்த குரலில் சொன்னார். எனக்கும் கணவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அந்த நேரம் தூக்கிவிட்டவர் வந்து மகன் எங்கேயென்று நடந்ததைச் சொல்லிக் கொண்டு நிற்க மகன் வருகிறான். அப்பதான் குடைச்சாமியார் சொன்னது இதைத்தான் என்றும் - மகன் சுகமே வந்துவிடடான். என்ன சோதனை என்ன அற்புதம். சிலமாதங்கள் கழித்து மகனை வெளிநாடு அனுப்பலாம் என்று தகப்பனாருடன் யோசிக்கையில் அவன் குழந்தை 19 வயதும் ஆகவில்லை எப்படி அனுப்புவது என்று மறுக்கிறார். சிறிய தகப்பனார் இலண்டனில் இருந்து பிள்ளையை அனுப்புங்கள். நான் எல்லாம் பார்க்கிறேன் என எழுதினார். எனக்கும் அவன் வெளிநாடு போய்ப் படித்துப் பட்டம் பெற்றால் பெருமை - மறுபுறம் வாழ்க்கையில் மற்றப் பிள்ளைகட்கு படிக்க வசதியாகவும் இருகும். கணவர் என்னுடன் இதையிட்டு ஆத்திரத்துடன் இருக்கும்வேளை - நானொன்றும் செய்வதறியாது மனம் நொந்து கொண்டிருந்தேன். வழமைபோல் ஒருமாலைநேரம் சாமியார் வீட்டிற்கு வந்தார். உவன் நிற்கிறானா? நீமகனைப் பற்றி யோசிக்கிறாய். அவன் வெளிநாடு போய்விடுவான். என்று திருவாய் மலர்ந்தருளினார். எனக்கு மனதில் ஒருவெளிச்சம் ஏற்பட்டது.

கணவர் வந்தார். இன்று சாமியார் வந்திருக்கிறார் போலை என வினவினார். ஓம் என்றேன். தம்பி மகேஸ்வரன் இருக்கிறான் தானே. அவனுக்குக் கடிதம் எழுதும்படி சொன்னார். எழுதினேன். அவர் வரும்படி அறிவித்தார். மகனும் போய்ப் படித்துப்பட்டம் பெற்று மற்றவர்களையும் கூப்பிட்டார். இன்று விவாகமாகிப் பிள்ளைகுட்டிகளுடன் சந்தோஷமாக இருக்கிறார் என்றால் காரணம் சுவாமிகள் சொன்னது பலிக்கும் என்பதற்கு உதாரணம் எனலாம். இன்னோர் சம்பவம்

அவர் தெருவில் நடந்துசெல்லும் போது வாயில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே போவார். கார்ச்சாரதிகள் யாரேனும் சுவாமிகள் மறித்துக் காரில் ஏறிவிட்டால் அவர் நிறுத்தச் சொல்லும் இடத்திற்றான் நிறுத்துவார்கள். சாமியார் வாகனத்தில் ஏறி

அமர்ந்தால் அன்று அவர்களுக்கு ஏதோ நன்மைகள் பணம் மேலதிகமாகக் கிடைக்கும்.

பிரயாணம் இலகுவாகவும் மனநிறைவாகவும் இருக்கும். எந்தச்சாரதிகளும் மறுக்கமாட்டார்கள். சிலசமயம் கதிரமலை வாசலிலும் கிறீச் என்று கேட்கும். ஓடிப் போய்ப் பார்த்தால் சுவாமிகள் குடையுடன் வருவார். பின்புறமாக உள்ளே வருவார். இரண்டு கதிரைகளை அடுக்கி அதில் படுப்பார். சாப்பாடும் கேட்பார். சாப்பிடுவார். சைவ உணவு ஆரதம்தான் உண்பார். திரும்பப் போய்வாசலில் நிற்பார்.வாகனமேதும் வந்தால் நிறுத்துவார். அதில் ஏறிப்போய்விடுவார். அப்படிப்பலவிதமான சோதனைகள் மக்களுடன் நடத்துவார். இன்றுஅந்தத் தெய்வமே எங்கே?

யாழ்ப்பாணமக்கள் வீடுகளில் ஆடு, கோழி, மாடு வளர்ப்பது வழக்கம். கதிரமலையிலும் வீட்டுத்தேவைக்காகவும், வருமானத்துக்கு ஆகவும் வளர்த்தோம். கோழிகளைக் கூடு அமைத்து அதில் அடைத்து வைத்திருந்தோம். சிலவேளைகளில் அவற்றை உலாவுவதற்குத் திறந்துவிடுவதும்உண்டு. வழமைபோல் 2மணிக்குத்திறந்துவிட்டோம். அடுத்தகாணியில் தோட்டம் போட்டிருந்தார்கள். தற்செயலாகக் கோழிகள் அதற்குட்போய் விட்டன. உரியவர்கள் கிருமிநாசினியைச் சாப்பாட்டோடு கலந்துவைத்திருக்கிறார்கள். எங்கள் கோழி ஒன்பதும் சாப்பிட்டவுடன் இறந்துவிட்டன. எங்களுக்கு விஷயம் தெரியாது.

மூன்றுமணியிருக்கும் நண்பர்கள் வந்திருந்தார்கள். பேசிக்கொண்டு முன்பக்கம் இருக்கையில் ஜீவன் முத்தர் குடைச்சாமியார் வந்து தெருவில் நின்று ஒன்பது உயிர்போய்விட்டது என்று சொன்னார். எனக்கு உள்ளப்பதறல் ஏங்கியபடி என்ன நடக்கப்போகிறது என்று கண்ணீர் ததும்ப நின்றேன். அதற்கிடையிற் கோழிகளைக் கூட்டில் அடைக்க வேண்டுமென்று - வந்தவர்களை அனுப்பிவிட்டு -பின்புறமாகப் போய் கோழிகளைக் கூப்பிட்டால் ஒன்றும் வரவில்லை. தேடிப்பார்த்தால் அடுத்தகாணியில் இறந்து கிடக்கக் கண்டேன். உலகில் இப்படியான மக்களும் இருக்கிறார்கள். இதைத்தான் சாமியார் சொன்னது. உடனுக்குடன் காட்சி தந்த தெய்வம் இப்ப இல்லையே என்ற பசுமையான நினைவுகள் எத்தனையோ எழுதிமுடியாது. எழுத்திலடங்காது. எனது இளையமகள் இல்லத்திலும் சாமியாரின் உருவப்படம் வைத்து வழிபடுகிறார்கள். அவ்ளுடைய திருமணத்தையும் இலகுவாகக் கிடைக்கச் செய்தது அந்த நடமாடுந் தெய்வம்தான்.

அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள்.

அடுத்த அற்புதம்: கணவர் சைக்கிளில் - நான் பஸ்ஸில் எங்கள் உறவினர் வீட்டுக்குப் போயிருந்தோம். அன்று அரசாங்கம் 6மணிக்குமேல் வெளிக்கிடக்கூடாதென சட்டம் போட்டுவிட்டது. கணவர் வீடு திரும்பிவிட்டார். நான் யாழ். பரமேஸ்வராச் சந்தியில் பஸ்சுக்காகக் காத்துநின்றேன். பி.ப. 5:30 ஆகியும் பஸ் வரவில்லை. வேறு சிலரும் நின்றார்கள். 5:45மணிவரையில் ஒரு தனியார் பஸ் வந்தது. அதில் இருக்க முடியாமல் நின்றபடி தான் பிரயாணம். நெருக்கத்தையும் பாராமல் ஏறிவிட்டோம். படையினர் வாகனம் பின்தொடர்ந்து வந்தது. எல்லோரும் இன்றைக்கு நாங்கள் சரி என்ற நிலையில் இருந்தோம். இறைவனை வழிபட்ட நிலையில் 6:00 மணியாகியது. பஸ் ஓட்டுநர் (பிறைவேற்பஸ்) கோண்டாவில் பஸ் டிப்போவுக்குள் பஸ்ஸை நிற்பாட்டிவிட்டார். அவரின் புத்திசாதுரியத்தால் உடனே வாசல் கேற் பூட்டுப்போட்டு பூட்டியாச்சு. படையினர் தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன் பக்கம் போய்விட்டனர்.

அப்போது நாம் எண்ணினோம். விடியும்வரை இதற்குள்தான் இருக்க வேண்டும். எம் குடும்பத்தினர் தவிப்பார்களே என்றுஅந்த நேரம் குடைச்சுவாமிகள் டிப்போ வாசலில் காட்சியளித்தார். அப்போ எல்லோரும் இரு கைகூப்பிக் கும்பிட்டோம். கொஞ்சநேரம் கழித்து டெலிபோன் மணி ஒலித்தது. பஸ் டிப்போ அதிகாரி உத்தரவு பிறப்பித்தார். இரு பஸ்ஸை வடக்குப் புன்னாலைக் கட்டுவன்வரை சேவைக்கு விட்டு அதுவரைபோகிற மக்களை அனுப்பும்படி. உடனே எல்லோரும் போய் ஏறினோம். அவரவர் இடங்களில் நிற்பாட்டினார்கள். நாம் சேமமாய் வீடுசேர்ந்தோம். இதுதான் சுவாமிகளின் காட்சி அனுபவம்.

குடைச்சாமியாருக்கும் உலகத்தாருக்கும் உள்ள அனுபவங்கள் பல. அற்புதங்களும்பல. பூர்வபுண்ணியம் செய்தவர்கள் அறிந்தும் அனுபவித்தும் உள்ளத்திற் கோயிலமைத்தும் கொண்டார்கள். அந்த வரிசையில் நாங்களும் இணைந்து கொண்டோம். ஊரெழுவிற்பல வீடுகள் இருந்த இடம்தெரியாமல் அழிக்கப்பட்டன. எமது இல்லம் சுவாமிகளின் படத்துடன் அப்படியே இருப்பதும் கோண்டாவிலானின் அற்புதம் தான். அந்தமகான் இன்றும் கனவிற் காட்சியளித்து காவல் புரிகிறார் ஓம் சாந்தி சாந்தி.

25. அற்புதமான அந்தக் காட்சி

சுவாமிகள் சமாதி வைக்கப்பட்டபின் நாற்பது தினங்கள் சிறப்பு ஆராதனை. எனவே மாலையிற் பலர் கூடிவிச்சிராந்தியாகச் சுவாமிகளைப் பற்றி உரையாடிக் கொண்டிருப்பர். அன்று வெள்ளிக்கிழமை என்ற நினைவு நானும் அன்பர் வடிவேலவருமாக சுவாமிகளின் சமாதிக்குப் போனோம். மாலைப்பூஜை சிறப்பாக நடந்தது. அற்புத நர்த்தனவிநாயகரை வணங்கிக் குருநாதன் சந்நிதியில் கர்ப்பூர ஆரத்தியையும் கண்டு கண்ணில் ஒற்றிக் கொண்டோம். திருமுறை பாராயணம் செய்தார் ஒருபக்தர். தீர்த்தம், திருநீறு, சந்தனம், குங்குமம் பூஜகரால் வழங்கப்பட்டது. எல்லாரும் பெற்று வீடுதிரும்பினர். நானும் வடிவேலையாவும் அமைதியாய் சமாதி முன்றிலில் அமர்ந்திருந்தோம். உள்ளேயமைந்த சுவாமிகளின்படம், லிங்கம், விளக்கு எம்காட்சியிற்பட்டன. பாணலிங்கம் நிறைய பூக்களால் மூடப் பட்டிருந்தது. அழகான கருஞ்சிகப்புமலர் ரோஜா ஒன்று உச்சியில் இருந்து விழுந்து, நிமிர்ந்து கிடையாய் அமைந்திருந்தது. திடீரென அது எம் கண்ணிற்பட்டது. பூவின் நடுவே சுவாமிகள் குடையுடன் தோளிற் சால்வை போட்டமுழுத்தோற்றத்துடன் திரும்பிய பாவனையிற் காட்சியளித்தார். நான் இக்காட்சியைக் கண்டபோது வடிவேலரும் கண்டிருக்கிறார். இருந்த இன்னும் சிலருக்கும் இக்காட்சி தெரிந்திருக்கு. இதிலே லயித்துப்போய்விட்ட நாம் சிறிது நேரத்திற் புறப்பட்டோம். அச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் தாம் னுபவித்த காட்சிகளைச் சொல்லி அதிசயப்பட்டார்கள். என்ன அற்புதம் பார்க்கின்ற மலரூடும் அவர் அத்துவிதப்படுகிறார். மகான்களின் அவதார மகிமை இப்படி எத்தனை எத்தனையோ?

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய் யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற்கூட்டிய
அதிசயம்கண்டாமே -திருவாசகம்

பார்க்கின்றமவு நீடு நீயே இருத்தி - தாயுமானவர்

26. முற்றும் உண்மை

இம்மகா வாக்கியம் ஒலித்த இடம் நல்லூர்த் தேர் முட்டிப்படி ஒலித்தவர் செல்லப்பாசுவாமிகள். இதை உள்வாங்கியவர் யோகர் சுவாமிகள். மகாயோக சுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள். செல்லப்பனின் சாயலில் வாழ்ந்தவர் கந்தையா சுவாமிகள். கந்தையா சுவாமிகளைத் தொடர்ந்தார் ஒருவர். ஏதும் பெறவல்ல. சுவாமிகளின் இறுதிவேளையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய. ஆனால் பலநாள் அவர் தொடர்ந்தும் பயன்தரவில்லை. காரணம் மனிதவடிவிலே வந்த அவதார புருஷர் அவர். இந்த உடம்பு ஒரு க்ஷேத்திரம் என்பதைக் காலாகாலமாகக் கண்டவர் வரிசையில் இவரும் ஒருவர். திருவுளக் கருத்துப்படி நடக்கட்டுமென நடந்த புங்கவர். எனினும் சுவாமிகளின் உடலம் குகை செய்து வைக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலே இந்த மகரிஷிகள், ராஜரிஷிகள் அரசராய், வணிகராய், ஆண்டியாய் வாழ்ந்தார்கள். எல்லாவற்றையும் தாமரை இலையிற் தண்ணீர் போற் பிறிந்திருந்து பிறருக்கு எதுவும் பேசாமல் வாழ்பவர்கள். எனவே இவர்கள் போக்கையும் வாக்கையும் கைவல்ய நவநீதம் இப்படி வர்ணிக்கிறது.

பேதகன் மத்தால் வந்த பிராரத்த நாநாவாகும்
ஆதலால் விவகாரங்க ளவரவர்க் கானவாகும்
மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிகஞ் செய்யினுஞ்செய்வர்
பூதலம் புரப்பரையம் புகுந்துண்பர் சீவன்முத்தர்

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யினில வாய் விண்விழுது வீழ்ந்தும்
பொன்றின சவம் வாழ்ந்தாலும் புதுமையாய் ஒன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் காட்சி நடுவான சீவன்முத்தர்

இடுப்பிலே நான்குமுழம், அரைஞாணில் கோவணம், தோளிலேதுண்டு, கையிலே குடை இது உலகியலோடொட்டிய தேவை. எனத்திரிந்த சுவாமிகள் கல்லிலும், முள்ளிலும், கனலிலும், அனலிலும், காற்றிலும் உறங்கினார் நடந்தார். ஜனகர், பட்டினத்தார், பத்திரகிரியார் வரிசையிலே நம்மோடு வாழ்ந்த கந்தைய ரிஷியைக் கண்டு பின் தொடர்ந்த பலர் அவரின்

பார்வைக்கு அகப்பட்டனர். வார்த்தைக்கு அகப்படவில்லை. கோடியில் ஒரு வார்த்தைதான் எமக்குக் கோடி காட்டக் கூடியன. ஒரு முனிபுங்கவராய் நாட்டில்நடமாடிய குடைச்சுவாமிகள் யுகயுகாந்தரமாய் நிலைபெற்று விட்டார்கள். அவரது ஜீவசமாதிக் கோயில் அவரின் வரலாற்றைக் காலங்காலமாக வரைந்து கொண்டேஇருக்கும்.

காவித்துணி வேண்டா
கற்றைச் சடை வேண்டா
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துதற்கே
எப்போதும் குரு சரணம்
நினைவாய் நெஞ்சே

- மஹாகவி பாரதி



27. பாதைகளின் பாங்கரில்

சுவாமிகள் மற்றவர் உறங்கையில் விழித்திருப்பார். மற்றவர் விழித்திருக்க அவர் உறங்குவார். இதுதான் சித்த புருடர்களின் நிலை. இம்மேதகு மகான் வீதிகளின் ஓரமாகத் திரிவார். இரவுபகல் இல்லாமல் நடமாடுவார். இயல்பான கோலத்தில் அவர்கள் காட்சியளிப்பார். தன்னையாரென இனம் காட்டாமல் கையிற் குடையுடன் எளிமையான தோற்றத்துடன் வளைந்து வளைந்து குனிந்த நோக்கிற் செல்வார். பலர் இவரைத் தொடர்வர் திரும்பியும் பார்க்கார். ஞானியைக் கொக்காகக் கூறுவர். அதன் நோக்கம், ஒடுக்கம், பார்வை சிந்தனை எல்லாம் மீனிலே இருக்கும். ஒடுமீன் ஓடி உறுமீன்வரக் குத்திக் கொள்ளும். இவ்வண்ணமே ஞானவான்கள் தமது சித்தத்தைச் சிவன்பால் வைத்திருப்பர். எனவே பின்தொடர்ந்தோர் பலர் ஏமாந்து போவர். நெடுந்தூரம் தொடர்ந்தோர் பயன் அடைவர். அவர்கள் பாக்கியசாலிகள். பலரைக் கண்டு ஓடுவார். சிலர்வரும்போது சால்வைத் துண்டால் தம்மை மறைத்து நடப்பார். இன்னும் சிலர் எதிரிடும்போது குடையால் மூடுவார். இவ்வண்ணம் அவரவர் பக்குவக் குறைவுகள் அவர் சித்தத்திற் பளிச்சிடும். வெளியிடங்களில் இருந்து பலர் மோட்டார் வாகனத்தில் அவரைக் காணவருவர். அவரை இன்ன இடத்தில் நிற்பார் என்று சொல்ல முடியாது. எதிர்பாராமற் சந்தித்தவர்கட்கு நல்வாக்குக் கிட்டும். அவராகவே வாகனத்தை மறித்து ஏறி நெடுந்தூரம் போவார். அக்கார்ச்சாரதிகள் பாக்கியசாலிகள். சிலரைத்தானே கூப்பிட்டு அவர்களின் மனப்பிராந்திகளை நிறைவு செய்வார். இடையிடையே வல்லிபுரக்கோயில் செல்வச்சந்நிதி செல்வார். பலமைல் தூரத்தை ஓட்டமும் நடையுமாய்ச் சென்று கடப்பார். சிறப்பாக மக்கிக் கிடங்கு எனக் கூறப்படும் உரும்பிராய்க்கும் ஊரெழுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் அவரைக் காணலாம். ஒருதினம் ஆசிரியர் சண்முகமவர்கள் சைக்கிளால் இறங்கிப் பின்தொடர்ந்தார். சுவாமிகள் திரும்பிப் பார்க்கவில்லை. எனினும் சுவாமிகளின் பாததூளியில் நடக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. இந்த மகானின் போக்கும் வாக்கும் புதுமையானவை. புரிந்தோர் அவரை மதிப்பர். அவருடைய வருகைக்காகப் பலர் காத்திருப்பர்.

அவர்களுடைய இல்லங்கட்குப் போவார். உணவருந்தாதும்

திரும்புவார். அன்போடு புனித உள்ளத்தினர் அளிக்கும் உணவை உண்பார். சிலரிடம் கேட்டும் உண்பார். மென்மையான அவர் குரலைக் கேட்கப்பலர் தவம் கிடப்பர். சாதாரண மானிடச் சட்டை தாங்கி வந்த மகான்களில் இவரும் ஒருவர். சித்து என்னும் முத்தைச் சிந்தாதவர். சித்தமெல்லாம் சிவமயமாய் வாழ்ந்த சுவாமிகள் கோண்டாவிற் சுவாமிகள்; அத்வைத பாவனையில் எம்முடன் நடமாடிய சுவாமிகள் அவதாரபுருடரே.

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவு எனப் பூதம் ஐந்தும்
விளங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால்
அவர்என்பர் கைவி லேந்தி
இலங்கையில் பொருதா ரன்றே
மறைகளுக் கிறுதி யாவார்

- கம்பர்

அலங்கல் என்றால் மாலை, அரவு என்றாற் பாம்பு. அலங்கலில் தோன்றும் பொய்மை அரவு - மாலையில் தோன்றும் பாம்பு என்ற மெய்யான எண்ணம். இதுபோலப் பஞ்சபூதங்கள் ஒன்று சேர்ந்து பொய்யான பிரபஞ்சமென்ற வீக்கமாகி மயங்குகிறதே. அது யாரைக் கண்டால் விலகிப் போய் மாலையான ஈஸ்வரனை மட்டும் தெரியுமோ அவர்தான் ராமச்சந்திரமூர்த்தி. பரம வைணவரான கம்பமகாகவி ஆதி ஆத்ம சொரூபத்தை இப்படிப் புலப்பட அத்வைத பாசையில் பேசி இருக்கிறார் பலநூற்றாண்டு முன்னே.

28. பூரணம் கண்ட புனிதர்

பூரணம் என்றால் நிறைவு என்றுதான் பொருள். எதிலும் நிறைவு காண்பதற்கு ஒரு பக்குவம் வேண்டும். பக்குவான்மாக்கள் நிறைவு கண்டவர்கள். தன்நிறைவு காணப் பல தேசங்கள் முயல்கின்றன. தன்னிறைவு கண்ட சில நாடுகள் மிதமிஞ்சிய தானியத்தைக் கடலிலே கொட்டுகின்றன. எது என்னவானாலும் மனிதமனம் திருப்திப்படாது. இச்சூழ்நிலையில் ஆத்மிகப் பெருவெளியிற் பறந்த பல ஜீவன்கள், ஜீவசமாதி கண்டார்கள். இவர்கள் தம் இறுதி இலக்கு பூரணமடைதல் தான் - பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம் எனப் பாரதி பாடினான். இறைவன் பரிபூரணன். பட்டினத்தார் பூரணமாலை பாடினார். தாயுமானசுவாமிகள் இறைவனைப் பரிபூரணானந்தமே என அழைத்தார். அன்னையும் அன்னபூரணிதான். இந்தப்பரம்பொருளைத் தம்முள் இருத்தி பார்க்குமிடமெங்கணும் பரமனைப் பார்த்தவர் கோண்டாவிற் கந்தையா சுவாமிகள். அவர் பூரணமடைந்தமையை உலகுக்கு அறிவுறுத்தும் அன்னாரது ஜீவசமாதிக்கோயில். யாழ்ப்பாணத்தில் நடமாடிய மகான்களில் இம்மகான் எழுபதுகளில் நம்மத்தியில் ஊடாடினார். அவரது மதிப்பரிய ஒளிவீச்சு அருட்பிரகாசமானது. ஒன்பதைப் பூரண எண் என்பர். தத்துவார்த்திகள் இறைவனை ஒன்பது என்ற எண்ணாகக் கொள்வர். சுவாமிகளின் வாழ்வியற் கூறுபாடுகளும், ஆளுமையும் ஒரு துறவு நிலையையும் தாண்டி துறக்கத்துள் வைத்தமை. அவர்களின் ஆத்ம தரிசனத்தால் அமைந்தது. அடங்கு என்பர். உள்ளத்தொடுக்கமானம், ஒழிவில் ஒடுக்கமாயிற்று. தோற்றத்தில் ஒடுங்கினார். துரியா தீனத்தில் அடங்கினார். இவ்வாறு பூரணமடைந்த குருதேவரின் பாதபங்கயங்களே நம் (திருவடி) நீழல். கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே தருநிழலே நிழல் கனிந்த கனியேயென இறையனுபவம் வடித்த இராமலிங்க வள்ளலார் பூரணன் பற்றிப் பேசுகிறார்.

பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்
கடந்தென தறிவாம் கனமேற் சபைநடு
நடந் திகழ் கின்ற மெய்ஞ்ஞான வாரமுதே

சத்திய அமுதே தனித்திரு அமுதே
நித்திய அமுதே நிறைசிவ அமுதே
சத்தி தானந்தத் தனிமுதல் அமுதே
மெய்ச்சிதா காச விளைவருள் அமுதே
ஆனந்த அமுதே அருளொளி அமுதே
தானந்தம் இல்லாத் தத்துவ அமுதே

திருவருட்பா திருவமுதத்திரட்டு பக் 77 - 78

குருநாதன் சபாரத்தினன் திருவடிகளே துணை

ஈர் எண்நிலையென இயம்பும் மேல்நிலையில்
பூரண சுகமாய்ப் பொருந்தும் மெய்ப்பொருளே
2X8 = 16 ஆம் நிலை
- வள்ளலார்

29. நிறைவு

கூனற் பிறையழகும்
கூவுகின்ற குயிலழகும் - பசுவே
வானத்து முகிலழகும்
வடிக்க வொண்ணாப் பொன்னழகே.

ஓடும் மேகங்களும்
ஓய்வில்லா நதியழகும் - பசுவே
பாடும் பறவைகளும்
பாங்கான குருவிகளும்

கோல மயிலழகும்
கோயிற் புறா அழகும் - பசுவே
நீலக் கடலழகும்
நித்திலத்து திரையழகும்

அல்லி மலரழகும்
அழகான பூவழகும் - பசுவே
முல்லை விரிகையிலே
மூசுகின்ற வண்டழகும்

இலந்தை மரங்களிலே
இருக்கின்ற பொன்வண்டும் - பசுவே
துலங்கு மரங்களிலே
தூங்குகின்ற பனியழகும்

வானத்து மேலாப்பில்
வகைவகையாய் மீனினங்கள் - பசுவே
கானத்து மரங்களிலே
காணுகின்ற பூங்கொத்தும்

கண்ணுக்கு இனிமையன்றோ
கருத்துக்கும் இதமன்றோ -பசுவே
மண்ணுக்கு அழகளிக்கும்
மாபெரிய அதிசயங்கள்

நள்ளிரவில் நாறுகின்ற
நல்லமலர் களுடன் - பசுவே
புள்ளி மயில்வாகனனை
போற்றிடுவோம் நாமென்றும்

தென்னங் கீற்றழகும்
தெய்வீகப் பாட்டழகும் - பசுவே
கன்னங் கரிதான
காக்கா இனத்தழகும்

வானத்து வெளிகளிலே
பறக்கின்ற பறவைகளும் - பசுவே
மானொத்த கண்ணுடைய
மங்கையரின் பார்வைகளும்

தேனொத்த தெம்மாங்கின்
தெவிட்டாத இசையழகும் - பசுவே
கானத்தில் வாழுகின்ற
கரிக்குருவிப் பாட்டழகும்

பொய்கையிலே மலர்கின்ற
போதுகளின் தனியழகும் - பசுவே
வெய்யிற் கொதுங்குகின்ற
வேப்ப மரத்தழகும்

இயற்கை எமக்களித்த
இனிய கொடைகளன்றோ - பசுவே
செயற்கை தனிற்காணும்
செவ்விகளும் நேர்த்தியடி

கானங்கள் பாடுகின்ற
வானம் பாடிகளும் - பசுவே
தேனை உண்ணுகின்ற
சிட்டுக் குருவிகளும்

வண்ணத்துப் பூச்சிகளும்
வடிவான தம்பலமும் - பசுவே
கண்ணைக் கவருகின்ற
கருநீலப் பூவினமும்

நெய்தல் மலர்களுடன்
நேயமிகு குவளைகளும் - பசுவே
கொய்யாக் கனிகளும்
குவிந்திருக்கும் பழவகையும்

சம்பங்கிப் பூவழகும்
சாதிலிங்க மலரழகும் - பசுவே
துன்பங்கள் தீர்க்கின்ற
தூதுவளை மலரழகும்

கொத்தாய் அலர்கின்ற
கொன்றை மலரழகும் - பசுவே
முத்தாய் மலர்கின்ற
முல்லை மொட்டழகும்

றோஜா மலர்ந்திருக்க
நோக்கும் மனத்தழகும் - பசுவே
ராஜ மல்லிகையும்
இருவாட்சி சண்பகமும்

மாதாளம் பழத்துள்ளே
மனதைக் கவர்கின்ற -பசுவே
செவ்விய முத்துகளும்
சேர்ந்திருக்கும் சிறப்பழகும்

செவ்விளநீர் குலைகளிலே
சேர்ந்துள்ள இளநீரும் - பசுவே
செவ்வந்தி விரிகையிலே
சேர்கின்ற நிறவழகும்

நாட்டார் பாடல்களில்
நாம்தோயும் பாட்டழகும் - பசுவே
கேட்டார் மகிழ்கின்ற
கிளிகளின் கீச்சொலியும்

என்ன வென்று சொல்வேன்
என்னருமைப் -பசுவே
தென்னன் தமிழ்போன்றே
தெவிட்டாமல் இனிக்கின்ற

தெய்வீக மணங்கமழும்
தேவாரப் பண்ணொலியும் - பசுவே
உய்வோம் நாம்கேட்டு
உயிருள்ள வரையாதல்

பொன்னான பொழுதுகளை
வீணாகப் போக்காமல் -பசுவே
கண்ணான கண்ணனுடன்
கார்த்திகையின் மைந்தனையும்

பெண்ணாவாள் பார்வதியும்
பெட்பான சிவனுடனே - பசுவே
கண்ணாலே காண்கின்ற
கைகுவித்து வணங்குவமே

போதலர்ந்து மலர்கையிலே
பொழுது புலர்கையிலே - பசுவே
நாதலயம் மிதந்தே
நற்காற்றில் நடைபயில

நாதலயிப்பி லெங்கள்
நல்நெஞ்சும் -பசுவே
போதெனவே தான்விரிந்து
பொழுதெல்லாம் மகிழ்ந்திடுமே

வெள்ளை நிறமல்லிகையும்
வேங்கைமரப் போதுகளும் - பசுவே
அள்ளிச் சொரிகின்ற
அழகான அலரிப்பூவழகும்

நீலமயில் அழகும்
நீலாம்பர அழகும் - பசுவே
கோலம் போடுகின்ற
நண்டின் நடையழகும்

கொள்ளை இன்பம்தருகின்ற
கோகனக மலரழகும் -பசுவே
வள்ளைக் கொடியழகும்
வாகான காதழகும்

பொள்ளென்று பறக்கின்ற
பூவைகளின் கழுத்தழகும் - பசுவே
தெள்ளு தமிழ்ப் பாவழகும்
தெவிட்டாத தேனழகே

கிள்ளை மொழியழகும்
கீழ்வானத் தொளியழகும் - பசுவே
வெள்ளை விளிசங்கின்
விளைவான ஒலியழகும்

தெள்ளும் தமிழழகும்
தேவிபதம் மறவாத - பசுவே
உள்ளத் தொளியழகும்
ஓங்காரத் துள்ளழகே

நாளும் பொழுதுமெங்கள்
நன்மைகளும் தீமைகளும் -பசுவே
ஆளும் பொருளு மத்தனையும்
அமைதியைத் தருமோடி

நெஞ்சும் தளரஎங்கள்
நிம்மதியும் குலைகையிலே - பசுவே
பஞ்சம்படை வந்தாலும் அழகைப்
பார்த்து மகிழ்வோமடி

அழியாத அழகுகளை
ஆனந்த லகரியை - பசுவே
பொழியாது பொழிகின்ற
பொற்பான இயற்கைதனை

மெச்சும் மனத்தழகை
மேதினியில் இழக்காமல் - பசுவே
அச்சம் ஏதுமின்றி
அழகாக ரசிப்போம்

இரசனையின் சாரலிலே
இனிய மந்தகாச நிலவினிலே - பசுவே
பரமனை நினைந்திருப்போம்
பக்குவங்கள் அவன்தருவான்

பாதச் சிலம்பொலியும்
பரதநாட்டியமும் -பசுவே
நாதத் தொனியழகும்
நவநாத மேன்மைகளும்

கூத்தனின் கூத்தழகும்
கொட்டும்நடராஜன் -பசுவே
நித்தனின் நிர்த்தனமும்
நித்தியத்தின் தத்துவமே

பாதிமதி வேணியனும்
பாங்கிலுறை பார்ப்பதியும் - பசுவே
சோதிவடி வானவனின்
சுந்தரப் புன்னகையும்

வடிவேலன் வருமழகும்
வள்ளி தேவயானையுடன் - பசுவே
மோடி கிறுக்குமடி
மோகனமும் கிறுக்காச்சுதடி

மோனக் குளத்தருகே
முட்டிவரும் காற்றாலே - பசுவே
தேனொத்த சொல்லாலே
தேகமெல்லாம் சிலிர்க்குதடி

எம்மையுமே ஆட்கொண்ட
ஏரம்பன் பார்வையினால் - பசுவே
சும்மா இருந்தோமடி
சுகமெல்லாம் பெற்றோமடி

இம்மை மறுமையெல்லாம்
இதயத்தில் உண்டென்றே - பசுவே
நம்மையுமே ஆண்டஅந்த
நற்குருவும் நவின்றானடி

எங்கள் குருநாதன்
இயம்பிவைத்த அந்த - பசுவே
சங்கின் குரலோசை
சந்தமும் துணையாமடி

கந்தையன் பொற்பதங்கள்
கண்டாலே சாந்தியடி - பசுவே
முந்தை வினையெல்லாம்
மூழ்கி ஒழியுமடி

எந்தை குருநாதன்
எப்பவோ சொன்னானடி - பசுவே
கந்தையன் திருக்கதையை
கவினுறவே எழுதுஎன்று

அன்று சொன்னவார்த்தை
அநவரதம் என்மனதில் - பசுவே
நின்று நிலைபெற்று
நினைப்பாய் முடிந்ததடி

திருவருளை எண்ணிநிதம்
திருப்பணியை நிறைவேற்ற - பசுவே
குருவருளை வேண்டினதால்
குறிப்பும் நிறைவாச்சு

எந்தை குருவாழ்க
என்தாயும் உடன்வாழ்க - பசுவே
பந்தமெலா மறுத்த
பரமனடி வாழ்க நன்றே

30. திருவாசகத் தொண்டு

திருவருளையும் குருவருளையும் நேர்ந்து, நுணாவிப் பேனையைக் கரத்திற் தீண்டியபோது, இப்படியொரு ஆக்கம் செய்யெனச் சீவசாட்சி சொன்னபடி இவ்வடிவம் உருவானது. திருவருள் திறத்துக்குத் தேவாரம், குருவருட்டுணைக்குத் திருவாசகம் என்பர். இறைவன் உரையே தம் உரையாகப் பேசினர் மூவர். இது தேவாரம் என வழங்கப்பெறும். குருவாய் வந்த திருப்பெருந்துறையான் வழி எழுந்தது திருவாசகம். தேவாரம் மூவர் தமிழ். திருவாசகம் தேவர் தமிழ். தமிழ் எனின் அன்பு, அழகு, இளமை, மொழி, எனப் பொருள்படும். மூவர்சொன்ன தமிழ் செய்தலும், அகப்பொருள்கூறும் களவு என்நுதலிற்றெனின் தமிழ் நுதலிற்றென்பதும் அன்பு செய்தலே தான். அன்பு ஜீவமூலம். ஜீவிய மூலம் இறைவனை, அன்பு செய்த பக்திமொழி தமிழ் ஒன்றே தான். இத்தமிழால் இயன்ற திருவாசகம் இன்பத் தமிழுக்கொரு இலக்கியம் எனலாம். இலக்கியம் கண்டு தான் இலக்கணம் செய்தார்கள். இலக்கியம் இலட்சிய நோக்குடையது. இவ்விருபடைப்பும் இலக்கிய இலக்கணம் -கொண்ட மொழி ஊடகம் தமிழ். தமிழில் எழுந்த நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் உள்ளிட்ட காவியங்களைப் படிப்பவர் கண்ணீர் சிந்தியதைக் கண்டிலம். ஆனால் பக்திப் பனுவலான திருவாசகம் ஓதுவோர் கண்ணீர் வடித்தனர். இல்லை வடிந்தது. மட்டுமன்றி ஆனந்தமும் எய்தினர். இந்த உருக்கமும், மகிழ்வும் இரு சிறந்த மெய்ப்பாடுகள். எனவே உயர்ந்த இலக்கியம்தான் திருவாசகம். இதைத் தந்தவர் திருவாதவூரர். இதைப் பேணிக்காத்து பெருமைப்படுத்திப் பெருமைபெற வேண்டியோர் தமிழர், சைவர். எனினும் முதற்பேணி, அழுது, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் போப்ஐயர். ஒரு மேலைநாட்டவர், மெய்க்கிறீத்தவர் போப் அவர்கள். அவர்களைச் சைவமரபு குலையாமல் ஐயர் என்றனர். இந்தப் பாதச் சுவட்டில் பின்வந்த நிரம்ப அழகியதேசிகரும் திருவாசகத்தால் ஈர்க்கப்பட்டுக் கண்ணீர்வார நின்றார். எனின் இவ்விரு மேதைகளும் திருவாசகத்தின் தொண்டர்தான். காலத்தின் கோலம் மாற்றமடைய சமயம் சிறிது தளும்புவதும் இயல்பே. இச்சரிவை நேர்செய்ய நாம் தொண்டாற்ற வேண்டும், தொண்டர் களாக மாற வேண்டும். தன்நலமற்ற தூய சேவையே தொண்டு.

எவ்வித பயனும் கருதாச் சேவை இது. கீதை கூறும் பலனை எதிர்பாராத மானிட கைங்கரியம். தேவ கைங்கரியம், சமூக கைங்கரியம், சமய கைங்கரியம், கல்விக் கைங்கரியம் என இது விரியும். எவ்வழியிலும் புகழ்விளங்கி ஒளிர நிறுத்தாமல் இது மேற்கொள்ளப்படும். இதுவே தன்னிழப்பு. புகழ் தன் முனைப்பு எனலாம். ஆழ்வார் ஆய்வு மையம், வள்ளுவர் ஆய்வுமையம் என்றெல்லாம் தாபன இரீதியிலே தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சமநோக்கில் திருவாசக மையமும் தொண்டும் வேண்டப்படுவது காலத்தின் கட்டாயமே. உண்மைச் சைவ சமயிகள் இதை உணர்வர். உணராதவர்க்கு உணர்த்துவதும் நம்கடமை. என்கடன் பணி செய்தல் இது ஒரு சிவதொண்டு. யோகர் சுவாமிகள் சிவதொண்டன் நிலையம் அமைத்ததும் சமயம் பேணுகைக்காகவே, திருமுறை பாதுகாவலுக்காகவே. சுந்தரர், நம்பியாண்டார்நம்பி, தெய்வச்சேக்கிழார் தொண்டர் சீர் பரவினார்கள். யார் தொண்டர் - தொண்டு செய் வோர் தொண்டர். இத்தொண்டர் பெருமையை வெளிப்படுத்த இளமுருகனார் அவ்வையின் மனக்குளத்தில் ஒரு சிறுகல்லை விட்டெறிந்தார். நாவல் மரத்தில் அவன், நீழலில் ஔவைப்பிராட்டி, அரிது, பெரிது, இனிது கொடிது எது என வினவினான். செந்தமிழ் வழிந்தது பாடலாக இனிது இனிது ஏகாந்தம். இனிது, கொடிது கொடிது வறுமை கொடிது, அரிது அரிது மானுடராதல் அரிது என்று பேசிய அனுபவமாக பெரிது பெரிது புவனம் பெரிது எனத் துவங்கினாள். முடிபு பாட்டின் இறுதியில் முத்திரைக் கவியாயிற்று.

பெரியது கேட்கின் ஏரிவடிவேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமும் நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்திவந்தோன்
அலைகடலோ குறுமுனி யின்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியில் சிறுமண்
புவியோ அரவினிற் கொருதலைப்பாரம்,
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவனோடு தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே. - ஔவையார்

நம்மாழ்வார் தன்னைத்தாழ்த்தி - தன்னுடைய நிலையை எண்ணிப்பேசும்

பாசுரங்களிற் தொண்டன் சீர்சிறப்பு கவிதைவடிவில் வெளிவருகிறது.

"தெரிதல் நினைதல் எண்ணல் ஆகாத் திருமாலுக்கு,
உரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்"
- திருநாலாயிரம் 3325

கொண்டமூர்த்தியோர் மூவராய்க் குணங்கள்
படைத்தளித்துக் கெடுக்கும், அப்
புண்டரீகக் கொப் பூழ்ப்புனற் பள்ளியப்பனுக்கே
தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்
சொல்லா யிரத்து ளிப்பத்தும்,
கண்டு பாடவல்லார்வினை போம்கங்கு லும்பகலே
மேலது 3347

திருவிசைப்பா ஆசிரியர் தன்னை, தொண்டனேன் விளம்புமா விளம்பே என நைச்சிய பாவத்திற் பாடுகிறார்.

இராமநுஜர் பெரியவர், ஒருமுறை திருமலைக்கு எழுந்தருளி னார்கள். இராமநுஜர் உடைய வரவை அறிந்து, பெரிய திருமலை நம்பிகள், அப்பனுடைய தீர்த்தம், துளசிமாலை முதலியவற்றை இராமநுஜருக்கு அளித்து வரவேற்றார். இராமாநுஜர் உடனே பெரிய திருமலை நம்பிகளைப் பணிந்து நின்று "தேவரீர், இங்கு எழுந்தருள வேண்டுமோ" சிறியவராகிய யாரேனும் ஒருவரை அனுப்பலாகாதோ"? என்று கேட்டனர். பெரிய திருமலை நம்பிகள், "இங்கு ஆராய்ந்து பார்த்தபோது என்னிலும் சிறியாரைக் கண்டிலேன்" என்றார். இராமாநுஜர் அதனைக் கண்டு வியப்பெய்தி அவருடனும், மற்றவர்கள் உடனும் சென்று கல்வேலியின் பக்கத்தைச் சேர்ந்தார்.

குருபரம்பரைப் பிரபாவம் பக்கம் 124
ஆழ்வார் ஆய்வு மைய வெளியீடு

எப்டி இருக்கிறது பெரிய நம்பியின் பிரபாவம் - சிறுத்தொண்டராகத் தம்மை எண்ணும் மனோபக்குவம் எவ்வளவு உயரியது. என்றும் பணியுமாம் பெருமை என்பது வள்ளுவம். தொண்டரின் கீர்த்தி பெரியபுராணம் பேசுமாறு இது.

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம்குணமிக்கார்
- சேக்கிழார்

ஒன்பது திருமுறைகள் இசைப்பாடல்கள். இவற்றுள் திருவாசகம் நெஞ்சையும், ஊனையும், உயிரையும், உருக்கும் பெற்றியது. வாசகத்துடன் நாம் பேசினால் திருவாசகம் நம்முடன் பேசும், இறைவனோடு நம்மைப் பேசவைக்கும். இறைவனும் நம்மோடு பேசுவான். இத்தூய திருவாசகம் சைவசமயிகளின் நாவிலே பயில வேண்டும். பக்தி நெறியை வளர்த்து, அநுபூதியை அளிக்க வேண்டும். இப்பாங்கிலே கொழும்பு சைவநீதி சஞ்சிகை ஆற்றும் தொண்டு, திருவாசகச் சிந்தனைகளாய் வெளிவருதல் மேலாந்தரம் உடையது.

திருவாசக நெறியிலே பலர் தோய்ந்து திருத்தொண்டாற்றினர். திருவாசக மணி தமிழகத்திலும், திருவாசகசுவாமிகள் ஈழத்தமிழ் மண்ணிலும் பெரும்பங்களிப்புச் செய்துள்ளனர் இன்னொருவர் குடைச்சுவாமிகள்.

ஒல்லும் வகையான் அறவினை ஒலாதே
செல்லும் வாய் எல்லாம் செயல் - தமிழ்வேதம் 30

எனும் குறளுக்கு இலக்கிதமாய் நாம் தொழிற்பட வேண்டும். ஒல்லும் வகையான் - தத்தமக்கியலுந்திறத்தான் - பரிமேலழகர்

அண்மையிலே ஒரு திருவாசகப் பிரியர் நேசேந்திரன் அவர்கள் தாயின் நினைவாக, திருவாசகம் முழுமையையும் நூலாக்கி, செவ்விதாய் வெளியிட்டு வழங்கி உள்ளார். இப்பாணியிலே இன்னும் பல தொண்டுகள் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றன. இது இலவச வெளியீடாகும். (கொழும்பு) இலவச நூல்

வெளியீடு, செம்பதிப்பு விளக்கமுறப் பாடல்களை வெளியிடல், நுண்பொருள் உரைத்தல், திருவாசகப்பற்றை வளர்த்தல், வகுப்புகள் மேற்கொளல், மாணவர்களை ஊக்கிப்பரிசு வழங்கல், சொற்பொழிவாற்றல், இசைவல்லார் மூலம் பாடல், ஒலியிழைநாடா வெளியிடல், மனனஞ் செய்தல், சற்சங்க ஒன்று கூடல், விளக்கம் செய்தல், கதாப்பிரசங்கம் செய்தல், மணிவாசகர் பற்றிப் பிரபந்தங்களை தக்கோரைக் கொண்டு பாடுவித்து வெளியிடல், முற்றோதல், ஆய்வுமையம் அமைத்தல் போன்ற பலதுறைகள் மூலம் ஒவ்வொருவர்க்கும் திருவாசக வாசனையை ஊட்டி, அடுத்த தலைமுறைக்கும் இது ஒரு முதுசொம் என்ற உறைப் பான உரத்த சிந்தனைகளை வழங்குவதாகும். இதற்கப்பாலும் யோசித்து ஆவன செய்ய அறிஞர்கள் முன்வருவார்களாக.

வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூர் ஏறேநின் பொன் அடியும்காண்பேனோ"

- தாயுமானார்

31. குருதேவர் கோண்டாவில் கந்தையா சுவாமிகள்

ஈழத்தைச் சிவபூமியெனப் போற்றியுள்ளார் திருமூலர். இந்த ஞானபூமியில் வழிவழி வந்த அநுபூதி மகான்களுக்குக் குறைவேயில்லை. மகாகவி பாரதியார் போற்றும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளில் இருந்து சரியாக ஒரு நூற்றாண்டு காலத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள். ஞானபரம்பரையில், சின்மயானந்த சுவாமிகளின் கீழ்க் கன்றாக, சாஜன் சுவாமிகள் நின்றார்கள். அவர்களின் வழி கனகரத்தினம் சுவாமிகளும், மகாதேவ சுவாமிகளும் புகழ்பூத்து நிற்கின்றார்கள். மகாதேவ சுவாமிகளிடம் ஆசாரிய அனுபவம் பெற்றவர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள். மற்றவர் தவத்திரு. கோண்டாவில் கந்தையா சுவாமிகள். கோண்டாவிலில் உதித்தமையால் கோண்டாவிற் சாமி என்றும் கையில் குடையுடன் திரிந்ததால் குடைச்சுவாமி என்றும் சொந்தப் பெயரால் கந்தையா சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார்.

எந்நேரமுஞ் சித்தம் இறைவனருட் குடைக்கீழ் இருக்கின்றதென்ற நினைப்பும் அந்த நிழலின்கீழ் இருப்பதால் எவ்வித குறையுமில்லை என்ற உணர்வும் கந்தையா சுவாமிகளின் குடைக்கோர் தத்துவமாகும். சுருங்கிய குடை, இறைவன் தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம் என்பதைத் துலாம் பரப்படுத்துகிறது. மட்டுமன்றி, புலனொடுக்கம் வீரஞானியர்க்கோர் வெற்றித்தூண் என்பதையும் குறிப்பாகக் காட்டுகின்றது. இறைவனருட் குடைக்கீழ் எல்லோருமின்ப நிறைவுற்று வாழ்க நிதம் என்னும் இலட்சியம் இவர்களுடைய வாழ்வின் ஊன்றுகோலாயிற்று. எனவேதான் அருள்பார், அருள்பார், அருள்தெரியும் பார் என்று சதா சொல்லிக் கொண்டே இருப்பார்.

1897ம் சுவாமிகள் அவதரித்தார். உள்வளைந்த வடிவம். முழங்கால்வரை இடுப்பில் ஓர் நான்கு முழம் தோளிற் சால்வை, கையில் குடை தாடியுடன் வளர்ந்த சிகை.

அவருடைய மகாவாக்கியங்கள் அருள்வடிவானவை.

"அருள்வான் அருள்வாக்கு"
"அறிவான் அருள்வாக்கு"
"அருள் பார், அருளொளி பார்"

"அருள் தெரியும் பார்"
"எம்பெருமான் நடாத்துவார்"
"எம்பெருமான் உணர்த்துவார்"
"நீ எது சரியென்று நினைக்கிறாயோ அதன்படி நட"
"வேறொருவரையும் எதிர்பாராதே"

திருவாசகத்தில் தீர்ந்த ஞானி. மகாசமாதியடைவதற்கு முதல்நாள் சென்னிப்பத்தையும், நந்தன் கீர்த்தனையையும் படித்துக் கொண்டிருந்தார். சிவவிளைவை வேண்டி நின்றாரென்பதைச் சொல்லாமற் சொல்லி விட்டார். வாரா நெறிக்குத் தம்மை வழிப்படுத்திய சுவாமிகள், பிங்கள வருஷம் மாசி மீ 2ம் திகதி (14-02-78) செவ்வாய்க்கிழமை கார்த்திகை நட்சத்திரத்திலன்று மகாசமாதி எய்தினார்கள். அன்று முழுமையும் "அருள்பார்பாஞ்சசன்யம்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார். "இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறு மணித்தியாலங்கள் தான் இருப்பேன்" என்று வடிவேல் சுவாமிகளுக்குக் கூறிய வண்ணம் சமாதிநிலை கூடினார்கள். இவர் துறவுநிலை நான்கனுள் "பகூதன்" என்னும் சந்நியாசம் கொண்டவர் "யாதுமூரே யாவருங் கேளிர்" என்று வாழ்ந்தவர்.

தினமும் ஏழு கிராமங்களைப் பாதங்களால் நடந்து புனிதமாக்கியவர். நயினாதீவு முத்துக்குமாரசுவாமிகள், "இவன் பின்னுக்கு நல்லாய் இருப்பான்" என்று கந்தையா சுவாமிகளுக்கு அருளாசி கொடுத்தபடி புகழ்பூத்து நின்றார். காயஉபாதியைக் கடந்து விறகின் மேலும், வைக்கோலிலும், ஈச்சம்பற்றை மறைவிலும், மண்ணின் மேலும் நித்திரை செய்வார். விபூதி, உருத்திராக்கம், இயமநியமங்கள், நேமநிட்டைகளென்ற சங்கற்பமெதுவுமே இல்லாத மகான்தான் சுவாமிகள். பேச்சினாலும், ஏச்சினாலும், குடையடி யாலும், திருவடித் தீட்சையாலும், அருள்நோக்கினாலும் அடியார்க்கு வாழ்வளித்தார்.

கோண்டாவில் குமரகோட்டம் சுவாமிகளின் பிறந்த இடம். தந்தையார் நாகேந்திரர், தாயார் ஆச்சிப்பிள்ளை. பயிர்த் தொழிலை உயிர்த்தொழிலாகக் கொண்டவர். வேதாந்த மடம் மகாதேவ சுவாமிகளிடம் முறையாகக் கற்றவர். திருவாதவூரடிகள் புராணத்துக்கு உரைசொல்வதில் வல்லவருங்கூட. வடிவேல் சுவாமிகள் இவருடைய உடன்மாணாக்கர் ஆவர். முப்பதாம் வயதளவில் இல்லறத்திற் புகுந்து, சில ஆண்டில் இல்லாள் உயிர் நீத்தபிறகு முற்றத் துறந்த முனிவரானார். நாட்டிலே

இறைவனைக் காணாமல் கூட்டிலே குருவைக் கண்டார். ஓர் அன்பர், சுவாமிகள் சமாதி கூடவும், கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்துக்கருகில் சமாதி வைக்கவும் கனவு கண்டதுபோல், 16-02-78ல் சமாதி வைக்கப்பட்டது. சுவாமிகளின் சமாதிக் கோயில் பூர்த்தியாகி 14-03-78ல் முதலாவது குரு பூசையும் நடைபெற்றது. மிருகசீரிடம் சுவாமிகளின் ஜனன நட்சத்திரமாகும். செல்வச் சந்நிதி, நல்லூர், கதிர்காமம், வல்லிபுரக் கோவில் முதலிய க்ஷேத்திரங்களிலெல்லாம் சித்தர்களின் சமாதிகளுண்டென்றும், அதனாலேயே அவை கீர்த்தி மிக்க தலங்களாய் மிளிர்கின்றன என்னும் நம்பிக்கை நம் நாட்டில் பரவலாக இருப்பதை எல்லோரும் அறிவர். அவ்வாறே சுவாமிகளின் சமாதி கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்டது.

பங்கயப் பூம்புனல் குடைந்தாடும் மகளிர் போல சுவாமிகளும் உள்ளக் குளத்திலே குடைந்தாடி, இறைவனை அகமுகமாகக் கண்டார் என்பதற்குக் குடையொருசின்னமாகும். சிவப் பொலிவு ததும்பி வழியும் களைகட்டிய முகபாவம்; ஒளிதுலங்கும் திருமேனி ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் பான்மை; கூடுமென்பினில் கும்பிடும் கொள்கை; ஞான ஒளி வீசும் நயனங்கள்; இகழுக்கும் புகழுக்கும் கட்டுப்படாத போக்கு; ஆயிரம் பிறை கண்ட அத்துவித தத்துவஞானி. செத்தாரைப்போலே திரிந்த சீவன் முத்தர். கருவி கரணங்களின் சேட்டையின்றி, இந்திரிய வயம் மயங்கித் திரியாமல் திருவருள் ஒன்றினால் மட்டும் வழிநடத்தப்பட்டு, தனது திருப்பாதங்களால் தேசமெல்லாம் நடந்து நாட்டைப் புனிதமாக்கி, பொங்கியெழும் அன்பு வழியில் எல்லார் உள்ளங்களிலும் அருளொளியைப் பரப்பி நிலைத்து நிற்பவர். காட்சிக்கு எளியவர் கருணைக்குப் பெரியவர். பார்ப்போர் பைத்தியகாரனென்று சொல்லும்படிக்கு இறைவன் பித்தேறித் திரிந்தார். அகப்பற்றையும், புறப்பற்றையும் அறவே ஒழித்து, புறநோக்கற்று, அகநோக்குடன் வாழ்ந்தார். இறைவனுடைய எழிலார் வடிவை, தன் திருவுளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து ஆனந்த வெள்ளத்திற் திளைத்து இடையறா இறையன்புடனும், குறைவிலா நிறைவுடனும் வாழ்ந்தவர்தான் குடைச்சுவாமிகள்.

ஐம்புல ஒடுக்கமும், சுவைகளை வென்ற சுருதியும் இவருக்குக் கைவந்த நிலையில் காயமாயமற்று, தாமரை இலைமேற்றண்ணீர் போற் பிரிந்திருந்தார். எந்நேரமுந் தன்னை "ஏழையடியவன்" என்றே சொல்லிக் கொள்வார். சுமார் நாற்பது ஆண்டுகட்கு

மேலாகத் தன்னையோர் சிவசொரூபியாக்கி தெய்வநியையில் நடமாடினார். "பொய்த் தன்மைத் தாய போர்வையை மெய்யென் றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டேன்" என்னும் சுந்தரர் வாக்குக்கு இலக்கியமானவர். சுவாமிகள் சித்தவிகாரந் தெளிந்த பளிங்கு மாமண்டபத்தில், இறைவனைக் கண்டு தெளிந்த அநுபூதி நிலையை அன்பர்களுக்கெல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருப்பார். முடிவிலாத சிவபோகம் விளைந்து முறுகிய நிலையில் சமாதி அடைந்தார்கள். மூன்று தினங்களாய் சுவாமிகளின் சடலம் பொன்னொளி விட்டுப் பிரகாசித்தது.

திருவாசகத்தையே தனது மூச்சாகவும், பேச்சாகவும் கொண்டவர் தவத்திரு சபாரத்தினம் அடிகளார். இவர்களைத் திருவாசகச் சாமியென்றே பிரபந்தங்கள் போற்றுகின்றன. அவர்களே குடைச்சுவாமிகளின் வரலாறொன்றை எழுதவேண்டுமெனத் தமியேனுக்குப் பணிப்புரை வழங்கினார்களென்றால் திருவாசகச் சுவாமிகளுக்குக் குடைச்சுவாமிகள் மீதிருந்த ஆராத அன்புதான் என்னே! மதிப்புத்தான் என்னே! பெரிய நகுலேஸ்வரர் என்றழைக்கப்படும் பெரியாருடன் கோண்டாவிற் சுவாமிகள் மிக்க ஈடுபாடுடையவர். அவர்களைப் பல இடங்களிற் கௌரவித்துள்ளார். சோதி ஸ்வாமிகள் சிறந்த சிவபக்தர். அவர்களையே வீழ்ந்து வணங்கி அடியார் பெருமையை அயலவர்களுக்கு அறியச் செய்தவரும் கோண்டாவிற் சுவாமிகளே.

உடுப்பிட்டியிலே சிதம்பரப்பிள்ளை என்றோர் சித்தம் தெளிந்த ஞானி இருக்கிறார்.

கந்தையா சுவாமிகளுக்கும், அவருக்கும் போக்கிலே வித்தியாசமே இல்லை. குரு நமச்சிவாயரும், குகைநமச்சிவாயரும் ஒருவரையொருவர் மதிப்பதுபோல, சிதம்பரப்பிள்ளையைக் கந்தையாவும், கந்தையாவைச் சிதம்பரப்பிள்ளையும் மதிப்பது வழக்கம். இவ்வாறு பல சாதுக்களாலும், ஞானிகளாலும் போற்றப்பட்டவர் சுவாமிகள்.

சுவாமிகளின் அற்புதமான நடமாட்டங்கள் பலப்பல. எனினும் அடியார்கள் வாயிலாக அறிந்த சிலவற்றைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு அருகாமையில் ஓர் படப்பிடிப்பாளர். அவர் பெயர் இராஜரத்தினம். சுவாமிகளிலே அளவிறந்த பக்தியுள்ளவர். சுவாமிகளின் முழுத் தோற்றத்தை ஓவியமாகத் தீட்டுவித்துத் தனது தாபனத்தில் வைத்திருந்தார். அப்படம், சுவாமிகளின் வடிவத்தைத் தத்ரூபமாகக் காட்டுகிறதா

என்பதை அறிவதற்காக 40 ஆண்டுகட்கு மேலாகச் சுவாமிகளில் ஈடுபாடுடைய கந்தர்மடம் வீரசிங்கம் என்பவரை அழைத்து வந்து படத்தைக் காட்டினார். எல்லாம் மிகப் பொருத்தம். ஆனால் உடைதான் காவிநிறமாய் அமைந்திருக்கிறது. சுவாமிகள் வெண்மையான ஆடைதான் அணிவார் என்று சொல்லி மனத்துயருடன் சென்றுவிட்டார். அடுத்தநாட் காலை சுவாமிகள் வீரசிங்கம் அவர்களின் வீட்டுக்குக் காவி படிந்த வேட்டியுடனும் சால்வையுடனும் சென்றார். இஃது அற்புதமோ அதிசயமோ என்று மெய்மறந்தார் அன்பர் வீரசிங்கம் அவர்கள்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் சுவாமிகள் நீண்டநாள் தொடர்புடைய அன்பர் ஒருவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தார். அன்பர் சுவாமிகளை வரவேற்று உபசரணை செய்தபின் அவசர வேலையாகச் சாவகச்சேரி செல்வதாயும், நின்று உணவருந்திச் செல்லும்படியும் வேண்டினார். சுவாமிகள் சம்மதித்தபின் சயிக்கிளிற் சாவகச்சேரி சென்றார். நாவற்குழியிலே உப்புக் கடலின் மேல் அமைந்திருக்கும் பாலத்தில் அவர் சயிக்கிளிற் செல்லும்போது சுவாமிகள் கடலிலே முழங்காலளவு தண்ணீரில் நின்று கால் கழுவிக் கொண்டிருந்தார். அன்பர் சயிக்கிளை விட்டிறங்கி "சுவாமிகளும் வந்துவிட்டீர்களா?" என்று கேட்டார். "ஓம் நாங்களும் உங்களுடன் வந்துவிட்டோம்" என்று கூறினார்கள் குருதேவர். அன்பர் சுவாமிகளிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றார் காரியமும் வெற்றி.

மறவன்புலோவில் சின்னத்தம்பிச் சுவாமிகளின் சமாதியில் இரு பெண்கள் இருந்தார்கள். ஒரு அம்மா வெளியிலே செல்லும்போது கஞ்சியை வடித்துக் கன்றுக்குட்டிக்கு வையென்று சொல்லிச் சென்றார். அவர் சொன்னபடி கஞ்சியை வடித்து முடியும் நேரம், சுவாமிகளும் அங்கு சென்றார். சுவாமிகளுக்குக் கொடுப்தற்காக அந்த அம்மா கஞ்சியைக் கொண்டு வந்தார். பசுக்கன்றுக்குரிய கஞ்சி எனக்கு வேண்டாம். கன்றுக்கே வையுங்கள் என்று மறுத்துச் சென்றுவிட்டார்.

கமக்காரர் ஒருவர் பெரிய குடும்பஸ்தர். அவருடைய தோட்டத்துக்கு அதிகாயிற் சென்று மத்தியானம் வரை நடந்து திரிந்தார் சுவாமிகள். அடுத்த மூன்றாண்டுகளாக வெங்காய விளைச்சல் எல்லையில்லை.

சுவாமிகளிடம் திருவடி தீட்சைபெற வேண்டுமென்று ஒருவருக்கு நீண்டநாள் விருப்பம். அவரைத் தேடிச் சென்று "எம்பெருமான்

சொல்லுகிறார் உங்களுக்குத் திருவடி தீட்சை செய்யும்படி" என்று கூறி திருவடி தீட்சை செய்தார். இன்னோரன்பருக்குக் கனவிலேயே திருவடிதீட்சை அளித்தார்.

அன்பர் இராசரத்தினம் சுவாமிகளுக்கோர் குடைஅன்பளிப்புச் செய்ய வேண்டுமென்ற காதலோடு நீண்டநாட்களாக ஓர் புதுக்குடை வாங்கி வைத்திருந்தார். மகாசமாதியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர்அன்பர்களோடு மோட்டாரில் அவருடைய வீட்டுக்கு வந்துகுடையையும் எடுத்துக் கொண்டு வா என்று சொன்னார். சொக்கிப் போன இராசரத்தினம் புதிய குடையுடன் காரில் ஏறினார். அன்று பூராவும் பல இடங்கட்கும் கூட்டிச் சென்று மாலையில் அன்னாரின் இல்லத்திலவரை விடும்போது தனது கையிலிருந்த பழைய குடையைக் கொடுத்துவிட்டுப் புதிய குடையைப்பெற்று அருளாசியும் வழங்கினார்கள்.

இவ்வாறு அற்புதம் நிறைந்த சுவாமிகள் ஒருமுறை திருக்கேதீஸ்வரப் பெருமானைத் தரிசிசக்கப்போகும் வழியிலேதான் எம்பிரான் அவரிடம் வந்து தோற்றமளித்ததாயும், அன்றிலிருந்ததான் பக்தியும் - ஞானமும் - துறவும் தனக்க உதயமானதென்றும் சுவாமிகள் கூறிய திருவாக்கு எவ்வளவு புனிதமானது என்பதை நினைக்கும்போது புல்லரிக்கின்றது. திருவாசகத்தையே படியுங்கள் அதுவே வாழ்வுக்கு உறுதுணையென்றார். நாமும் அவர்களின் அடிச்சுவட்டில் நடந்து உய்வோமாக.

அப்பா இம்முத்திக்கு அழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே; செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறிலிவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்".

"கற்றாமனம் போல் கசிந்து கசிந்தேயுருகி
உற்றாசான் லிங்கம் உயர்வேடம் - பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவார் பார்".

- உண்மை விளக்கம்

குருநாதன் திருவடிகளே சரணம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பின்னிணைப்பு

கோண்டாவில் கந்தையா சுவாமி

வி. கந்தவனம்

கந்தையா சுவாமி கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே நடமாடித் திரிந்த ஆன்ம சுத்தர். தமிழீழ மண்ணைப் புனிதப்படுத்திய சித்தர்.

திருவாசகத்தில் உள்ள "சென்னிப்பத்து"ப் பாடல்களைக் கந்தையா சுவாமி அடிக்கடி கோயில்களிலும் பிறஇடங்களிலும் பாடி உவந்ததாக அன்பர்கள் கூறுவர். சென்னிப்பத்திலே "சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ் செய்வான்" என்று பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

சித்திகள் கைவரப் பெற்றவர்கள் சித்தர் எனப்படுவர். சித்திகள் எட்டு வகைப்படும். கீர்த்தித் திருவகவலில் மணிவாசகப் பெருமான் "அட்டமா சித்தியருளி" என்று பாடுகின்றார். அட்டமா சித்திகளாவன.

அணுவாதல் - உயிர்போலாதல்
மேருவாதல் - நன்று பெருத்தல்
பளுவாதல் - நன்று கனத்தல்
எளிதாதல் - கனமின்மையாதல்
காட்சியாதல் - நினைத்த இடத்தில் தோன்றுதல்
இன்பமெய்தல் - விரும்பிய இன்பத்தைப் பெறுதல்
(பிராகாமியம்)
பதியாதல் - கடவுளாதல்
தன்வயப்படுதல் - யாவரும் வணங்கி நிற்றல்

இச்சித்திகளைக் கடும் நோன்பு இருந்து பெறுதல் வேண்டும். நோன்பு யோகநிலையுடன் கூடியது. யோகம் ஆன்மா பதியை அடைவதற்கு உதவியாகவுள்ள நாற்படிகளுள் மூன்றாவது சரியை கிரியை ஆகிய படிகளைக் கடந்து யோகநிலையில் நிற்பவர்கள் அடுத்த படியாகிய மெய்ஞ்ஞான நிலைக்குத் தம்மைத் தயார்படுத்துகையில் அசாதாரண சித்திகள் கைகூடுகின்றன.

தமிழ் உலகச் சித்தர் வரலாறு திருமூல நாயனாருடன் தொடங்குகின்றது. அவருக்கு முன்சித்தர்கள் வாழ்ந்துள்ளனரேனும் அவர்கள் பற்றிய ஆதாரபூர்வமான விவரங்கள் கிடைப்பதற்கில்லை.

திருமூலர் ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரம் என்னும் ஞானநூலை உலகுக்கு அளித்த தவச்செல்வர்.

சித்தர் பாடல்கள் என்ற தொகுப்பிலும் பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், குதம்பைச் சித்தர் முதலாய பல சித்தர்களின் ஞானவெளிப்பாட்டுக் கருத்துக்களைப் படித்துப் பெயன்பெறலாம். சித்தர்கள் ஞானோபதேசிகளாகவன்றி , சமூக சீர்திருத்தவாதி களாகவும் சித்த வைத்தியர்களாகவும் விளங்கியுள்ளனர்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையின் முன்னோடியாகக் கொள்ளப்படுபவர் கடையிற் சுவாமிகள். அவருக்கு முன்பும் பல சித்தர்கள் இருந்துள்ளனர் எனக் கருதுவாரும் உள்ளனர். கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணம் நீராவியடியைச் சார்ந்தவர். அவரது சீடரில் ஒருவர் செல்லப்பாச் சுவாமிகள், செல்லப்பாச் சுவாமிகளின் பார்வை ஒளியினால் பக்குவம் பெற்று யோகியானவர் கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள்.

சிவயோக சுவாமிகளின் பெருமையும் அவர் தொண்டுகளின் அருமையும் சொல்லி முடியா. தன் அருள் நோக்கினால் மேன்மைகொள் சிவநெறியை உலகமெலாம் பரவும்வகை செய்தவர் அவர். அவரது தலையாய சீடர்களாகிய கந்தசாமி (சோல்பரிப் பிரபுவின் மகன்), கௌரிபாலா (யேர்மன் சுவாமி), நரிக்குட்டி (அவுத்திரேலியா), சுப்பிரமணிய சுவாமி (ஹவாய்) முதலியோர் இன்று உலகெங்கணும் சிவயோகஞான விளக்கங்களைப் பரப் பிவருகின் றார்கள். வெளிநாட் டவர் களன் றியும் சிவயோகசுவாமிகளின் அருட்பார்வையால் சித்தம் தெளிந்த தமிழ் அடியார்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். அவர்களில் ஒருவர் கந்தையா சுவாமி.

கந்தையா சுவாமி எங்கு நோன்பிருந்தார், எத்தகைய சித்திகளைப் பெற்றிருந்தார் என்பன போன்ற விவரங்கள் எவருக்கும் தெரியா. பொதுவாகச் சித்தர்கள் தம்மைப் பற்றி அதிகம் பேசுவதில்லை. அதனால் அவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை அவர்களுடன் தொடர்புடையவர்கள் மூலமாகவே அறியவேண்டியிருக்கின்றது. கோண்டாவிலைச் சேர்ந்த அன்பர் வித்தியானந்தன் அவர்கள் சில விவரங்களைக் கூறினார்.

கந்தையா சுவாமி ஓர் இடத்தில் இருப்பவர் அல்லர். ஊர் ஊராகச் சுற்றுபவர். "ஏழு ஊர் சுற்றுபவர்" என்று அவருக்கு ஒரு பட்டம்.

எந்நேரமும் அவரது கையில் ஒரு குடை இருக்கும். அதனாற் "குடைச் சுவாமி" அவருக்கு ஆகுபெயராயிற்று. அவர்

கொண்டுதிரியும் குடைக்குள்ளேதான் அவரது சக்திகள் அனைத்தும் அடக்கமோ என ஐயப்பட்டவருமுளர். குடையை அவர் விரித்துப் பிடித்துக்கொண்டு திரிவது குறைவு. அதனை ஒரு குறியீடாகவே அவர் வைத்துக் கொண்டார் போலும். அதனால் "திருவருளாகிய குடையைப் பிடித்தால் தீவினைகள் வந்தடையா" என்றும் உள்ளத்தைக் குடைந்து பார்த்தால் உண்மைப்பொருள் விளங்கும் என்றும் மக்களுக்கு உணர்த்தவே அவர் குடையைக் கைக்கொண்டிருத்தல் வேண்டும்.

வாகனம் வைத்திருக்கும் அன்பர்கள் அவரை வழியிலே கண்டால் ஏற்றிச் செல்ல விரும்புவதுண்டு. ஆனால் சுவாமி வாகனங்களில் ஏறமாட்டார். ஒருமுறை ஓர் அன்பர் அவருக்கு உதவ விரும்பி வில்லங்கப்படுத்தித் தனது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றார். சுவாமி அப்படிச்செல், இப்படித் திரும்பு என்று செல்ல வேண்டிய இடத்தைச் சொல்லாமல் வழியைமட்டும் காட்டிக்கொண்டிருந்தார். இடைவழியில் பெற்றோல் முடிந்துவிட்டது என்பதை உணர்ந்த சாரதி தயக்கத்துடன் அதனைச் சுவாமிக்குத் தெரிவித்தார். சுவாமி "தொடர்ந்து ஓடு" என்று கட்டளை இட்டார். பெற்றோல் இல்லாத வாகனம் தொடர்ந்து ஓடிற்று.

இவ்விதம் தேவை கருதிச் சில அதிசயங்களைக் கந்தையா சுவாமி செய்திருக்கின்றார். மற்றும்படி பெரும் சித்துவிளையாட்டில் அவர் ஈடுபட்டதில்லை. சித்தர்கள் தமது சக்திகளை மெய்ஞ்ஞானப் படியை எய்துதற்கே பிரயோகிப்பது வழக்கம். மெய்ஞ்ஞான இன்பத்தில் நாட்டமுள்ளவர் அதையன்றி வேறெதையும் காணார். எனினும் அஞ்ஞானிகளுக்கு அருளும் வண்ணம் இறைவன் சித்தர்கள் மூலம் சில சமயங்களில் அற்புதங்கள் செய்வதுண்டு என்பதையும் நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

அஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானத்தை வேண்டி நிற்கும் சித்தர்களை அறியமாட்டார்கள். சித்தர்களின் போக்கும் நடையும் உலக வாழ்வுக்கு ஒவ்வாதவையாக இருக்கும். நேரத்துக்குச் சாப்பிடமாட்டார்கள். ஆடம்பரமான ஆடைகளை அணிய மாட்டார்கள். வெயில் மழை அவர்களை ஒன்றும் செய்வதில்லை. நோய் துன்பம் வாட்டுவதில்லை. சடங்குகள் சம்பிரதாயங்களைப் பேணமாட்டார்கள். வீடு, வாசல், பொருள் பண்டம், பிள்ளை குட்டி ஆதியாம் பந்த பாசங்களைக் கடந்த ஆனந்தத்தில் நீந்தித் திரிபவர்களைப் "பைத்தியங்கள்" என்று அஞ்ஞானிகள் பரிகசிப்பதுண்டு.

எனினும் கந்தையா சுவாமியை இனங்கண்டு அவருக்கு உரிய மதிப்பை அளித்த அடியவர்கள் பலர். அவர்களில் ஒருவர்

கோண்டாவில் அரிசி ஆலை முதலாளி ஆசைப்பிள்ளை (சரவணமுத்து) என்பவர். கந்தையா சுவாமி 1978ல் சமாதி அடைந்ததைத் தொடர்ந்து ஆசைப்பிள்ளை அவர்கள் கோண்டாவில் மக்களின் நல்லாதரவுடனும் பிற கிராம மக்களின் உதவியுடனும் கந்தையா சுவாமிக்குச் சமாதி ஒன்று அமைத்திருக்கின்றார். கோண்டாவில் பிள்ளையார் கோயிலில் மாசி மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் அன்னதானம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. அப்பணி இன்றுள்ள போர்ச்சூழலில் அங்கு தடைப்பட்ட காரணத்தினால் இங்குள்ள சுவாமியின் அன்பர்கள் கந்தையா சுவாமி குருபூசையையும் அன்னதானத்தையும் தொடர்ந்து நடத்த முன்வந்திருப்பது தெய்வசித்தமேயாம்.

குடைச்சுவாமியைக் குருவாகக் கொண்டவர்க்குக் குறையொன்றும் இல்லை. இறைவன் குருவடிவில் எழுந்தருளி அவ்வப்போது அடியார்களுக்கு அருள்பாலிக்கும் இயல்பினன்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

கந்தையா சுவாமி சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டதில்லை. எனினும் சில நற்பணிகளை மற்றவர்களைக் கொண்டு செய்வித்திருக்கின்றார். அவர் அடிக்கடி அடியவருக்கு அருளிய வாக்கு "அருள்பார் அருள்பார் அருள் தெரியும்" என்பது. அருளைத் தேடினாலே அது கிடைககும் என்பது இதன் பொருள். அவர் வாக்கின் வண்ணம் யாமும் அருளைத் தேடிப் பெறுவோமாக!


பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து பார்ப்பான் எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடஞ் செய்வான்
எத்த னாகிவந்து இல்புகுந்து
எமையாளுங் கொண்டு எம்பணி கொள்ான்
வைத்த மாமலர்ச் சேவைடிக்கண்
நம் சென்னி மன்னி மலருமே.


✸ *இது கனடாவில் முதன்முறையாக 3-3-1996 ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோ ஐயப்பன் ஆலயத்தில் நடத்தப்பெற்ற குடைச்சுவாமியின் விழாவில் நிகழ்த்திய தலைமையுரை.*

இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

தரிசனம்	ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
அர்ச்சனை மாலை	ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர்	ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
திருமுறைக் கதைகள்	ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
முத்தான தொண்டர்	கவிஞர். வி. கந்தவனம்
புதிய சைவ வினாவிடை	கவிஞர். வி. கந்தவனம்
தங்கம்மா நான்மணிமாலை	கவிஞர். வி. கந்தவனம்
சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள்	
பன்னிருமாத நினைவுகள்	ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
கனடாவிற் சைவ சமயம்	கவிஞர். வி. கந்தவனம்
ஒலியிழை நாடாக்கள் சமய வாழ்க்கை சைவத்தின் பெருமை	ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்

குறிப்பு: 58ம் பக்கத்தில் உள்ள படம்
கோண்டாவில்
சரவணமுத்து(ஆசைப்பிள்ளை) அவர்கள்





ஸ்ரீ அற்புத நர்த்தன வினாயகர் ஆலயம்
கோண்டாவில் கிழக்கு
பலாலி வீதி, கோண்டாவில்

Viveka Printers